# தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும்

ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியர் கூறும்
# உள்ளுறையும் இறைச்சியும்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
பதிவு அலுவலகம்
33, திருமலை நகர் இணைப்பு, பெருங்குடி, சென்னை 600096
இருப்பிடம்
தமிழூர், அத்தியூற்று-627808.

வே முத்துசாமி அய்யர் நினைவு அறக்கட்டளைச்
சொற்பொழிவு—வெளியீடு 1.

உலகத் தமிழ்க் கல்வி இயக்க அறக்கட்டளைச் சொற்
பொழிவு—வெளியீடு 1.

---

வெளியீடும் உரிமையும் : உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை-6000 096.

முதற்பதிப்பு: நவம்பர் 1985

விலை: ரூ. 10-00

Tolkāppiyar Kūrum Uḷḷuraiyum Iṟaicciyum

Tamil

**A. SIVALINGANAR**

First edition

21 × 14 cms

10 pt. letters

Pages 92 + X

Section binding

Jayasree Printers 1, Sundareswarar koil street,
Royapettah, Madras-600014.



திராவிட கவிமணி வே. முத்துசாமி அய்யர்

ஆங்கிலத்திற் சீர்த்த அறிவோன் தமிழ்க்கடலில்
ஈங்குளத்திற் றோய்ந்துசிறப் பெய்தியோன்- ஓங்குந்
திருமுத்து சாமிச் செழுங்கவிக்குத் தூய
பெருமுத்து சாமியமென் பேம்.

—மகாவித்துவான் ரா. ராகவையங்கார்

# திராவிட கவிமணி வே. முத்துசாமி ஐயர் நினைவு அறக்கட்டளை

கவிஞர் மு. கோ. ராமன்

திரு.வே. முத்துசாமிஐயர் 2-11-1884-இல் தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியைச் சார்ந்த அரங்கநாதபுரம் கிராமத்தில் பிறந்தார்.

மிக இளமையிலேயே தந்தையை இழந்தார். இவர் தாயார் இவரை நல்ல முறையில் வளர்த்துக் கல்விபெறவும் வாய்ப் பளித்தார்.

மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வியைச் சிறப்புற முடித்துப் பிறகு 1903-04-இல் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் எப். ஏ. பயின்றார். அப்போது இவருக்குத தமிழ் ஆசிரியராக விளங்கியவர் பிச்சை இப்ராகீம் புலவராவார். அவரே இவருக்குத் தமிழச் சுவையை உணரச் செய்தவராவார். இவர் எப். ஏ., மாணாக்கர்களுக்கு மதுரைத் தமிழச சங்கம் நடத்திய தேர்வில் முதல் நிலையில் தேர்ச்சிபெற்று மதுரைத் தமிழ்ச்சஙகத் தங்கப் பதக்கம் பெற்றார்.

1905-06-இல் சென்னை மாநிலக் கல்லூரியில் பி. ஏ., படிக்குயபோது டாக்டர் ஐயரவர்களிடம் தமிழ படிக்கும் பேறு இவருககுக் கிடைத்தது. பிச்சை இப்ராகீம் புலவர் தமிழ்ச் சுவையை உணரச் செய்தார். டாகடர் ஐயர் தமிழ்ச்சுவை உணர்வு இவர்பால் நிரந்தரமாக இருக்கச் செய்தார். பி. ஏ., கணிதத்திலும், தமிழிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்த தால், அக்காலத்தில பொறியியல் துறையில் மேற்கல்வி பெற்று வாழவில் சிறந்த நிலைபெற வாய்ப்பு இருந்தும் அதைவிட்டு சென்னையில் பிபின்சந்திரபால் தேசிய உணர்வுச் சொற்பொழிவு களில் ஈடுபட்டும், கோபால கிருஷ்ணகோகலே இளைஞர்களை ஆசிரியப் பணியில் சேர அழைத்ததில் ஈடுபட்டும் ஆசிரியத் தொழிலில் 1907-இல் சேர்ந்தார். 1909-10-இல் (பிற்காலத்து நம் நாட்டு ஜனாதிபதியாக விளஙகிய) டாக்டர் சர். எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களுடன் எல். டி. பயின்றார்.

1912-இல் எம். ஏ., பரீட்சை தனியாக எழுதித் தமிழ— மலையாளம் ஆகிய மொழிகளில தேர்ச்சி பெற்றார.

அப்போது இலங்கையைச் சார்ந்த ஸ்ரீகாந்த முதலியார் ஏற்படுத்தியிருந்த ஆய்வுப் போட்டிக்குத் தொல்காபபியம்— பொருளதிகாரம—ஆராய்ச்சி என்ற கட்டுரை அனுபபினார். அந்தப போட்டியில் பரிசு இவர் பெறவில்லையாயினும், ஸ்ரீகாந்த

முதலியாரின் பாராட்டுதலைப் பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கம் இந்த ஆராய்ச்சியைத் தங்கள் செந்தமிழில் வெளியிட்டது. சென்னைப் பாட/திட்டக்குழு இந்த ஆராய்ச்சியை பி. ஏ., வகுப்புக்குப் பாடமாக வைத்தது. பரிசு பெற்ற கட்டுரை நூலாக வருவதற்கு முன்னே இவர் கட்டுரை நூலாக வெளிவந்து பாட மாகும் சிறப்பைப் பெற்றது. தமிழில் தொல்காப்பியம் பொரு ளதிகாரம் பற்றி முதன் முதல் வந்த ஆய்வு நூல் இவர் நூலாகும்.

டி. இராமகிருஷ்ணபிள்ளை என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பத்மினி என்ற வரலாற்று நாவலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்த நாவல் எப். ஏ., மெட்ரிகுலேஷன் வகுப்புக் களுக்குப் பாடமாக வைக்கப் பெற்றது.

முத்துசாமி ஐயரை நேரில் பார்க்காத கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் ஒரு கடிதத்தில் ''தங்களை நான் இதுவரை நேரில் பார்க்கவில்லை. அதனாலென்ன? தங்கள் பத்மினியைப் படித்துமிருக்கிறேன், படிப்பித்துமிருக்கிறேன். அறிவுலகில் அனைவரும் சகோதரர்களே'' என எழுதியுள்ளார்.

1912-இல் எம். ஏ. தேர்ந்தபிறகு சென்னை அரசாங்கக் கல்வித் துறையில் பால பாடசாலைப் பரிசோதகராகச் சேர்ந் தார். அந்த சமயம் ஆரம்பக் கல்வி முறைபற்றி விரிவான பாடத் திட்டம் ஒன்றை அரசுக்குச் சமர்ப்பித்தார். அரசும் இவர் பாட திட்டத்தை அங்கீகரித்தது. இந்த பாடதிட்டப் பிரதி இப்போது கிடைக்கவில்லை. ஒருகால் கல்வித்துறை இயக்குநர் அலுவலகத் தில் பழைய ஆவணங்களில் இருக்கலாம்.

பால பாடசாலைப் பரிசோதகராக இருந்ததால் சிறுவர் களுக்குப் பயிற்சிக்கு உதவக் 'கதையும் பாட்டும்' என்ற நூலை வழங்கினார்.

பால பாடசாலைப் பரிசோதகராக இருந்தாலும் உயர்கல்வி பற்றியும் இவர் சிந்தித்தார். அந்தக் காலத்தில் உயர் கல்வியில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. எட்டாம வகுப்புக்கு மேல் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்திலேயே போதிக்கப்பட்டன. அதை இவர் கடுமையாக எதிர்த்துக் குரல் எழுப்பினார் 1918-இல் அன்னி பெசண்ட் அம்மையார் ஹோம்ரூல் இயக்கச் சார்பில் மதுரையில் நடந்த கல்வி வாரக் கொண்டாட்டத்தில் 'தமிழ மொழியும் உயர்தரக் கல்வியும்' என்ற தலைப்பில் தமிழினால் உயர்தரக் கல்வியை அளிக்க முடியும், அளிக்க வேண்டும் என்று பேசினார். அச்சொற்பொழிவு செந்தமிழ் இதழில் வெளிவந்துள்ளது.

அன்னிய ஆட்சியில் அடிமைப்பட்ட நிலையில் இவர் குரல் எடுபடவில்லை. மாறாக எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கவும் செய்தது. இவருக்கு உத்யோக உயர்வுக்குரிய சமயத்தில் இந்தச் சொற்பொழிவைச் சுட்டி இவருக்கு வேலை உயர்வு மறுக்கப் பட்டது. இந்நிலையை இவர் மகிழ்வோடு ஏற்று இறுதிவரை பள்ளிக்கூடப் பரிசோதகராகவே இருந்து ஓய்வு பெற்றார்.

1906-07-இல் டாக்டர் உ. வே. சா. அவர்களால் தமிழ் உணர்வு இவரிடம் மேலும் மேலும் உரம்பெற்றது. தமிழில் கவிதையாக்கும் புலமை பெற்றிருந்தமையால் இவர் அவ்வப் போது பாடிய பாடல்கள் பலவாகும். இவர் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குருவைத் தம் ஞானகுருவாக ஏற்று அவர்மீது அன்புவிடு தூது, ஆற்றுப்படை, பாதுகை நூற்றெட்டு முதலிய சிற்றிலக்கியங்களைப் புனைந்து சங்கராசாரியார்பால் 'கஜா ரண்ய திராவிட கவிமணி' என்ற விருதும் பெற்றார்.

ஓய்வுபெற்று, கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்ட போதும் தமிழை மறவாமல் பேணி வளர்த்ததுடன் தம் கடைசிப் புதல்வனாம் எனக்குத் தாமே தமிழைப் போதித்துத் தமிழ் உணர்வு பரம்பரையாக வளர வழி செய்தார். தமிழ் நாட்டில் இவர் தொடர்பு கொள்ளாத புலவர் எவரும் அக்காலத்தில் இல்லை. 'யாவையும் பாடிக் கோவை பாடு' என்ற பழமொழியை உணர்ந்து 'திருவள்ளுவர் ஒருதுறைக்கோவை' என்ற நூலை இவர் யாத்துள்ளார்.

இவ்விதம் இவர்பாற் பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் பெற்றிருந்த நன்றியால் 2-11-85-இல் இவர் 101ஆவது ஆண்டு நிறைவில் இவர் பேரால் நினைவு அறக்கட்டளை ஒன்றை உலகத் தமிழ்க்கல்வி இயக்கத்தில் இவர் புதல்வராகிய எளியேன் நிறுவ முன் வந்துள்ளேன்.

'திரு. வே. முத்துசாமி ஐயர் நினைவு அறக்கட்டளை' என்ற பெயருடன நிறுவப்பெறும் இவ்வறக்கட்டளையின் முதற் சொற் பொழிவு 2-11-85 அன்று தொல்காப்பியப் புலவர் திரு ஆ. சிவலிங்கனாரால் 'தொல்காப்பியர் கூறும் உள்ளுறையும்—இறைச்சியும்' பற்றியதாக அமைந்து நூலாக 2-11-85 அன்று வெளிவருகிறது.

இனி ஆண்டுதோறும் நவம்பர் மாதம் இரண்டாம் தேதி இவ்வறக்கட்டளையின் சார்பில் தக்கவர்கள் மூலம் சொற் பொழிவுகள் நிகழ்த்தப் பெற்று அவை நூலாக வெளிவரும்.

உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தின் சீரிய பணிகள் சிறப்பு மிக்கு ஓங்குக.

# பதிப்புரை

சு. ஆவுடைநாயகம் எம். எஸ்ஸி (விவசாயம்).,
தலைவர்,
உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை-600096.

உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தில் இதுவரை நான்கு அறக் கட்டளைகள் நிறுவப் பெற்றுள்ளன. அவற்றுள் முதல் அறக் கட்டளைச் சொற்பொழிவாகத் 'தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும்' என்ற சொற்பொழிவு அமைகிறது. தொல்காப்பியத்திலேயே நன்கு ஊறித் திளைத்த தமிழ்ப் பேராசிரியா திரு. ஆ. சிவலிங்கனார் அவர்கள் இந்தச் சொற் பொழிவினைச் செய்ய ஏற்றுக்கொண்டமைக்கு நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். அதோடு உரிய காலத்தில் அதை நூலாகவும் எழுதித் தந்தமை எங்களுடைய பேறாகும். தமிழுல குக்குத் 'தொல்காப்பியம் கூறும உள்ளுறையும இறைச்சியும்' என்ற நூலைத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

திரு. மு. கோ. ராமன் அவர்கள் தம்முடைய தந்தையார் உயர்திரு. வே. முத்துசாமி அய்யர் அவர்கள் பெயரால் இந்த அறக்கட்டளையை நிறுவியுள்ளார்கள். உயர்திரு முத்துசாமி அய்யர் அவர்கள், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் மாணாக்கர். அந்த பரம்பரையில் வந்தவர் திரு. மு. கோ. ராமன் அவர்கள், இவ்வறக்கட்டளையை அவர் நிறுவியதற்காக மிகவும் நன்றி உடையோம்.

உரிய காலத்தில் சிறப்புற அச்சிட்டுத் தந்த ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ் உரிமையாளர்க்கும் எங்கள் நன்றி.

அன்புள்ள
சு. ஆவுடைநாயகம்

# முன்னுரை

மயிலம், சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில் (1942-1971) பலமுறை தொல்காப்பியம் படிப்பிக்கும் பேறு வாய்த்தது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் வரும் உள்ளுறை இறைச்சிகளைப் பற்றித் தெளிவது அரிதாக இருந்தது. ஓரளவு தெளிந்த நிலையில் பயிற்றினேன். 1964-ல் செந்தமிழ் என்னும் திங்கள் இதழில் 'உள்ளுறையும் இறைச்சியும்' என்னும் தலைப்பில் தொடர் கட்டுரை எழுதினேன். இரண்டு இதழ்களில் வந்தது. இதழாசிரியர் கூட்டத்து முடிவின்படித் தொடர் கட்டுரைகள் வெளியிடுவது நிறுத்தப் பட்டமையின என் கட்டுரையும் வெளியிடப்படவில்லை. ஊக்கம் தளர்ந்தது. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் 1980-ல் வெளியிட்ட 'Papers on Tamil Studies' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலில் 'உள்ளுறை' என்னுந் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். அக்கட்டுரையும் போதுமான அளவில் இல்லையென உணர்ந்தேன். அதனால் விரிவாக எழுத நினைத்திருந்தேன். அந்நினைவினை நலம்பெறச் செய்தது உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்.

தமிழ் மொழியின் வளர்ச்சியில் ஆர்வம் மிக்க கவிஞர் மு. கோ. இராமன் அவர்கள், தம் தந்தையார் கஜாரணிய திராவிட கவிமணி வே. முத்துசாமி ஐயர் நினைவாக "வே. முத்துசாமி அய்யர் நினைவு அறக்கட்டளை" என ஓர் அறக்கட்டளையை உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தில் நிறுவினார்கள். அய்யரவர்கள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் புலமை வாய்ந்தவர்கள். பல நூல்கள் எழுதியவர்கள். தமிழில் முதல் முதலில் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' எனும் நூல் எழுதிக் கல்லூரி மாணவர்க்குப் பயன் பெறச் செய்தவர்கள. அதனால் முதலாம் அறக்கட்டளைச் சொற்பொழிவு தொல்காப்பியத்திலேயே அமைய வேண்டும் என்பது கவிஞர் இராமன் அவர்களின் எண்ணம். அதனை உலகத் தமிழ்க்கல்வி இயககத்தாரிடம் தெரிவித்தார்கள். இயக்கத்தாரும் ஒப்பினர். அதனைக் கவிஞர் என்னிடம் கூறி முதற் சொற்பொழிவை ஆற்ற வேண்டும் என்றனர்.

இயக்கத்தாரின் கருத்தை, டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களிடம் கூறினேன். அவர்கள், "மிக நல்லது; உள்ளுறையும் இறைச்சியும் பற்றி ஒரு விளக்கம் தருக" என்றார்கள். அவர்கள் கூற்று, தானே உருளும் உருளையைக் குறுந்தடி கொண்டு அடித்தாற்போல ஊக்கமளித்தது. அதன் பயனே "தொல்காப்பியர் கூறும் உள்ளுறையும் இறைச்சியும்" என்னும் இந்நூல். அன்னார்க்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூலில் சொல்தரும் குறிப்புப் பொருள், உள்ளுறை, இறைச்சி, அவை பற்றிப் பிறர் கூறுவன, அவை அணியின்பாற் படுமா?, அவை வடமொழித் தொனியாகுமா? என்பன பற்றி ஓரளவுக்குத் தெளிவாக ஆராயப்பட்டுள்ளன.

நவில்தொறும் நூலநயம் காண்பதுபோல, உள்ளுறையும் இறைச்சியும் நினையுந்தோறும் இன்பம் ஊட்டுவன; அறிதோறு அறியாமை காணுமாறுபோலப் புதிய கருத்துகளையும் தருவன. அதன் பயனாக 1980-ல் யான் எழுதிய 'உள்ளுறை' என்னும் கட்டுரையில் உள்ள கருத்தும் இந்நூலில் மறுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகள் அறிஞர்கட்கு ஏறபதும் மறுபபதுமாக அமையினும் ஆய்வுக்குரியனவாக அமையின் அதுவே யான் பெறும் பேறாகும்.

'வே. முத்துசாமி அய்யர் நினைவு அறக்கட்டளை'யின் முதற் சொறபொழிவை எனக்களித்துப் பெருமை பெறச செய்ததோடு அதை நூல் வடிவிலும் கொணர்ந்த உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தார்க்கும், அறக்கட்டளை நிறுவிய கவிஞர் மு. கோ. இராமன் அவர்கட்கும் நன்றியுடையேன்.

உள்ளுறை இறைச்சி பற்றிய கருத்துகளுக்கு அவ்வப்போது உசாத்துணையாய் இருந்தவரும், என்னைத் தம்மிடமே இருத்திப் புரந்து வருபவரும் ஆம டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர் கட்கும்,

வடமொழித் தொனிபற்றிய சில விளக்கங்களை அறிவித் துதவிய பேராசிரியர், பெ. திருஞானசம்பந்தம் பிள்ளையவர்கட் கும, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வாளர் டாக்டர் ர. விசயலட்சுமி அவர்கட்கும்,

பாணடிச்சேரியில பிரஞ்சு நிறுவனத்தில் (INSTITUT FRANCAIS) பணிபுரிபவரும், டாக்டர் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் 'தொனிவிளக்கு' என்னும் நூல் தந்துதவியவரும் ஆம் பேராசிரியர், கோபாலய்யர் அவர்கட்கும்,

வேண்டும நூல்கள் உதவிய புலவர், க. வா. சச்சிதானந்தம் அவர்கட்கும்,

மயிலம் தமிழக் கல்லூரி நூல் நிலையத்தார்க்கும், சென்னை மறைமலையடிகள் நூல நிலையத்தார்க்கும், உலகத்தமி ழாராய்ச்சி நிறுவன நூல் நிலையத்தார்க்கும்,

சிறப்புற அச்சேற்றிய ஜெயஸ்ரீ பிரிணட்டர்ஸ உரிமை யாளர்க்கும பெரிதும் நன்றியுடையேன்.

சென்னை
2-11-1985

ஆ. சிவலிங்கனார்
மயிலம்.

# பொருளடக்கம்

1. குறிப்பு
சொல்லும் பொருளும், குறிப்புப்பொருள் 1-3, தொடர்ப் பொருள் தரும் குறிப்புப் பொருள் 3.

2. உள்ளுறை
உள்ளுறை, உள்ளுறை நிலைக்களன 4-5; ஒரு வினாவிடை 5; உள்ளுறை-இலக்கணம் 6; உள்ளுறை அகப்பாடலுக்கே யுரியது 6-9; உள்ளுறை ஐந்து 9; உடனுறையுள்ளுறை-இளம்பூரணர் 9-11; நச்சினார்க்கினியர், ஆய்வு 11-12; உவம உள்ளுறை அல்லது உள்ளுறையுவமம்-இளம்பூரணர் 12-13; நச்சினார்க்கினியர் 13-14; ஆய்வு 14-15; சுட்டு உள்ளுறை-இளம்பூரணர் 15; நச்சினார்க்கினியர்15-18; ஆய்வு 18-20; நகையுள்ளுறை-இளம்பூரணர் 20-21; நச்சினார்க்கினியர் 21; ஆய்வு 21-23; சிறப்பு உள்ளுறை-இளம்பூரணர் 24; நச்சினார்க்கினியர் 24-25; ஆய்வு 25-28; தொகுப்புரை 29..

2. இறைச்சி
இறைச்சி கருப்பொருள் 30-32; இறைச்சி-பெயர்க்காரணம் 32-33; இறைச்சி-பொருள் வளர்ச்சி 33-34; இறைச்சியின் இலக்கணம் ஆசிரியர் கூற்று 34; இளம்பூரணர் 35; நச்சினார்க்கினியர் 35-38; ஆய்வு 38; இறைச்சியிற் பிறக்கும் பொருள் இளம்பூரணர் 39-40; நச்சினார்க்கினியர் 40-44; என் கருத்து-இறைச்சி 44-46; இறைச்சியிற் பிறக்கும் பொருள்-49;

4. உள்ளுறையுவமமும் இறைச்சியும் பற்றிப் பிறர் கூறுவன
நடபியாப்பொருள் உள்ளுறை 49; இறைச்சி 50; மாறனலங்காரம் உள்ளுறை 50; இறைச்சி 50;51; விசுவநாத சாஸ்திரியார் 51; ந- சுப்பையா பிள்ளை 51-52; லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் 52; வே. வேங்கடராசுலு ரெட்டியார் 52-53; தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 53-55; ரா. சீநிவாசன் 56, சோம-இளவரசு 56; ஔவை சு. துரைசாமிப் பிள்ளை 56-58; இரா. தண்டாயுதம் 58; பொ. வே. சோமசுந்தரனார் 59; சு. குமாரசாமி ஆச்சாரியார் 59-61; பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் 61-66; உள்ளுறை ஒட்டணியின் பாற்படுமா 67-68; உள்ளுறையுவமம்-உவமப்போலி 68-69; இளம்பூரணர் 69-70 பேராசிரியர் 70-71; ஆய்வு 71-73;

5. தொனி–உள்ளுறை–இறைச்சி
தொனிநூல் 73-74; தொனியிலக்கணம் 74-76; உள்ளுறை-இறைச்சியின் சிறப்பு 76-79; தொகுப்புரை 80;

6. முடிப்புரை
ஒற்றுமை, வேற்றுமை, உள்ளுறையுவமம்-இறைச்சிச் 80-81.

துணை நூல்கள், 82-83;

உள்ளுறை (வந்த சங்க இலக்கியங்கள்) 83-90.

# சுருக்க விளக்கம்

அகநா, அகம்-அகநானூறு
அகத்-அகத்திணையியல்
உவம-உவமவியல்
எழுத்-எழுத்ததிகாரம்
ஐங், ஐங்குறு நூறு
கலி-கலித்தொகை
கற்பு-கற்பியல்
குறிஞ்சி-குறிஞ்சிக்கலி
குறுந்-குறுந்தொகை
சூ. சூத்திரம்
சொல்-சொல்லதிகாரம்
தண்டி-தண்டியலங்காரம்
தொல்-தொல்காப்பியம்
நற்-நற்றிணை
நன்-நன்னூல்
பக்-பக்கம்
புறநா-புறநானூறு
பொ-பொருளதிகாரம்
பொருள்; பொருளி; பொருளியல்
மாற-மாறனலங்காரம்

# தொல்காப்பியர் கூறும் உள்ளுறையும் இறைச்சியும்

## 1. குறிப்பு

### சொல்லும் பொருளும்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார் தொல்காப்பியர் (தொல். சொல். பெயரியல் 1). பொருள் குறியாத சொல் இல்லை என்பதற்காகப் பொருள் குறித்தன என்னாமல் 'பொருள் குறித்தனவே' எனத்தேற்ற ஏகாரம் இட்டுக் கூறினார். ஒவ்வொரு சொல்லும் தனித்தனியாகப் பொருளை வெளிப் படுத்தும். ஆனால் அச்சொல் தொடரில் வரும்போது தனக்குரிய பொருளை அப்படியே வெளிப்படுத்துவதும் தனக்குரிய பொருளளவில் நில்லாமல் வேறு பொருளை வெளிப்படுத்துவதும் உண்டு.

'புதுவை அழகிய நகர்' என்ற தொடரில 'புதுவை' என்பது ஊரைக் குறிக்கும். 'புதுவை திரண்டு வந்தது' என்ற தொடரில் 'புதுவை' என்பது அவ்வூர் மக்களைக் குறிக்கும். முன்னது வெளிப்படையாகத் தெரிவது. பின்னது திரளுவதும் வருவதும் ஊர்க்கு இல்லையாதலின் அவ்வூர் மக்களைக் குறிக்கும் என்பது குறிப்பாகத் தெரிவது. எனவே, சொல் தொடரில் வரும் போது பொருளை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ புலப்படுத்தும் என்பது பெறப்படும்.

### குறிப்புப் பொருள்

உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் நன்கு ஆராய்ந்த தமிழ் இலக்கண நூலார் குறிப்பாகப் பொருள் தருவனவற்றை வகைப்படுத்தினர். அவற்றுள் இலக்கண வரம்புக்கு உட்பட்டன வற்றைப் பெயர் கொடுத்துக்கூறி இலக்கண வரம்புக்கு உட் படாதனவற்றைப் 'பிற' என்ற சொல்லால் கூறிச் சென்றனர். நன்னூலாசிரியர் பவணந்தியார்,

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக் குறிப்பே
முதல் தொகைக் குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை

(நன்-269)

என்று குறிப்புப் பொருள் வகைகளைக் கூறினார்.

1. ஒன்று ஒழி பொதுச் சொல்: பல பொருளுக்குரிய பொதுச் சொல், ஒரு பொருளைவிட்டுப் பின்வரும் சொல்லால் வேறு பொருளை உணர்த்துவது. 'ஆயிரம் மக்கள் பொருதார்' என்பதில் ஆண்பெண் இருபாலார்க்கும் பொதுவாகிய 'மக்கள்' என்னும் சொல், பின்வரும் பொருதார் என்னும் வினைச் சொல்லால் பெண்பாலாரை விட்டு ஆண்பாலாரை உணர்த்தியது.

2. விகாரம்: இது பெரும்பாலும் செய்யுளில் வருவது. 'கரும்புவில்' என்பது 'கருப்பு வில்' என மெல்லெழுத்து வல்லெழுத்தாய் விகாரப்பட்டு வருவது.

3. தகுதி: ஒரு பொருளைக் குறிக்க அதற்குரிய சொல்லால் கூறுவதைவிட வேறு சொல்லால் கூறுவது நல்லது (தகுதியுடையது) என்று கூறுவது. செத்தாரைச் 'செத்தார்' என்ற சொல்லால கூறாமல் 'தூங்கினார்' என்று கூறுவது. 'தூங்கினார்' என்பது 'உறங்கினார்' என்னும் தன் பொருளை விட்டுச் 'செத்தார்' என்னும் பொருள் குறிப்பால் உணர்த்தியது.

4. ஆகுபெயர்: ஒன்றன்பெயர், அதனோடு தொடர்புடைய பிறிது ஒன்றற்கு ஆகிவருவது. 'விழா முடிவில் சுண்டல் கொடுத்தார்கள்' என்பதில் 'சுண்டல்' என்பது 'சுண்டுதல்' என்னும் தொழிலை உணர்த்தும். அது இங்கே சுண்டுதலைக் கொண்ட கடலைக்கு ஆகிவந்தது. சுண்டுதல் தொழில் அத்தொழிலையுடைய பொருளைக் குறிப்பால் உணர்த்தியது.

5. அன்மொழி: இரண்டு சொற்கள் சேர்ந்து அவற்றால் உணர்த்தப்படும் பொருளோடு அவற்றுக்குத் தொடர்பான வேறு பொருளை உணர்த்துவது. 'பொற்றொடி' என்பது பொன்னாலாகிய தொடியை உணர்த்தும். 'பொற்றொடி வந்தாள்' என்பதில் 'பொற்றொடி' என்பது பொன்னாலாகிய தொடியை அணிந்த ஒருத்தியை உணர்த்தும். 'வந்தாள்' என்னும் சொல்லால் 'ஒருத்தி' என்பது குறிப்பால் உணரப்பட்டது.

6. வினைக்குறிபபு: ஒரு சொல் பெயர்ச் சொல்போல் காணப்பட்டாலும் அது வினைச் சொல் என்பதைக் குறிபபால் உணர்வது. 'பொன்னன்' என்பது பொன் என்னும் பொருளடியாகப் பிறந்த பெயர்ச் சொல். அதுவே 'அவன் பொன்னன்'

என வரும்போது 'அவன் பொன்னையுடையவனானான்' என வினைச் சொல்லாக வருகிறது. 'பொன்னன்' என்பது 'அவன்' என்னும் சொல்லால் வினையாகிறது என்பது குறிப்பால் உணரப் பட்டது.

7. முதற்குறிப்பு: ஒரு செய்யுளின் அல்லது ஒரு தொடரின் அல்லது ஒரு கருத்தை விளக்கும் ஒரு பகுதியின் தொடர்ந்துள்ள இரண்டு மூன்று சொற்களை மட்டும் கூற, அவையனைத்தையும் குறித்துணர்வது. 'அகர முதல எனனும் குறள்' என்றால் 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே யுலகு' என்னும் குறள் முழுவதையும் கருதுவது. மற்றவையும் இப்படியே.

8. தொகைக் குறிப்பு: ஒரு எண்ணுத் தொகையைக் கூறிய மாத்திரத்தில் குறிப்பால் அதன்பொருள்களையுணர்வது. சைவசமய குரவர் நால்வர், ஆழ்வார் பன்னிருவர் என்றால் நால்வரையும் பன்னிருவரையும்உணர்வது 'சைவ சமய' என்னும் சொல்லாலும் 'ஆழ்வார்' என்னும் சொல்லாலும் குறிப்பாக உணர்வதாம்.

மேலே காட்டப்பட்ட மக்கள், கரும்பு, தூங்கினார், சுண்டல், பொறறொடி, பொன்னன், அகர முதல, நால்வர் ஆகிய சொற்கள், தத்தம் பொருள்களை விட்டுத் தத்தமக்குத் தொடர்பான வேறு வேறு பொருள்களைத்தந்தன. அவ்வாறு பொருள் கள் கேட்போனால் குறிப்பாக உணரப்படுதலின் அவை குறிப்புப் பொருள எனப்படும்.

தொடர்ப் பொருள் தரும் குறிப்புப் பொருள்

தனிச் சொல் தொடரில் வரும்போது தன்பொருளை விட்டு வேறு பொருளைக் குறிப்பால் உணர்த்துவது போலத் தொடர்ப் பொருளும் தன் பொருளை விட்டு வேறு பொருளைத் தருவ துண்டு.

ஒருவன் ஒருவனை வைதான்; வைதவனைப் பார்த்து, 'நாளை நீ என ஊர்ப் பக்கம வா; பார்த்துக் கொள்கிறேன்' என்றான் மறறவன். இத்தொடரில், 'நாளை நீ என் ஊரப்பக்கம் வந்தால் நின்னை நன்றாகப் புடைபபேன்' என்ற பொருள் இருத்தலைக் காணலாம். இத் தொடரின் நோக்கம் அதற்குள்ள பொருளில் அல்லாமல் வேறு ஒரு பொருளிலேயே அமைந்து கிடககிறது.

இப்படியாகச் சொல்லும் சொற்றொடரும் தம் பொருள் களை நேரடியாக வெளிப்படையாகத் தராமல் வேறு பொருள் களைத் தருமானால் அப்பொருள்களைக் குறிப்புப் பொருள் கள என்பர்.

# 2. உள்ளுறை

### உள்ளுறை

குறிப்புப் பொருள்களைச் செய்யுட்களில் கண்ட தமிழ் இலக்கண நூலார், சொற்குறிப்புகளை 'ஒன்றொழி பொதுச் சொல்' முதலியவாகப் பிரித்தனர். சொற்றொடர்க் குறிப்புகள் அளவிறந்தன வாதலின் பிரித்துக் காட்டவில்லை. என்றாலும் செய்யுள்களில்—அகப்பொருட் செய்யுள் புறப்பொருட் செய்யுள் என்னும் இரண்டு வகைகளில்—அகப்பொருட் செய்யுளில் வரும் தொடர்ப் பொருளில் உள்ள குறிப்புப் பொருளுக்கே 'உள்ளுறை' என்ற பெயர் வைத்தனர். அதற்கு இலக்கணமும் கூறினர். வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளின் உள்ளே உறையும் பொருள் உள்ளுறை ஆயிற்று.

### உள்ளுறை நிலைக்களன்

உள்ளுறையை அகப்பாடற்கே உரிமைப்படுத்தின தமிழ் இலக்கண நூலார், அகப்பாடலில் உள்ளுறையைப் புலவன் அமைக்க வேண்டுமானால் அதற்கு நிலைக்களம் என்ன என்பதையும் கூறினர். தொல்காப்பியர்,

> உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
> கொள்ளும் என்ப குறியுணர்ந் தோரே
>
> (தொல்.பொருள். அகத். 47)

என்று கூறினார். எனவே, உள்ளுறை என்பது, குறிஞ்சி முதலிய அகத்திணைப் பாக்களில் அமைக்கப்படும்போது அவ்வகத்திணைகளின் தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை நிலைக்களனாகக் கொண்டே அமைக்கப்பட வேண்டும் என்பதையறியலாம்.

> தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப
>
> (தொல். பொருள். அகத். 18)

எனக் கருப்பொருள்களைக் குறிப்பிட்டார் தொல்காப்பியர்.

### கருப்பொருள்—பெயர்க்காரணம்

மனிதன் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது உணவு. அதனால்தான் தெய்வத்தையடுத்து முதலில் 'உணா' என உணவை அமைத்தார் தொல்காப்பியர். அவ்வுணவு பெற்று நிறைவெய்திய பின்னர் அவன் வாழ்வு, பல்வகை நாகரிகம் பெற்றது. அவ்வுணவுக்கும் நாகரிகத்துக்கும் துணைபுரிவன அவனைச் சுற்றியுள்ள மா, மரம், புள் முதலியன. அவையாவும்

வாழ்வுக்குக் கருவாக அமைதலின் அவை 'கருப்பொருள்' எனப் பட்டன. கருப் பொருள் யாவும் மனிதனின் அனுபவப் பொருள் கள்—இன்பப் பொருள்கள். மனிதனின் அனுபவப் பொருள் களாகிய உணவு முதலியவற்றுடன் தெய்வத்தைக் கூறினார் ஆசிரியர். தெய்வத்தை முதலாவதாகவும் கூறினார். மனிதனின் பொறிபுலன்களால் நுகரப்படும் உணவு முதலியவற்றோடு பொறி புலன்களுக்கு அப்பாற்பட்ட தெய்வத்தைக் கூறினார்.* அதனால் தெய்வமும் பொறிபுலன்களால் நுகரப்படுவதாகவே அமையும். எனவே, மனிதன் வாழ்வுக்குக் கருவாக அமையும் தெய்வம் முதலியன கருப்பொருள் எனப்பட்டன எனலாம்.

என்றாலும், உலகில் நாம் பார்க்கும் உணவு, மா, மரம் முதலியவற்றைக் கருப்பொருள் என்னும் சொல்லால் குறிப்பிடு வதில்லை. அகப்பாடலில் வரும் உணவு, மா, மரம் முதலிய வற்றையே கருப்பொருள் என்னும் சொல்லால் குறிப்பிட்டனர் நூலார். உள்ளுறைக்குக் கருவாக அமைதலின் அவற்றைக் 'கருப் பொருள்' என்று குறிப்பிட்டனர். வாழ்வுக்குக் கருவாக அமையும் அவை அகப்பாடலில் வரும் உள்ளுறைக்குக் கருவாக அமைதலின் கருப்பொருள் எனபபட்டன.

ஒரு வினா விடை

மனிதனால் துய்க்கப்படும் பொருள்களுள் தெய்வத்தை நீக்கி மற்றைய கருப்பொருள்களை உள்ளுறைக்கு நிலைக்களனாக ஆசிரியர் கூறியது ஏன்?

உணவு முதலிய கருப்பொருள்கள் கண்ணுக்குப்புலப்படுவன. அவற்றின் தொழில்கள்—அவற்றால் நடைபெறும்—நடத்தப் பெறும் தொழில்கள் கண்ணுக்குப் புலப்படுவன. ஐம்பொறி களால் நுகரப்படுவன. ஆனால் தெய்வம் கண்ணுக்குப் புலப்படாதது; அதனால் நுகரப்படும் செய்தியும் புலப்படாதது; புலன்களால் உய்த்துணரப்படுவது. எனவே, வெளிப்படையாக அறியவராததாலும் ஞானிகளால் அல்லது மற்றவரால் அவ்வப் போது நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அனுபவிக்கப் பெறுவ தாலும் தெய்வக் கருப்பொருள் நிகழ்ச்சி வெளிப்படையாகநடை பெறாது. எனவேதான் தெய்வத்தை நீக்கி மற்றைய கருப் பொருள்களை உள்ளுறைப் பொருளுக்கு நிலைக்களன் என்றார் ஆசிரியர்.

---

* டாக்டர் வை. இரத்தினசபாபதி, திருமுறைத் தெளிவே சிவஞான போதம் (பக். 22) சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. (1981)

**உள்ளுறை—இலக்கணம்**

உள்ளுறையாவது யாது என்பதற்குத் தனியே இலக்கணம் கூறவில்லை தொல்காப்பியர். ஆனால் ‘உள்ளுறையுவமமாவது யாது’ என்பதற்கு,

> உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகஎன
> உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம் (அகத். 48)

என்று இலக்கணம் கூறினார். இதில் ‘ஒத்து’ எனும் சொல் உவமத்துக் குரியது. மற்றையன உள்ளுறைக்கு உரியன எனக் கொள்ளலாம். அப்படிக் கொண்டு, ‘அகப்பாடல் செய்வான் ஒரு புலவன், அப்பாடலில் கருப்பொருளை அமைத்து அதனால் கூறப்படும் கருத்துப் பொருளோடு, கூறநினைத்த—ஆனால் கூறப்படாத ஒரு கருத்துப் பொருள் முடிவதாக என உள்ளே (மறைவாக) அமைத்து முடிப்பது உள்ளுறையாகும்’ என அச் சூத்திரத்தில் உள்ளுறைப் பொருள் கொள்ளலாம். அதனால் உள்ளுறை என்பதன் பொது இலக்கணமும் அச்சூத்திரத்தில் கூறப்பட்டது என்றும் கொள்ளலாம். எனவே உள்ளுறையின் இலக்கணமாவது,

> “(1) அகத்திணைப் பாடலுக்கேயுரியதாய் (2) கருப் பொருள்களை நிலைக்களனாகக் கொண்டதாய் (3) அக்கருப் பொருளால் வெளிப்படையாக உணர்த்தப் படும் பொருளின் உள்ளே உய்த்துணருமாறு அமைவ தாய் உள்ள பொருளே உள்ளுறையாம்” என்பதாகும்

உள்ளுறை அகப்பாடலுக்கேயுரியது

ஆசிரியர் தொல்காப்பியர் உள்ளுறை என்பது அகப் பாடலுக்கேயுரியது என்று வரையறை கூறவில்லை. ஆனால் அவர், உள்ளுறை நிலைக்களன் பற்றியும் உள்ளுறையுவமம் பற்றியும் அகத்திணையியலிற் கூறியதாலும் கருப்பொருள் வரை யறை யகப்பாடலுக்கே யுரியதாதலாலும் உள்ளுறை அகப் பாடலுக்கேயுரியது என்னலாம்.

திணைப் பொருளை யுணர்வதற்கு உள்ளுறையுவமமும் உள்ளுறையில்லாத ஏனையுவமமும் வருவதுண்டு.

> உள்ளுறை யுவமம் ஏனை யுவமம்எனத்
> தள்ளா தாகும் திணையுணர் வகையே (அகத். 46)

என்றார் தொல்காப்பியர். இதன் உரையிறுதியில், இவ்விரண் டுவமைகளும் அகத்திணைப்பொருள்உணர்தற்கு வருவதேயன்றிப் புறத்திணைப் பொருள் உணரவும் வரும் என்று கொண்டு ‘இது

புறத்திற்கும் பொது[0] என்று எழுதினார் நச்சினினார்க்கினியர். அவர் எழுதிய சீவக சிந்தாமணியுரையிலோ பத்துப்பாட்டுரையிலோ பிறவிடங்களிலோ எங்குமே புறத்திணைப் பொருளில் உள்ளுறையாளப்பட்டதாகக் குறிப்பிடவில்லை. புறத்திணைப் பொருளில் வருவன எல்லாம் ஒட்டணி அல்லது பிறிது மொழிதல் அணி என்பதில் அடங்கும்.

மேலும் புறத்திணையில் வரும் தலைவன், தலைவி, தோழி முதலியோர் 'பாட்டுடைத்தலைவன் முதலானோராக அமைவரேயல்லாமல்' அகத்திணைத் தலைவன் முதலியோர் போலக் கிளவித்தலைவன் முதலியோராக அமைதல் இல்லை.

ஆசிரியர் தொல்காப்பியர் உவம வியலிற் கூறிய உள்ளுறை தொடர்பான கருத்துகள், புறத்திணைப் பாடல்களுக்கு ஏற்பன வல்ல. உள்ளுறையைப் பேராசிரியர் கருத்துப்படி—அவர் உவமப் போலி என்று கூறியதுடனமைத்து அதற்குச் சிறப்புக் கொடுத்து இலக்கணம் கூறினாரில்லை. ஆனால் உவமம கூறும்போது யார் எங்கு வேண்டுமானாலும் கூறலாம். உவமப்போலி கூறும்போது மட்டும்,

> தலைவி உள்ளுறை சொல்வதானால் அவளறிந்த கருப்பொருள் கொண்டு சொல்லுதல வேண்டும்.
> தோழி சொல்வதானால் அவள் வாழும் நிலத்துக் கருப்பொருளளவில் சொல்லுதல் வேண்டும்.
> தலைவன் சொல்வதானால் தன் அறிவு, உடைமை தோன்றச் சொல்லுதல் வேண்டும்.
> மற்றவர்கள எல்லாக் கருப் பொருளிலும் வைத்துச் சொல்லலாம்.
> உள்ளுறையுவமம் மகிழ்ச்சிப் பொருளிலும் புலவிப் பொருளிலும் வரும். தலைவி அவ்விருபொருளிலும் உளளுறை கூறலாம். தலைவன் எல்லாப் பொருளிலும் கூறலாம்,
> தோழியும் செவிலியும் பொருந்தும் இடம் நோக்கி அப்பொருளகளில் கூறவேண்டியவர்கள்.
>
> (தொல். பொருள். உவம. 26-31)

இப்படி அகத்திணைப் பொருளுக்கேற்பக்கூறியிருத்தலாலும் உள்ளுறையுவமம் புறத்திணைக்கும் வரும் என்பது பொருந்தாது.

உரையாசிரியர் யாவரும் புறப்பாடல்களில் உள்ளுறையிருப்பதாக உதாரணம் தரவில்லை. புறநானூற்றுப் பழைய உரையாசிரியர், புறப்பாடல்களில்,

''அறுமருப்பு எழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய நெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளில் அத்தம் ஆகிய காடே.'' (புறம். 23)

என்னும் வரிகட்கு உரையெழுதி,

> ''கலை புலிப்பாற் பட்டெனச் சிறுமறி தழீஇய மடப் பிணை பறந்தலை வேளை வெண்பூக் கறிக்கும் என்பது அவன் (தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியன்) பகைவரைக் கொன்றவழி அவர் பெண்டிர் தம் இளம்புதல்வரை ஓம்புதற் பொருட்டு இறந்துபடாது அடகு தின்று உயிர் வாழ்கின்றார் என்பதோர் பொருள் தோன்ற நின்றது'' என்றும்,

''மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்
புனத்தினை யயிலும் நாட'' (புறம். 143)

என்னும் வரிகட்கு உரையெழுதி,

> ''இதுநின் (பேகன்) மலையில் குறவர் மாக்கள் கடவுட் பேணி மழை வேண்டிய பொழுது பெற்றுத் தாம் வேண்டும் உணவு நுகருமாறு போல, இவளும் (கண்ணகி) நின் அருள்பெற்று இன்பம நுகர்வாளாக வேண்டும் என்பதொரு நயந்தோன்ற நின்றது''

என்றும்,

''மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளி
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக'' (புறம். 145)

என்னும் வரிகட்கு உரையெழுதி,

> * ''மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப் படாஅம் ஈத்த......பேக என்ற கருத்து: இவ்வாறு ஒரு காரணம் இன்றியும் அருள் பண்ணுகின்ற நீ நின்னால் வருந்துகின்ற இவட்கு(கண்ணகிக்கு)அருளா தொழிதல் தகாது என்பதாம்''

---

* இக்கருத்து இறைச்சிபோல் அமைந்துளது.

என்றும்,

> ''பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
> கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
> செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
> மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்
> கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப'' (புறம். 200)

என்னும் வரிகட்கு உரையெழுதி,

> ''பலவின்கனி கவர்ந்துண்ட கடுவன் மந்தியொடு சிறந்து சேண் விளங்கிக் கழைமிசைத் துஞ்சும் என்றதனால், நீயும் (விச்சிக்கோன்) இவரை (பாரி மகளிரை) வரைந்து கொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டும் என்பது தோன்றி நின்றது.''

என்றும் குறிப்புப் பொருள்கள் எழுதினார். அவர் எங்கும் உள்ளுறை என்ற சொல்லைக் கூறவில்லை. அதனால் அவர் தமக்குப் புறப்பாடலில் வரும் குறிப்புப் பொருளை உள்ளுறை எனல் கருத்தில்லை என்னலாம். இப்பாடல்களில் வரும் தலைவர் பாட்டுடைத்தலைவரே; கிளவித்தலைவரல்லர். கிளவித் தலைவரே உள்ளுறை கூறற்குரியவர். கூறப்படற்குரியவர் அன்றியும் அகத்திணைத் தலைவர் பெயர் சுட்டப்படாது. புறப்பாடற்றலைவர் ஆனால் பெயர் சுட்டப்படும்.

**உள்ளுறை ஐந்து**

அகப்பாடலில் வரும் உள்ளுறை ஐந்து வகைப்படும். இதை ஆசிரியர் தொல்காப்பியர்,

> உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
> கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே (பொருளியல்:48)

என்னும் சூத்திரத்தாற் குறித்தார். அதனால் உடனுறையுள்ளுறை, உவமவுள்ளுறை, சுட்டு உள்ளுறை, நகையுள்ளுறை சிறப்பு உள்ளுறை என உள்ளுறை ஐந்து வகைப்படும் என அறியலாம். இனி இவ்வுள்ளுறைகளை விரிவாகக் காணலாம்.

## உடனுறையுள்ளுறை

### இளம்பூரணர்

உடனுறையுள்ளுறையாவது, 'உடன் உறைவது ஒன்றனைச் சொல்ல அதனானே பிறிதொருபொருள் விளங்குவது' என்பர் இளம்பூரணர். உதாரணமாக,

விளையாட் டாயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காய்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தன்று நுவ்வை யாகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே (நற்.172)

எனும் நற்றிணைப் பாடல் தந்து "இதனுள்புன்னைக்கு நாணுதும் எனவே அவ்வழித்தான் வளர்த்த புன்னை யென்றும்

* பொருள்: புதியராய் வந்த பாணர் பாடுகின்ற மெல்லிய இசைப்பாட்டுப் போலே வெளிய வலம்புரிச் சங்கு ஒலியா நிற்கும் விளங்கிய நீரையுடைய துறை பொருந்திய நெய்தல் நிலத் தலைவனே! யாம் எம்மொடு விளையாடுகின்ற தோழியரோடு சென்று ஒரு நாள் வெள்ளிய மணலிலூன்றினேமாகி மறந்தொழிந்த புன்னை விதையானது வேரூன்றி முளைத்து முளை தோன்றுதலானே மீண்டும் அதனை நோக்கி மகிழ்ந்து நெய் கலந்த இனிய பாலை நீராக வார்த்து இனிமையொடு வளர்கு நாளில் எமது அன்னை, எம்மை நோக்கி 'நீயிர் வளர்த்து வரும் புன்னையானது நும்மினும்சிறந்ததன்றோ அதுநும்முடன்பிறந்ததங்கையாம் தகுதியினையுடையது கண்டீர்' என்று இதன் சிறப்பினை விளங்க உரைத்தனள், ஆதலின் எமது தங்கையாகிய இப்புன்னையின் எதிரில் நும்மோடு நகைத்து விளையாடி மகிழ்வதற்கு யாம் வெட்கமடைகின்றோம்? அம்மையோ? நீ இவளை அணைந்து நல்குவையோ; நல்குவையாயின் நிறைந்த மரத்தின் நிழல் பிறவும் இங்குள்ளனகாண், அவ்வயிற் செல்லுதல் நல்லதொன்றாகும்.—பின்னத்தூர் நாராயணசாமி அய்யர். இவ்வுரையினும் பொருள் விளக்கத்தில் யான் கூறியவுரையே சிறக்கும் என்பது என் கருத்து. புன்னையை வளர்த்தது அன்னையின் செயல் என்பதே நன்று. என் எனின் நுவ்வை என்பது நும்+அவ்வை எனப் பிரிக்கப்படும் போது (அவ்வை என்பது அக்கா எனப் பொருள்படுமாதலின்) நும் அக்கா என்று பொருள் படும். தங்கை எனப் பொருள்படாது.

பல்காலும் அன்னை வருவள் என்றும்உடனுறை கூறி விலக்கிய வாறு'' என விளக்கமும் தந்தார்.

பகற்குறிக் கூட்டத்துக்கு வந்த தலைவனிடம் பகற்குறி மறுக்க வேண்டித் தோழி கூறியதாக அமைந்தது மேற்பாடல். ''தலைவ; இப்புன்னையின் நீழலில் இவளுடனை கூடுவது நன்றன்று, இப்புன்னையானது எங்கள் அன்னை தன் தோழியருடன் புன்னைக் காயை மண்ணில் மறைத்து ஆடியபோது மறந்து விட்டுச் செல்ல, அக்காய் முளைக்க, அதனை அன்னையானவள் நெய்பெய் தீம்பால் விட்டு வளர்க்க வளர்ந்தது. அது யாங்கள் பிறத்தற்கு முன்பே போற்றி வளர்க்கப்பட்டது; ஆதலின், எங்கள் அன்னை எங்களைப் பார்த்து 'இப்புன்னையானது உங்களினும் எனக்குச் சிறந்ததாகும்; நுங்களுக்கு இது அவ்வை (அக்கா) ஆகும்' என உறவு கூறினாள். அதனால் அதற்கு நாணுகின்றோம். அதனால் இப்புன்னையின் நிழலில் கூடுதல் தக்கதன்று; இங்கே வேறு மர நிழலும் உண்டு'' என்று தோழியானவள் தலைவனிடம் கூறிப் பகற்குறி மறுத்தாள்.

இதில் புன்னை கருப்பொருள். அது, தலைவி, தோழியருடன் உறைவது; தலைவி பிறத்தற்கு முன்னமே தோன்றி வளர்க்கப்பட்டது; தலைவிக்கு மூத்த பிறப்புடையது; அதனால் தலைவியினும் சிறந்தது, 'இச்சிறந்த புன்னையின் நிழலில் கூட்டம் தகாது' என மறுத்தது போல இருந்தாலும இதன் உள்ளே உறையும் கருத்து வேறு. ''புன்னையை அன்னை வளர்த்தாலாதலின் அதைப் பார்க்க அடிக்கடி வருவாள்; உங்கள் களவொழுக்கம் வெளிப்பட்டுவிடும். திருமணத்திற்குத் தடையாகும்'' என்பதே உள்ளுறையும் வேறு பொருள். எனவே புன்னைச் செய்தி உடனுறை உள்ளுறைக்கு உரியதாயிற்று.

### நச்சினார்க்கினியர்

''உடனுறை நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடன் உறையும் கருப்பொருளாற் பிறிதொன்று பயப்ப மறைத்துக் கூறும் இறைச்சி'' என்பர் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியருக்கு இறைச்சி எனப்படும் குறிப்புப் பொருளே உடனுறையுள்ளுறை என்பது கருத்தாதலின், இறைச்சி என்னும் தலைப்பில் அவர் கருத்து ஆராயப்படும்.

### ஆய்வு

உடனுறைவு என்பது இறைச்சிப் பொருள் என்று நச்சினார்க்கினியர் கொண்டது பொருந்தாது.

கருப்பொருளை உடனுறை என்று ஆசிரியர் தொல்காப்பியர் யாண்டும் ஆளவில்லை. உடனுறை என்பதற்கு 'நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடன் உறையும் கருப்பொருள்கள்' என அவர் வலிந்து பொருள் கூறியுள்ளார். உள்ளுறை ஐந்துமே கருப் பொருளை நிலைக்களனாகக் கொண்டு வருவதாலும் அக்கருப் பொருள் நான்கு நிலத்தும் உறைவதாலும் இறைச்சியைமட்டில் உடனுறை என்றல் பொருந்தாமையாலும் அவர் கருத்துப் பொருந்தாது.

அதனால், ' உடனுறையாவது உடனுறைவது ஒன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது' என்ற இளம்பூரணர் கருத்தே ஏற்புடையதாகும்.

## உவமவுள்ளுறை அல்லது உள்ளுறையுவமம்

### இளம்பூரணர்

'உவமம் என்பது உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது' என்பர் இளம்பூரணர். அதற்கு,

> *வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
> குறைபடுதேன் வேட்டும் குறுகும்—நிறைமதுச் சேர்ந்து
> உண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
> வண்டா மரைபிரிந்த வண்டு (தண்டி. 52 உரை)

என்னும் செய்யுளை உதாரணமாகக் காட்டி,

> ''இது வண்டைக் கூறுவாள் போலத் தலைமகன் பரத்தையிற் பிரிவு கூறுதலின் உள்ளுறையுவமமாயிற்று''

என விளக்கம் எழுதினார்.

இப்பாடலில்,

| | சொல்லப்பட்டவுவமை | குறிப்பாற் கொள்ளும் பொருள் |
|---|---|---|
| 1. | வண்டு | — தலைவன் |
| 2. | செவ்வியுடையதோர் தாமரை | — அழகிய தலைவி |
| 3. | வண்டு தாமரையில் நிறை மதுச் சேர்ந்து உண்டாடுதல் | — தலைவன் தலைவியிடம் இன்பம் நுகர்தல் |

* பொருள் : தன்னிடத்தே அழகுடையதும் வளமான தேனை யுடையதும் ஆகிய ஓர் தாமரையைச் சேர்ந்து நிறைய மதுவுண்டு — பின்னர் அத்தாமரையைப் பிரிந்த வண்டானது, மணம் நாடும் கூட்டமான சுரும்பு எனும் வண்டுகள் மொய்த்ததனால் காவியிடத்துக் குறைபட்ட தேனை விரும்பிச் செல்லும்.

4. தாமரையை வண்டுநீங்குதல்— தலைவியைத் தலைவன் நீங்குதல்
5. காவி — பரத்தை
6. இனவண்டுகள் காவியின் தேன் உண்ணல் — பரத்தர்கள் அப்பரத்தையை நுகர்தல்
7. காவி வண்டுகளால் நுகரப்பட்டுத் தேன்குறைதல் — பரத்தரால் துய்க்கப்பெற்றுப் பரத்தை பொலிவிழத்தல்
8. அக்காவியை வண்டு விரும்பிச் சேர்தல் — அப்பரத்தையைத் தலைவன் விரும்பிச் சேர்தல்

இப்படி உவமையைக்கொண்டு உவமிக்கப்படும் பொருளை உய்த்துணர்ந்து கொள்ளும்படி அமைவதே உள்ளுறையுவமமாம்.

உள்ளுறுத் திதனொடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்திறுவதை யுள்ளுறை யுவமம் (அகத். 48)

எனத் தொல்காப்பியர் கூறிய இலக்கணம் இப்பாடலில் நன்கு பொருந்தியிருப்பதைக் காணலாம்.

**நச்சினார்க்கினியர்**

நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்தினரே. அவர் தந்த உதாரணம்.

*"வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்ந் தூர்புகுந்த வரிவண்டு
ஓங்குயர் எழில்யானைக்கனை கடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டு தாம் மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணிநல் லூர"

(கலி 66)

* பொருள்: "பெருகிய நீரில் மலரும நீலப்பூவை விற்பவர், வயலின் பக்கமாகப் பறித்து வந்த மலர்களிற் சூழ்ந்து ஊர்ப்பக்கம் வந்த வரிவண்டானது, ஓங்கியுயர்ந்த எழுச்சிமிக்க யானையின் கமழ்கின்ற மதநீரை அதில் மொய்த்த வண்டுகள் விருந்தாகத்தர உண்டு பகலெல்லாம் தங்கி, இரவில் தம் பருத்த முன்கை வளையலால் வடுவுண்டாகத் தம் தலைவரைப் புணர்ந்த தலைவியரின் தேம்கமழ கூந்தலுள் உள்ள அரும்பவிழும் முல்லை மலரிற்பாய்ந்து மொய்த்து, நினைவு இன்றி முன்தான் மொய்த்திருந்த பூம் பொய்கையை மறந்து நினையாதவாறு அமைந்த நீர் சூழ்ந்த நல்ல ஊரனே"

என்பது. இதிலுள்ள உவமமும் பெறப்படும் குறிப்புப் பொருளும் வருமாறு:

| | உவமம் | | குறிப்புப்பொருள் |
|---|---|---|---|
| 1. | வீங்குநீர் | — | பரத்தையர்சேரி |
| 2. | அதில் அவிழ்ந்த நீலம் | — | சேரியில் காமச்செவ்வியுடைய பரத்தை |
| 3. | நீலப்பூ விற்பவர் | — | பரத்தையரைத்தேரேற்றிவரும் பாணர் முதலிய வாயில்கள் |
| 4. | நீலப்பூச் சூழ்ந்த வண்டு | — | பரத்தையைச்சேர்ந்ததலைவன் |
| 5. | அந்த வண்டை யானையின் மதத்தை அங்குறைந்த வண்டுகள் நுகரச் செய்தல் | — | பகலில் சேரிப்பரத்தையர் அத் தலைவனைத் தம் நலம் நுகரச் செய்தல் |
| 6. | அந்த வண்டு இரவில் முல்லையை ஊதல் | — | தலைவன் இரவில் இற்பரத்தையுடன் துயிலல் |
| 7. | பண்டுதான் இருந்த பொய்கையை நீலப்பூவுடன் வந்த வண்டு மறத்தல் | — | இல்லிலிருக்கும் தலைவியைத் தலைவன் மறத்தல் |

இவ்வாறு, கூறப்பட்ட கருப்பொருள்களின் செய்திகளால் கூறப்படாத உள்ளுறைப் பொருளை உவமை வகையில் கொள்ளுதலே உவமை உள்ளுறை கொள்ளுதலாம்.

ஆய்வு

'வெறிகொள் இனச்சுரும்பு' என்னும் பாடல் பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனிடம் தோழி அல்லது தலைவி கூறியதாகக்கொள்ளல் வேண்டும். அப்போதுதான் அது உள்ளுறை உவமம் எனப்படும். அப்போது அது அகப்பாடல் எனப்படும்.

பொதுவாக ஆடவர் இயல்பு பற்றிக் கூறியதாக அப்பாடல் கொள்ளப்படுமானால், அதன் உள்ளுறைப் பொருள், உவமவுள்ளுறைப் பொருளாகாது. அணியிலக்கணத்தில் கூறப்படும் ஒட்டணியின்பாற் சாரும். ஒட்டணியின் இலக்கணத்தைத் தண்டியலங்காரம்,

> கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுதற்குப்
> பிறிதொன் றுரைப்பின் அஃது ஒட்டென மொழிப
>
> (தண்டி 52)

என்று கூறும். அதில் கூறப்பட்ட உதாரணமே 'வெறிகொள் இனச்சுரும்பு' என்னும் பாடல். அதையே இளம்பூரணர் ஆண்டார். ஒட்டணி புறப்பொருளுக் குரியது; புறப்பாடலுக் குரியது. அதுவே அகப்பாடலில் வருமாயின் உள்ளுறையுவமம்

எனப்படும். அதனால் இளம்பூரணர் அப்பாடலை அகப்பாடலாகவே கொண்டு உதாரணமாகக் காட்டினார் என்னலாம்.

உவமமும் குறிப்புப்பொருளும் நேர்க்குநேர் ஒத்து முடிந்திருப்பதை மேற்காட்டிய உதாரணங்களிற் காண்க. ஒவ்வாமல் வருமானால் அது இறைச்சி எனப்படும். இதனை இறைச்சி பற்றிய ஆய்வில் விளங்கக் காணலாம்.

## சுட்டு உள்ளுறை

### இளம்பூரணர்

'சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப்பிறிதோர் பொருட்படுதல்' என்பர் இளம்பூரணர். உதாரணமாக,

> தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
> அஃதாண் டவள்செய் தது (குறள்.1279)

என்னுங் குறளைக் காட்டி,

> 'இதனுள் இப்பூப் பறிப்போமாயின் வளை கழன்று
> தோள் மெலிய நடத்தை வல்லையாகல் வேண்டும்
> என ஒரு பொருள் சுட்டித் தந்தமை காண்க'

என விளக்கம் காட்டினார்.

இக்குறளின் துறைப் பொருள் தோழி தலைவனைப் பகற்குறி விலக்கலாம்.

> ''தலைவ! இப்பூப் பறிப்போமாயின் (அதாவது இந்த பகற்குறிப்புணர்ச்சியை மேற்கொள்ளின்)நீதலைவியைப் பிரிந்து நடக்க வல்லவனாதல் வேண்டும். நின்னால் பிரிந்து செல்ல முடியுமோ? முடியாது என்பதைத் தலைவி குறிப்பாகத் தெரிவித்தாள். எப்படியெனின், முதலில் 'தன் கை வளையைப் பார்த்தாள்; அதன் குறிப்பு நீபுணர்ந்து பிரியும்போது கை வளை கழலும் என்பது. அடுத்துத் தன் தோளைப் பார்த்தாள்; அதன் குறிப்புக் கைவளை கழலுமாறு தோள் மெலியும் என்பது. அடுத்துத் தன் காலைப் பார்த்தாள்; அதன் குறிப்பு என் கை வளை கழலவும் தோள் மெலியவும் நின்கால் நடக்க வல்லனவோ என்று கேட்பது. இவை தான் தலைவி செய்த குறிப்பு''

என்றாள் தோழி. இதில் தொடி, தோள், அடி ஆகியவைகளைப் பார்த்தது சுட்டியதாகக் கொள்ளப்பட்டது. அதன் மூலம் பகற்குறி விலக்குதல் உள்ளுறையாகக் கொள்ளப்பட்டது. இதுவே இளம்பூரணர் கருத்து.

**நச்சினார்க்கினியர்**

சுட்டு உள்ளுறையை இரண்டு வகையாகக் கொண்டார் நச்சினார்க்கினியர்.

முதல் வகை, 'உடனுறை உவமமும் அன்றி நகையும் சிறப்பும் பற்றாது வாளாது ஒன்று நினைந்து ஒன்று சொல்வன' என்பது. இதற்கு உதாரணம்,

* பெருங்கடல் முகந்த பல்கிளைக் கொண்மூ
இருண்டுயர் விசும்பின் வானேர்பு வளைஇ
போர்ப்புறு முரசின் இரங்கி முறை புரிந்து
அறநெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் தெதிர்ந்த பெருஞ்செய் ஆடவர்
கழித்தெறி வாளின் நளிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவியை ஆகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம்; பொன்னென
மலர்ந்த வேங்கை மணிதொடர் அடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்டக இயலித்
தழலை வாங்கியும் தட்டையோப்பியும்
அழலேர் செயலை யந்தளிர் தைஇயும்
குறமகள் காக்கும் ஏனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே (அகம். 188)

---

* பொருள்: பெரிய கடல் நீரை முகந்த பல கூட்டமாகவுள்ள மேகமே! நின்வரவால் இருண்ட உயர்ந்த வானத்தில் வலமாக எழுந்து உலகை வளைத்து, தோலால் போர்க்கப்பட்ட முரசம் போல ஒலித்து, நீதி செலுத்தி அறநெறி பிழையாத ஆட்சித்திறன் அறியும் மன்னர்களது போரில் எதிர்த்த பெரும் போர் செய்யும் ஆற்றலுள்ள வீரர்கள் உறையிலிருந்து கழித்து வீசும் வாள் ஒளிர்வது போலச் செறிந்து விளங்கும் மின்னல் தொகுதியையுடையையாய் நாள்தோறும் வீணே ஆரவாரம் செய்தியோ? அல்லது பொன்போல மலர்ந்த வேங்கைப்பூ மாலை சூடி விளங்கிய தோழியர் கூட்டத்துடன் அழகுற நடந்து தழலை என்னும் கருவியைச் சுழற்றியும் தட்டை என்னும் கருவியைத் தட்டியும் நெருப்புப் போலும் நிறமுடைய அசோகந்தளிரை உடுத்தியும் குறவர் மகளிர் காக்கும் தினைப்புனத்தை மழை பொழிந்து காக்கவும் செய்தியோ? வாழி.

என்னும் அகப்பாடல். இது மேகத்தைப் பார்த்துக் கூறியது.

> "ஏ மேகமே! பெருங் கடலில் நீர் முகந்து பலகிளைக ளாகப் பிரிந்து வானில் ஏறி இடித்து, வீரர்கழித்த வாள்கள் மின்னுவது போல மின்னி இப்படியே நாளும் ஆரவாரம் செய்வாயா? அல்லது ஆயக் கூட்டத்தா ருடன் குறமகள் காவல் புரியும் தினைப் புனம் சென்று மழை பொழிவாயா?"

என்று இப்பாடலில் கூறியதன் கருத்து,

> "ஏ தலைவனே! தினமும் இப்படியே வந்து பகற்குறி இரவுக்குறி எனக் களவொழுக்கிலேயே நிற்பாயா? அல்லது வரைந்து கொள்வாயா?"

என்று கேட்பதாகும். தலைவனின் களவொழுக்கத்தைத் தவிர்த்து வரைந்து கோடலை வற்புறுத்த நினைந்து அதை வெளிப்படையாகக் கூறாமல் மேகத்தின் மேல் வைத்துக் கூறியது காண்க. ஒன்றைக் குறித்து (சுட்டி) ஒன்றைப் பெற வைத்தமையின் இப்பாடல் சுட்டு உள்ளுறைக்கு உரியதாயிற்று.

இனி நச்சினார்க்கினியர் கூறிய இரண்டாவது சுட்டு வருமாறு. 'அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டல்' (தொல் .பொ. பொருள். 231) என்பது.

அதாவது, தலைவன் பிரிந்தபோது தலைவி வருந்த அவளை ஆற்றுவித்தற்காகத் தோழியானவள், 'தலைவன் செல்லுமிடத்தில் உன்னிடம் அன்பு செலுத்தும்படியான நிகழ்ச்சிகளை (விலங்கு முதலிய கருப்பொருள்களின் செயல்களை)க் காண்பான்' எனக் கூறலாம். இறைச்சியுட் சுட்டல் என்பது கருப்பொருளில் வைத்துக் கூறுதல் என்பதாம். இதற்கு அவர் தந்த உதாரணம்,

* "நசைபெரி துடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே (குறுந்.37)

---

* பொருள்: தோழீ! தலைவர் நின்பால் விருப்பம் மிகவுடையர்; நல்குதலையும் செய்வர்; அவர் போன வழிகள், பெண்யானையினது பசியை நீக்கும் பொருட்டுப் பெரிய துதிக்கையையுடைய ஆண்யானை, மெல்லிய கிளைகளையுடைய யாமரத்தின் பட்டையை யுரித்து அதன் நீரை அப்பிடி பருகச் செய்யும் அன்பைப் புலப்படுத்தற்கு இடமாகவுள்ளன-உ. வே. சாமிநாதய்யர்.

இதன் விளக்கமாக அவர் எழுதியது,

> ''இதனுள், முன்பே நெஞ்சகத் தன்புடையார், அதன் மேலே களிறு தன் பிடியின் பெரும்பசி களைதற்கு மென்தோலையுடைய ஆச்சாவைப் பிளந்து அதன் நாரைப் பொளிந்து ஊட்டும் அன்பினையுடைய அவர் சென்ற ஆறதனைக் காண்பர்காண் என்று அன்புறு தகுந கூறிப் பிரிவாற்றாதவளை வற்புறுத்தவாறு காண்க''

என்பது. இதனுள் வெளிப்படையிற் சொல்லப்பட்டது களிற்றின் அன்புச் செயல்; குறிப்பாற் கொள்ளப்பட்டது 'அக்களிறு போல நின்னிடம் அன்பு செய்வர்; விரைந்து வருவர்; வருந்தாதே' என்பது.

ஆய்வு

இளம்பூரணர் சுட்டு உள்ளுறைக்குத் 'தொடி நோக்கி' என்ற குறளைக் காட்டியது பொருந்தாது. ஏன் எனின் உள்ளுறையானது கருப்பொருளை நிலைக்களனாகக் கொள்ள வேண்டும். குறளில் கருப்பொருளே இல்லை.*

உள்ளுறையுவமததுக்கு இளம்பூரணர் காட்டிய 'வெறிகொள் இனச்சுரும்பு' என்னும் பாடலும், நச்சினார்க்கினியர் சுட்டு உள்ளுறைக்குக் காட்டிய 'பெருங்கடல் முகந்த' என்னும் பாடலும் ஒன்று சொல்ல ஒன்று பெறப்படுமாறு அமைந்தனவாதலின் அவ்விரண்டையும் சுட்டு உள்ளுறைக்கும் உவம உள்ளுறைக்கும் காட்டலாம். ஆனால் 'பெருங்கடல் முகந்த' என்பதில் கருப்பொருள் நிகழ்ச்சியில்லை; மேகம் கருப்பொருளன்று. அதனால் அது இரண்டுள்ளுறைக்கும் பொருந்தாது. எனினும் தழை, தட்டை, தளிர், ஏனல் என்ற கருப்பொருள் காணப்படும் அளவில் மேகம் கருப்பொருள் இல்லை என்றாலும் அதன் செயலாக ஏனலைச் சார்த்தி 'ஏனற்புறமும் தருதியோ மழை' என்றதால் சுட்டு உள்ளுறையின்பாற் சார்த்தலாம், அவ்வளவே.

சுட்டு உள்ளுறை என்பதை இருவகையில் கொள்ளலாம்.

1. சுட்டுச் சொல்லால் பெறப்படும் உள்ளுறை; அதாவது சுட்டப்படும் பொருளாற் பெறப்படும் பிறிதொரு பொருள்.

* டாக்டர் ப. அருணாசலமும் இக்கருத்தினரே. தொல்காப்பியர், பக். 168, தமிழ்ப்புத்தகாலயம், பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5 (1975)

* வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யார் அஃது அறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர் தவச் சிறிதே காமமோ பெரிதே (குறுந்.18)

இப்பாடலின் திணைப் பொருள், 'தோழி தலைவனை வரைவு கடாவுதல்' என்பது. இப்பாடலில் அஃது என்பது சுட்டு.

''சிறிய கிளையில் பெரும்பழம் தொங்குவது போலச்
சிறிய உயிரில் பெரிய காமம் நிறைந்துளது.''

என்பது சுட்டப்படும் பொருள். அஃது என்ற சுட்டு அந்த அளவில் அமைந்துவிடவில்லை.

''பாதுகாப்பு இலதாகித் தன்னைத் தாங்குதற்குரிய
கொம்பும் சிறியதாகித் தானும பெரியதாகி இருக்கும்
பழம். கனிந்து கொம்பினின்றும் உகும்; அன்றிப்
பிறரால் கொள்ளவும் படும். அதுபோலத் தன்னை
வேற்று வரைவினின்றும் காப்பார் இலராகி உயி
ரும் சிறியளாய இவளிடத்துக் காமம பின்னும்
கனியின் உயிர் விடுதலும் நேரும்; அன்றிப்
பிறர் வரைந்து கொள்ளவும முயல்வர்'' (உ.வே.சா.)

என்ற பொருளையும் சுட்டுகிறது. அதனால், ''யாரஃதறிந்திசினோரே...பெரிதே'' என்பது சுட்டு உள்ளுறைக்குரியதாயிற்று.

2. ஒன்றைக் குறிப்பிட்டு (சுட்டி)ச் சொல்ல அதன் மூலம் பெறப்படுவது.

---

பொருள்: சிறு மூங்கிலாகிய வாழ்வேலியையுடைய வேரிலே பழக்குலைகளையுடைய பலாமரங்கள் செறிந்த பக்கத்தையுடைய மலை நாடனே! பக்கமலையில் பலாமரத்தின் சிறிய கொம்பில் பெரியபழம் தொங்கியது போல, இத்தலைவியினது உயிரானது மிகச் சிறுமையுடையது; காமநோய் மிகப் பெரியது. அந்நிலையை அறிந்தோர் யாவர்? ஒருவரும் இல்லை. அவளை வரைந்து கொள்ளும் பருவத்தையுடையை யாகுக—உ. வே. சா.

* யாரும் இல்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தாமணந்த ஞான்றே (குறுந். 25)

இப்பாடலின்திணைப்பொருள், ''தலைவன் களவுப் புணர்ச்சிப் பின்னர் வரைந்து கோடல் இன்றிக் காலம் நீட்டித்த விடத்துத் தலைவி தன் தோழியிடம், 'தன்னைத் தலைவன் அருள்கூர்ந்து வரைந்து கொண்டாலன்றி அவன் என்னைக் கூடியதற்கு வேறு சான்றில்லை; என் செய்வேன்' என வருந்திக் கூறியது'' என்பது.

இதில் தலைவியால் குருகின் செயல் சுட்டிக் கூறப்பட்டுள்ளது. ''அக்குருகு தான் ஓடும் நீரில் தனக்கு உணவான ஆரலையே பார்த்திருந்தது. அதன் எண்ணம் வேறு எதிலும் இல்லை; அதுபோலத் தலைவனும் என்னிடம் இன்பம் நுகர்தலையே குறிக்கோளாகக் கொண்டிருந்தான்; ஆரல் கிடைப்பின் அக்குருகு பறந்துவிடும். அதுபோலத் தலைவன் இன்பம் நுகர்ந்து பின் மறந்து நினையானாயினான்'' என்பது குருகின் செயல் மூலம் பெறப்படும் உள்ளுறைப் பொருள். குருகு ஆரலையே பார்த்திருந்ததாதலின் அது சான்று கூறாது என்பது ஓர் (இறைச்சிப்) பொருள் உண்மையும் காணத்தக்கது.

குருகின் செயல் இயற்கை வருணனை என்பதில்லாமல் சுட்டிச் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாதலின் இப்பாடல் சுட்டு உள்ளுறைப் பாடல் என்னலாம்.

### நகை உள்ளுறை

#### இளம்பூரணர்

இளம்பூரணர், 'நகையாவது நகையினாற் பிறிதொரு பொருள் உணர நிற்றல்' என்று கூறி,

> அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
> பசையினள் மெல்ல நகும் (குறள், 1008)

என்னும் குறளை உதாரணமாகக் காட்டி,

---

* பொருள்: தோழீ! தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்தில் சான்றாவார் வேறு ஒருவரும் இலர். தலைவனாகிய கள்வன் ஒருவன்தான் இருந்தான். அங்ஙனம் இருந்த தலைவன், அப்பொழுது கூறிய சூளுறவினின்றும் தப்பினால் நான் யாது செய்யவல்லேன்? ஓடுகின்ற நீரில் ஆரல் மீனின் வரவை உண்ணும் பொருட்டுப் பார்த்து நிற்கும தினையின் அடியைப் போன்ற கால்களையுடைய நாரையும் இருந்தது. (உ. வே. சா.)

"இதனுள் நகையினாற் பிறிதோர் குறிப்புத் தோன்றிய வாறு காண்க"

என்று எழுதினார்.

இப்பாடலில், 'தலைவன், தன்னால் விரும்பப்பட்ட தலைவியும் அவள் தோழியும் ஒருங்கிருந்தபோது தான் சென்று தன் குறையினைக் கூறியபோது, தலைவி ஒன்றும் அறியாதவள் போன்று மெல்லத் தன்னுள்ளே நகுதல் செய்தாள். அது கண்ட தலைவன் அவள் விருப்பத்தை உணர்ந்தவனாய் மகிழ்ந்து தனக்குள் அவ்வாறு கூறினான்' என்பது கருத்து. இதில் நகை உள்ளுறை இருப்பதாக இளம்பூரணர் கருதினார். தலைவி நகுதல் செய்ததன் மூலம் அவள் குறிப்பு வெளிப்படுதல் உள்ளுறையாயிற்று.

**நச்சினார்க்கினியர்**

நச்சினார்க்கினியர் நகையுள்ளுறைக்கு, *'விளையாட்டாயமொடு' என்ற பாடலைக் காட்டி,

"இதனுள், புன்னையை அன்னை நுவ்வையாகும் என்றதனான் இவள் எதிர் நும்மை நகையாடுதல் அஞ்சுதும் என நகையாடிப் பகற்குறியெதிரே கொள்ளாமைக் குறிப்பினான் மறைத்துக் கூறி மறுத்தவாறு காண்க"

என விளக்கமும் எழுதினார்.

இவர் கருத்து, 'நகைப்பதன் மூலம் ஒரு கருத்தைப் புலப்படுத்துவது—அதாவது நகைச்சுவைபடப் பேசுவதன் மூலம் ஒரு கருத்தைப் புலப்படுத்துவது நகையுள்ளுறையாம்' என்பதாம்.

**ஆய்வு**

ஒருவர் நகைப்பது கண்டு ஒரு பொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பதும், நகைத்துப் பேசுவதன் மூலம் ஒரு பொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பதும் ஆகிய இரண்டையுமே நகை உள்ளுறைக்குக் கொள்ளலாம். ஆயினும், இளம்பூரணர் காட்டிய உதாரணத்தில் உள்ளுறையாதற்கு நிலைக்களனாகிய கருப் பொருள் இல்லாமையால் அதை ஏற்பதற்கில்லை.

நச்சினார்க்கினியருக்கும், 'கருப் பொருளடியாகத்தான்—அதாவது கருப்பொருளின் நிகழ்ச்சிவாயிலாகத்தான் நகையுள்ளுறை தோன்றும் என்பதே கொள்கை' என்பதை, அவர் உரைகளிலிருந்தும் அறியலாம். 'அணிமுகமதியேய்ப்ப' என்னும் குறிஞ்சிக் கலிப்பாவில் (28)

---

* இப்பாடலை 10 ஆம் பக்கத்திற் காண்க.

'முகைமாறு கொள்ளும் எயிற்றாய் இவையல்ல
என் உழுவாய் நீமற்றினி'

என்ற வரிகட்கு,

''முல்லை முகையோடு மாறுபாடு கொள்ளும் எயிற்றினை யுடையாய்! இத்தோற்றப் பொலிவுகளன்றி வேறே தோற்றப் பொலிவுண்டாக நீ புணர்வாய் என்றான்''

என உரையெழுதி,

''என்றதனால் நின்கருத்து இடைவிடாது முயங்குதலே யாயின் இனி நீ இடைவிடாது முயங்கினைகாண். ......கரும்பும் குவளையுமன்றி வேறு என் உழுவாய் என ஒரு நகைக் குறிப்புத் தோன்றிற்று''

எனக் குறிப்புப் பொருளும் எழுதினார். இங்கு அவர் நகை யுள்ளுறை என எழுதாமல் நகைக் குறிப்பு என்றே எழுதியது காணலாம். இதில் கரும்பு, குவளை என்னும் கருப் பொருள்கள் உள்ளனவே என வினவலாம். உளவாயினும் அவற்றின் செயலாக ஒன்றும் இல்லை. மேலும் இதையடுத்து வரும்,

ஈங்கே தலைப்படுவன் உண்டான தலைப் பெயின்
வேந்துகொண் டன்ன பல (24-25)

என்னும் வரிகளுக்கு,

''அரசனைச் சேர்ந்து அவன் செல்வத்தை நுகர்ந்தான் ஒருவன், அவன் வயத்தனாய் நின்று காரியத்தாற் றலை மைப்பாடு எய்துவனாயின், அவ்வேந்தன் அவனா லுள்ள பயனைக் கொண்டாற் போன்ற பல பயனையும் இவ்விடத்தே எய்துவேன் என்றான்''

என உரையெழுதி,

''இனி அரசனுடைய பொருளை நுகர்ந்தவன் எதிர்ப் படில் அவ்வரசன் அவனிடத்து வருத்த முறுத்திக் கொண்டாற் போன்ற பல பயன்களையும் யானும் இங்கே கொள்வேன் என ஒரு நகைக் குறிப்புத் தோன்றி நின்றது''

என எழுதியதிலும் நகையுள்ளுறை என்னாது நகைக் குறிப்பு என்றே எழுதியதும் காணலாம். இப்பகுதியில் கருப் பொருளில்லை.

எனவே நகையுள்ளுறைக்கும் கருப்பொருள் நிகழ்ச்சி நிலைக் களன் என்பதே நச்சினார்க்கினியர் கருத்து என அறியலாம்.

* விட்டென விடுக்குநாள் வருக அதுநீ
தேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்பநீ யுண்டஎன் நலனே (குறுந். 236)

''வரைவிடை வைத்துப் பிரியக் கருதிய தலைவன், தோழியிடம் தலைவியை ஆற்றுவிப்பாயாக எனக் கூறியபோது, தோழியானவள் நகையாடி உரைத்துச் செலவழுங்குவித்தது'' என்பது திணைப் பொருள்.

இதில் தோழி நகையாடியதாவது,

> ''தலைவனே! நீ பிரிந்து போவதுபற்றி எனக்கு வருத்தமில்லை; ஆனால் இவளை நீ கைவிட்டாய் என்று சொல்லும்படியான நாள் வருவதாகுக; நீயும் அதற்கு உடன்பட்டாய் என்றால் ஒன்று நீ செய்ய வேண்டும். அதாவது தலைவியின் நலனையுண்டாயல்லவா? அதைத் தந்து விட்டுச் செல்.''

என்று கூறியதில் உண்டது மீளத் தருதற்கியலாததாகவும் 'தந்து செல்' என்றது நகையாடியதாம். இதற்கேற்பக் கருப்பொருள் நிகழ்ச்சியும் நகையாகவே அமைந்தது.

> ''புன்னை மரத்தின் மணலைத் தொடுமாறு தாழ்ந்த கிளைகளில் இதுகாறும் அங்குவந்தறியாத புதிய நாரையானது வந்து தங்கும்''

என்ற செய்தி நகைப்புக் குரியதாக அமைந்தது. ''எங்கேயோ இரையுண்ட நாரை, நான் தங்குதற்கு உயர்கிளையை இடமாகக் கொள்ளாமல் மணலில் தாழ்ந்த கிளையை இடமாகக் கொண்டு தங்குவது நகைப்புக்குரியதாயிற்று. அதுபோலத் தலைவியின் நலனையுண்டநீ, பிரிந்து சென்றக்கால் இவள் நினைவாகவே இருந்து எவ்விடம் செல்வது என்பது அறியாது எங்கேனும் செல்லினும் செல்வாய். ஆதலின் செலவழுங்குக'' என்னும்

---

* பொருள்: குன்றம் போன்ற குவிதலையுடைய மணல் அடைந்த கரையினிடத்தே வளர்ந்து நின்ற புன்னை மரத்தினது நிலத்தைத் தோய்ந்த தாழ்ந்த கிளையில் புதிய நாரை தங்கும் தண்ணிய கடற்கரையையுடைய தலைவ! இவளை நீ கைவிட்டாய் என விடுக்கும் காலம் வருவதாக! நீ அதற்கு உடன்படுவாயாயின் நீ நுகர்ந்த என் பெண்மை நலத்தைத் தந்து செல்வாயாக— உ. வே. சா. (என் என்றது தலைவியை.)

பொருளைத் தருதலின் இப்பாடல் நகையுள்ளுறைக்குரிய தாயிற்று.

## சிறப்பு உள்ளுறை

### இளம்பூரணர்

'சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இது எனக் கூறுவத னானே பிறிதோர் பொருள் கொள்ள வைப்பது' என்று கூறிய இளம்பூரணர், உதாரணம் காட்டவில்லை. உதாரணம் கிடைக்க வில்லை போலும்.

### நச்சினார்க்கினியர்

'சிறப்பு உள்ளுறை என்பது உவம உள்ளுறையில் வரும் கருப் பொருளுக்குச் சிறப்புக் கொடுத்து நிற்பது' அதாவது உள்ளுறைப் பொருள் தரும் கருப் பொருளுக்கு உவமமாகச் சிறப்பித்து வருவது என்பர் நச்சினார்க்கினியர். இதற்கு அவர் தந்த உதாரணமும் விளக்கமும் வருமாறு:

*விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுள்
துனிசிறந் திழிதரும் கண்ணின்நீர் அறல்வார
இனிதமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு
நனிவிரைந் தளித்தலின் நகுபவள் முகம்போலப்

* இதன் பொருள்: "மேல் விரியும் கதிரையுடைய இள ஞாயிறு அகற்சியையுடைய விசும்பிலே பரவாநிற்க, விடியற் காலத்தே இதழகள் முறுக்குண்ட தலைகள் அம்முறுக்கு நெகிழ்ந்த செவ்விப் பூவிடத்து அழகிய தேனை வரியினையுடைய வண்டுகள் அனைத்துங்கூடி நுகர்ந்து அதனானும் அமையாது, பின்னும் பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியும செல்வம் மிக்க பொய்கையிடத்தே துனி மிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணினுடைய நீர். காமத்தீயாற் சுவறி அறுதலையுடைத்தாய் ஒழுக, அவ்வருத்தத்தைக் கண்டு இனிதாக அமைந்த கணவன், தன் அடியைச் சேர்ந்து இறைஞ்சி மிக விரைந்து அளித்ததாலே சிறிது மகிழ்பவள் முகம்போலப் பசிய இலைக்குள்ளே நின்ற தாமரையினது தனித்த மலர் தனக்கு வருத்தத்தைச் செய்யும் பனி ஒரு கூற்றிலே வடியா நிற்கத் தான் மிகச் செவ்வியின்றி அலரும் குளிர்ந்த துறையினையுடைய நல்ல ஊரனே"—நச்சினார்க்கினியர்.

பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉம் தண்டுறை நல்லூர'' (கலி 71)

''என்பது விரியும் கதிரையுடைய இளஞாயிறுவிசும்பிலே பரவா நிற்க, விடியற்காலத்தே இதழ்கள் முறுக்குண்ட தலைகள் அம்முறுக்கு நெகிழ்ந்த செவ்விப் பூவிடத்துக் கள்ளை வண்டு நுகர்ந்து விளையாடி, அதனானும் அமையாது பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியும் அச்செல்வம் மிக்க பொய்கையுள், பசிய இலைகளுடன் நின்ற தாமரைத் தனிமலர், தனக்கு வருத்தம் செய்யும் பனி ஒரு கூற்றிலே வடியா நிற்கத் தான் மிகச் செவ்வியின்றி அலருந் துறையினையுடைய ஊர என்றவாறு''

''இதனுள் வைகறைக் காலத்து மனைவயிற் செல்லாது, இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி, அதனானும் அமையாது, பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப் பெறாது, சுற்றத்திடத்தேயிருந்து கண்ணீர் வாராநிற்க, நீ ஒரு கால் அளித்தலில் சிறிது செவ்வி பெற்றாளாய் இருக்கும்படி வைத்த தலைவியைப் போல எம்மையும் வைக்கின்றாய் என்று காமக்கிழத்தி உள்ளுறையுவமம் கூறினாள். 'துனிமிகுதலாலே போருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணீர் காமத்தீயாற் சுவறி அறுதலையுடைத்தாய் ஒழுக, அவ்வருத்தத்தைக் கண்டு விரைந்து கணவன் அருளுதலிற் சிறிது மகிழ் பவள் முகம்போல' என்ற ஏனையுவமம், தாமரை மலர் பனிவாரத்தளைவிடும் என்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப் பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. இஃது, ''உடனுறை யுவமம் சுட்டுநகை சிறப்பு எனக், கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'' என்ற பொருளியற் சூத்திரத்திற் சிறப்பென்ற உள்ளுறை''

நச்சினார்க்கினியரின் இவ்விளக்கத்தைப் பார்க்கும்போது சிறப்பு உள்ளுறையாவது, 'உள்ளுறையுவமமாக வரும் கருப் பொருள் செய்திக்கு உவமமாக வரும் பொருளே' என்பது அவர் கொள்கை என அறியலாம்.

ஆய்வு

'சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இது எனக் கூறுதலானே பிறிதோர் பொருள் கொள்ள வைப்பது' என்று கூறிய இளம்

பூரணர் உதாரணம் காட்டாமற் போயினர். ஆனால், அடுத்து வரும்

அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே
(தொல். பொ. பொருளி. 47)

என்னும் சூத்திரத்துக்கு,

''அந்தமில்லாத சிறப்பினாகிய இன்பத்திடத்து உள்ளுறைப் பொருண்மை வருதலும் வகுத்த இயல்பு என்றவாறு''

என உரையெழுதி,

'அந்தமில் சிறப்பு என்பது மேன்மேலும் சிறப்புச் செய்தல்" என அந்தமில் சிறப்பு என்பதற்கு விளக்கமும் தந்து,

*நுண்ணெழில் மாமைச் சுணங்கணி யாகம் தங்
கண்ணினும் மகிழ்செய்யும் எனவுரைத்தும்
அமையார்என்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும் (கலி. 4)

எனவரும் பாலைக்கலிப் பாடலின் வரிகளை யுதாரணமாகத் தந்து,

''என்றவழி இன்பத்தின் கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோற்றுகின்றது''

என்றும் எழுதியுள்ளார்.

தொல்காப்பியர் 'அந்தமில் சிறப்பின்' எனச் சிறப்புப் பற்றிக் கூறியதால் அச்சூத்திரம் சிறப்பு உள்ளுறை பற்றியதாகவ அமையும். ஆனால் உடனுறை உவமம் என்னும் சூத்திரத்துக் கூறிய சிறப்பு பொதுவில் கூறப்பட்டது என்றும், அந்தமில் சிறப்பு எனக் கூறப்பட்டது சிறப்பாகக் கூறப்பட்டது என்றும் கொள்ளலாம்.

இளம்பூரணர் 'அந்தமில் சிறப்பின்' என்னும் சூத்திரம் பற்றி 'எனனுதலிற்றோவெனின் இதுவும் உள்ளுறைப்பாற் படுவதோர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று' என்று பொதுவில் எழுதினாரேயன்றிச் சிறப்பு உள்ளுறை பற்றியது என்று எழுத

* பொருள்: நுண்ணிய அழகிய மாமையாகிய சுணங்கையணிந்த உடம்பு தமது கண்ணுக்கும் மகிழ்ச்சியைச் செய்யும் என்று சொன்னதோடு நில்லாமல் என் அழகிய நெற்றியையும் தடவிக் கொடுப்பர் காதலர்; அவர் நினைப்பது என்ன? அறியேன் என்பாள்.

வில்லை. என்றாலும் சிறப்புள்ளுறைக்கே இச்சூத்திரம் என்ற கருத்தினர் அவர் எனக் கொள்வதில் தவறில்லை.

அவர் காட்டிய 'நுண்ணெழில்' என்னும் கலிப்பாடல் வரிகளில் கருப் பொருளில்லாமையால் உள்ளுறையாகக் கொள்வதற்கில்லை; சிறப்புக் குறிப்பு என்று வேண்டுமானால் கொள்ளலாம.

நச்சினார்க்கினியர் உள்ளுறையைத் தரும் உவமத்துக்குச் சிறப்பாக வரும் உவமையினைச் சிறப்பு உள்ளுறை என்பதும் பொருந்துவதில்லை.

உடனுறை முதலிய நான்கற்கும் உள்ளே உறையும் பொருள் இருத்தல் போல, உள்ளுறை யுவமத்துக்குச் சிறப்புக் கொடுக்கும் உவமைக்கும் உள்ளே உறையும் பொருள் இருத்கல் வேண்டும். அவ்வாறு இல்லாமையாலும், உள்ளுறைக்கு நிலைக்களனாக வரும் கருப் பொருள்களாற் பெறப்படும் பொருளே, அவற்றின் உவமையாக வரும் சிறப்பாலும் பெறப்படும் என்றால் ஒரே பொருளே இரண்டிற்கும் உள்ளுறை என்றல் பொருந்தாமையாலும் நச்சினார்க்கினியர் சிறப்பு உள்ளுறைக்குக் கொண்ட பொருள் பொருத்தம் இல்லை.

'விளையாட்டாயமொடு' என்ற பாடலில்,

'நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும்என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே'

எனவருதலின்—அதாவது புன்னையைச் சிறப்பித்து வருதலின் அப்பகுதி சிறப்பு என்பதற்கு உரியதாகவும், அதன்மூலம் பெறப்பட்ட ''அன்னை பலகாலும் வருவள்; ஆதலின் புன்னையின் நீழல் குறியிடமாக அமைதல் வேண்டா'' என்பது உள்ளுறைப் பொருளாகவும் கொள்ளலாம். இளம்பூரணர் சிறப்பு என்பதற்கு ஏற்ப அமைந்தது இப்பாடல்.

ஒன்றைச் சிறப்பிப்பதன் மூலம் வேறும் ஒரு பொருள் புலப்படுமாயின் அது சிறப்பு உள்ளுறை என்பதே நன்று. அவ்வாறு சிறப்பிக்கவில்லை யென்றாலும் திணைப் பொருள் கெடாது.

*ஆம்பற் பூவின் சாம்பர் அன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே (குறுந். 46)

"பிரிவிடை யாற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது" என்பது திணைப்பொருள்.

"தலைவன் பிரிந்து சென்றமையால் மாலைக்காலமும் தனிமையும் என்னை வருத்துகின்றன. அதே நிலையில் அவர்க்கும் அவை துயர்தரும்; அதனால் அவர் விரைந்துவருவர்; ஆதலின் ஆற்றுவேன்" என்பது பாடலின் கருத்து.

இதில் மாலைக்காலம் சிறப்பிக்கப்படுகிறது. "மனையில் உறையும் குருவிகள் வீட்டு முற்றத்தில் உலரும் பயிர்களை மாந்திப் பின் ஊர்மன்றத்தில் புழுதிகளைக் குடைந்து ஆடிக் காலம் கழித்துப் பின் வீட்டின் இறப்பில் உள்ள தம் இடத்தில் தங்கும் மாலை" என்பது சிறப்பிக்கப்பட்டவாறு. இச்சிறப்பினாற் பெறப்படும் பொருளாவது,

"நம் வீட்டிலிருந்து நல்லறம் செய்த தலைவன்,
மேலும் செய்தற்குப் பிரிந்து பொருளீட்டி நம்வீடு
வந்து மகனுடன் மகிழ்வான்"

என்பது. இது உள்ளுறை யுவமம் போலக் காணப்படினும் மாலைக்காலத்தைச் சிறப்பிப்பதே நோக்கமாதலின் சிறப்பு உள்ளுறையாகும்.

"புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே"

என்று மட்டில் இருந்தாலும் திணைப் பொருள் அமையும். அதனால் 'பிள்ளையொடுவதியும்' என்பது வரையுள்ள பகுதி மாலையைச் சிறப்பிக்கவே வந்தன என்க.

---

* பொருள்: ஆம்பல் மலரின் வாடலையொத்த குவிந்த சிறகுகளையுடைய வீட்டின்கண் தங்கும் குருவிகள், முற்றத்தில் உலரும் தானியங்களைத் தின்று, பொதுவிடத்தின்கண் உள்ள எருவினது நுண்ணிய பொடியைக் குடைந்து விளையாடி, வீட்டிறப்பிலுள்ள இடத்தே தம்முடைய குஞ்சுகளோடு தங்கியிருக்கும் பிரிந்தார்க்குத் துன்பந் தரும் மாலைக்காலமும் தனிமையும் அத்தலைவர் பிரிந்து சென்ற தேயத்தில் இல்லையோ?—உ. வே. சா.

## தொகுப்புரை

உள்ளுறை என்பது அகப்பாடலில் வரும் குறிப்புப் பொருள். அது தெய்வம் ஒழிந்த கருப் பொருள்களை நிலைக்களனாகக் கொண்டு வரும்.

அகப் பாடலில் வரும் கருப்பொருள்களின் நிகழ்ச்சியின் மூலம் குறிப்பால் உணரப்படும் பொருளே உள்ளுறை. அது அக்கருப்பொருள் நிகழ்ச்சி போலவே அமைதல் வேண்டும். அதாவது கருப்பொருள் நிகழ்ச்சியோடு ஒத்து முடிதல் வேண்டும். உடன்பாட்டு நிலையிலேயே முடிதல் வேண்டும்.

உள்ளுறை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐந்து வகைப்படும்.

உடனுறை உள்ளுறை என்பது உடனுறைவது ஒன்று கூற அதன் மூலம் பெறப்படும் பொருள். நச்சினார்க்கினியர் இறைச்சியே உடனுறை என்றது பொருந்தாது. இளம் பூரணர் கூறிய கருத்தே ஏற்புடையது.

உவம உள்ளுறை என்பது கருப்பொருள் நிகழ்ச்சிகள் உவமம் போல அமைந்து அவற்றின் மூலம் ஒத்து முடியுமாறு பெறப்படும் ஒரு கருத்துப் பொருளாகும். உரையாளர் யாவரும் ஒப்பும் கருத்து இது.

சுட்டு உள்ளுறைக்கு இளம்பூரணர் காட்டிய 'தொடிநோக்கி' என்னும் குறள் உதாரணம் ஆகாது. சுட்டிக் கூறப்படும் கருத்து மூலம் பெறப்படும் வேறு கருத்தே சுட்டு உள்ளுறையாகும். அவர் காட்டிய குறளில் உள்ளுறை நிலைக்களனாகிய கருப்பொருள் இல்லை. நச்சினார்க்கினியர் காட்டிய இருவகைச் சுட்டும் பொருந்தும்.

நகையுள்ளுறை என்பது நகையாடும் செய்தியின் மூலம் பெறப்படும் பொருள். இளம்பூரணர் காட்டிய 'அசையியற்குண்டு' எனும் குறள் கருப் பொருளில்லாததால் உதாரணமாகாது. நச்சினார்க்கினியர் கூறியஉதாரணம் பொருந்தும்.

சிறப்பு உள்ளுறை என்பது ஒரு பொருளைச் சிறப்பிக்க அதன்மூலம் பெறப்படும் பொருள். இதற்குப் புன்னைச் செய்தி சிறந்த உதாரணமாகும். நச்சினார்க்கினியர் உள்ளுறையுவமம் தரும் கருப் பொருள் நிகழ்ச்சிக்கு வரும் உவமையே சிறப்பு என்றும், அதனாற பெறப் படுவதே உள்ளுறை என்றும் கூறுவதுபொருத்தாது.

கருப்பொருளாற பெறப்படும்கருத்தே உவமையாலும பெறப்படும் எனபது பொருந்தாது.

## 3. இறைச்சி

இறைச்சி—கருப்பொருள்

கருப்பொருளை இறைச்சி என்னும் சொல்லால் ஆள்வர் தொல்காப்பியர்.

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளிற்கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்ற லான
(தொல். சொல். பெய.42)

புணர்ந்துடன் போகிய கிழவோன் மனையிருந்து
இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும்.
(தொல. பொ. கற்பு.7)

ஆற்றது பண்பும் கருமத்து விளைவும்
ஏவல் முடிவும் வினாவும் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி யென்ப
(தொல். பொ. கற்பு.30)

அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.
(தொல். பொ. பொருள் 27)

என்னும் சூத்திரங்களில் கருப்பொருள் இறைச்சி என ஆளப் பட்டது.

மேலே குறிப்பிட்ட சூத்திரங்களுள் முதற் சூத்திரம் தவிர மற்றைய சூத்திரங்கள் அகத்திணைப் பொருட் செய்திகள் கூறுமிடங்களில் கூறப்பட்டன. முதற் சூத்திரம் பொதுவில் பெயர்கள் இலக்கணம் கூறி வந்த பெயரியல் இறுதியில் கூறப்பட்டது. அம்முதற் சூத்திரப்பொருளை விரிவாக அறிவதன்மூலம் இறைச்சி என்பது கருப்பொருளே என்பதை அறியலாம்.

* 'இறைச்சிப் பொருள்வயின்' என்னும் சூத்திரத்தோடு அதனை அடுத்து வந்த 'திணையொடு பழகிய பெயரலங்கடையே' (தொல், சொல். பெ 43) என்பதையும் சேர்த்து ஒரு சூத்திரம் போலக் கொண்டு பொருள் காணல் வேண்டும்.

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற் பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்ற லான
திணையொடு பழகிய பெயரலங்கடையே

என்பது சூத்திரம்.

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் வழங்கப்படும் சில பொதுப் பெயர்கள் (இயற்பெயர்கள்) உலகவழக்கிலன்றிச் செய்யுள் வழக்கில் எவ்வாறு வழங்கப்படும் என்பதைக் குறிப்பது இச்சூத்திரம்.

கடுவன், மூலன், குமரி, காளை, மீளி, விடலை முதலிய பெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்களாம். கடுவன், மூலன் என்பன உயர்திணை ஆண்பாலுக்கு உரியன. குமரி என்பது உயர் திணைப் பெண்பாலுக்கு உரியது. (னகரவீறும் இகரவீறும் உயர்திணைக்குரியன.) அப்பெயர்களே குரங்கின் ஆண் பெண் இரண்டுக்கும் வழங்கப்படும். (இங்கு னகரவீறு இகரவீறு கருதப் படா). இம்மூன்று பெயர்களும் அகப்பொருள் பற்றிய செய்யுள் களில் ஆளப்படும்போது பொதுப் பெயராகா; அஃறிணைப் பெயராகும். ஏனெனின் அகப்பொருட் செய்யுள்கள் ஐவகை நிலங்களைக் கொள்ளும். குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்பன அவை. அந்தந்த நிலத்திற்கும் விலங்குகள் உரிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்விலங்குகளின் பெயர் இரு திணைப் பொதுப் பெயராக இருந்தாலும் அகப்பொருட் செய் யுளில் நிலத் தொடர்பாக வரும்போது அஃறிணைப் பெயரா கவே ஆளப்படும். கடுவன், மூலன், குமரி என்னும் பெயருடைய குரங்குகள் குறிஞ்சிநிலக் கருப் பொருள்கள். அதனால் அப் பெயர்கள் செய்யுளில் அஃறிணையைக் குறித்த பெயராக வழங் கப்படுமேயன்றி உயர்திணையைக் குறிக்கும் பெயராக வழங் கப்படா.

---

* இது முதல் எழுதப்படும் கருத்து மற்றொன்று விரித்தல் போலக் காணப்படினும், எங்கு ஆளப்பட்டாலும் இறைச்சி என்பது அகப்பாடற் கருப்பொருளையே குறிக்கும் என்பதற்காக விரித்தெழுதப்பட்ட தெனக் கொள்க.

'காளை, மீளி, விடலை என்னும் பெயர்கள் ஆன் இனத்துக்கும் மக்களுக்கும் வழங்கப்படுவன. ஆதலின், அவை பொதுப் பெயர்கள். என்றாலும், அகப்பொருள் பற்றிய செய்யுள்களில் அவை ஆளப்படும்போது உயர் திணைப் பெயராகவே ஆளப்படும். ஏனெனின், குறிஞ்சி முதலிய நிலங்களில் உள்ள மக்களுக்குப் பெயர்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதனால்அவை திணைப் பெயர்கள் அல்லது திணையொடு பழகிய பெயர்கள் எனப்படும். காளை, மீளி, விடலை என்னும் பெயர்கள் பாலை நிலத்து மக்களுக்கு உரிமைப்படுத்தப்பட்ட பெயர்கள். (மகிழ்நன் என்பது மருதத்திணைக்குரிய பெயர்—இப்படியேபிறவும்) அவை அகப் பொருட் செய்யுள்களில் ஆளப்படும்போது திணையொடு பழகிய மக்கட் பெயராகவே ஆளப்படும். அதனால் அவை உயர் திணையின்பாற்படுமேயன்றி அஃறிணையின்பாற்படா.

எனவே இருதிணைப் பொதுப் பெயர்கள் அகப் பொருள் பற்றிய செய்யுள்களில் ஆளப்படும்போது அஃறிணைக்கே உரிமைப்படுத்தப்பட்ட பெயர்கள்—அதாவது ஒவ்வொரு நிலத்துக்கும் உரிமைப்படுத்தப்பட்ட விலங்குப் பெயர்கள் அஃறிணையையே சுட்டி நிற்கும். கடுவன், மூலன், குமரி போல்வன அவை. உயர்திணைக்கே உரிமைப்படுத்தப்பட்ட பெயர்கள் அதாவது குறிஞ்சி முதலிய நிலத்து மக்களுக்குரிமைப்படுத்தப்பட்ட பெயர்கள்—அகப் பொருட் செய்யுள்களில் உயர்திணையையே சுட்டி நிற்கும். காளை, மீளி, விடலை போல்வன அவை.

எனவே அகப் பொருட் செய்யுள்களில் கடுவன், மூலன், குமரி, காளை, மீளி, விடலை, போலும் இருதிணைப் பொதுப் பெயர்கள் திணைமக்கள் பெயராக வரும்போது மட்டும் உயர் திணையைக் குறிக்கும்; அல்லாதபோது உயர்திணையைக் குறிக்காமல் அஃறிணையையே குறிக்கும் எனக் கொள்ளலாம்.

இதுவரை கூறியது கொண்டு தொல்காப்பியர் அகப்பாடலில் வரும் கருப்பொருளை இறைச்சி என்ற சொல்லாலும் ஆள்வர் என்று அறியலாம்.

**இறைச்சி—பெயர்க்காரணம்**

கருப்பொருளுக்கு இறைச்சி எனப் பெயர் வரக் காரணம் யாது? 'இறு' என்பது 'இருக்கச் செய்' என்னும் பொருளது. 'இரு' என்னும் தன் வினைக்கு 'இறு' என்பது பிறவினை. 'ஐ' எனும் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து 'இறை' என்றாயிற்று. 'புறத்திறை' என்ற சொல்லுக்குப் 'புறத்தே இருக்கச் செய்தல்' என்பது பொருளாதலைக் காண்க.

'இறுத்தல்' என்னும் பொருளதான 'இறை' என்பது இறுத்தப்பட்டயாவற்றுக்கும் உரியதாயிற்று. ஒரு சொல்லின் பொருள் வளர்ச்சியில் அச் சொல் அப்படியே இருப்பதும், எழுத்து மாற்றத்தாலோ எழுத்துச் சேர்க்கையாலோ ஒரு பொருளுக்கேயுரியதாதலும் உண்டு. அவ்வாறு 'சி' என்ற ஓர் தொழிற் பெயர் விகுதி எழுத்துச் சேர்த்து 'இறைச்சி' என்றாகி அகப்பாடலில் வரும் கருப்பொருளுக்குரிய பெயராயிற்று.

அகப்பாடல் ஒன்றில் நிலமும் பொழுதும் அமைத்து நிலத்தில் நடைபெறும் உரிப் பொருளாகிய ஒழுக்கத்தைக் கூறும்போது, சில கருத்துக்களைக் குறிப்பாக விளக்குதற்காக இறுத்தப்படுவன உணா, மா, மரம், புள், முதலியனவாகிய கருப்பொருள்கள். ஆதலின் அக்கருப்பொருள்கள் இறைச்சி எனப்பட்டன. அல்லது கருப்பொருள்கள் உட்பொருள் இறுத்தப்படுதற்கு இடமாக அமைதலின் இறைச்சியாயின எனினும் அமையும்.

**இறைச்சி — பொருள்வளர்ச்சி**

கருப்பொருள்கள் இறைச்சி எனக் கூறப்படினும், கருப்பொருளால் உணர்த்தப்படும் பொருளால் வேறும் ஒருபொருள் உணர்த்தப்படுமாயின் அவ்வேறு பொருளே இறைச்சி என்று சிறபபாகச் சொல்லப்படும். இங்கு ஓர் வினா எழுவது இயல்பு. உள்ளுறை என்பதும் கருப்பொருளால் உணர்த்தப்படும் பொருளிலிருந்து உணரப்படும் வேறும் ஒரு பொருளாதலின் உள்ளுறையும் இறைச்சியும் ஒன்றாகும்; அதனால் இறைச்சி என தனிப் பெயர் ஏன்?—என்பது வினா. விடையாகப் பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி கூறுவது வருமாறு:-

* ''வியம்' எனினும் 'ஏவல்' எனினும் சொற்பொருளளவில் ஒக்கும் எனினும், வினைச் சொற்களின் வகைகளாக வியங்கோள் வினை எனவும் ஏவல் வினை எனவும் தனித்தனிப் பெயரிட்டு வகுப்பது தமிழ் இலக்கணம். இறைச்சிக்கும் உள்ளுறையுவமத்துக்கும் கருப்பொருள் நிலைக்களன் பொது என்பதாலேயே வேற்றுமை மறந்து ஒருமைகாண வேண்டுவதில்லை; தங்குதல் உள்ளுறை; உள்ளே உறுமாறு செய்தல்:- என்ற அமைப்பில் கருப்பொருள் அமைப்பிலே குறிப்புப் பொருள் தங்குதல், கருப்பொருட் காட்சியமைத்து அதனுள்ளே குறிப்புப் பொருள் உறுமாறு செய்தல் என இரண்டினிடையே

* தமிழநூல்களில் குறிப்புப் பொருள், பக். 128, நரேந்திர சிவம் பதிப்பகம், செந்தில், தாமுநகர், கோயம்புத்தூர் (1980)

யுள்ள ஒற்றுமை காணலாம். எனினும் வியங்கோள் ஏவல் இரண்டினிடையே வேற்றுமை யுண்டெனக் காண்பது மரபு என உணர்வோர் இறைச்சிக்கும் உள்ளுறைக்கும் வேற்றுமையினைக் காண்டல் வேண்டும். திறத்தியல் மருங்கின் தெரியுமோர்க்கு வேற்றுமை புலப்படாமற் போகாது.''

பேராசிரியர் கூற்றிலிருந்து வியங்கோளும் முன்னிலையேவலும் ஏவற் பொருளுணர்த்தலின் ஒன்றாயினும் வேறுபாடு கருதித் தனித்தனிப் பெயரிட்டதுபோல், கருப் பொருட் கருத்து மூலம் பெறப்படும் குறிப்புப் பொருளே உள்ளுறையும் இறைச்சியும் என்றாலும் சிறு வேறுபாடு கருதித் தனித்தனியாகக் கூறப்பட்டன என்பது அறியலாம்.

ஒரு பாடலைச் சுட்டி, இப்பாடலில் வந்த இறைச்சியாது என்ற வினாவுக்குக் கருப் பொருளை மட்டில் குறிப்பது விடையாகாது. கருப்பொருள் கருத்தைக் கூறி அதன் மூலம் பெறப்படுவதான ஒரு கருத்தைக் கூறுவதே விடையாகும். அதனால் இறைச்சி என்பது முதலில் கருப்பொருளையும், பின்னர் அதன் கருத்துப் பொருளையும், அதன்பின்னர் அக்கருத்துப் பொருளால் பெறப்படும் குறிப்புப் பொருளையும் குறிக்கும் என்று கொள்ளல் வேண்டும். இதுவே தொல்காப்பியர் கூறியுள்ள சூத்திரங்களின் மூலம் அறிய வருவது. *(இறைச்சி = கருப்பொருள்→அதன் கருத்து→அதனால் பெறப்படும் குறிப்புப் பொருள்)

## இறைச்சியின் இலக்கணம்

**ஆசிரியர் கூற்று**

> உள்ளுறுத் திதனொடு ஒத்துப்பொருள் முடிகென
> உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம (அகத். 48)

என உள்ளுறை யுவமத்துக்கு ஆசிரியர் இலக்கணம் கூறியது போல, இறைச்சியின் இலக்கணத்தை,

> ''இறைச்சி தானே உரிப்புறத் ததுவே''
> (தொல். பொ. பொருள்35)

என்னும் சூத்திரத்தால் கூறினார். ('பொருட்புறத்ததுவே' என்பது நச்சினார்க்கினியர் பாடம்; பொருள் மாறுபாடில்லை.)

---

* வடநூலாரும் 'தொனி' என்பது முதலில் சொல்லையும் பின் அது தரும் பொருளையும் பின் அப்பொருளாற் பெறப்படும் குறிப்புப் பொருளையும் குறிக்கும் என்பர்- இந்திய எழிற்கலை, பக். 112, பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு (1977)

**இளம்பூரணர்**

இளம்பூரணர், "இறைச்சிப் பொருள் என்பது உரிப் பொருளின் புறத்தே தோன்றும் பொருள் என்றவாறு" என உரையெழுதி, "அஃதாவது கருப் பொருளாய் நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகிவருவது" என விளக்கமும் எழுதினார். உதாரணமாக,

> நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
> நீரினும் ஆரள வின்றே சாரல்
> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந். 3)

என்பது காட்டி,

> "என்ற வழி நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப்பூவும் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க"

எனப் பொருத்தமும் காட்டினார். இவர் காட்டியதிலிருந்து அச்சூத்திரம், கருப்பொருளானது எந்த இடத்தில் வந்தால் இறைச்சி எனப்படும் என்னும் வினாவுக்கு விடையாக அமைந்துளது என்பது புலப்படும். திணைப்பொருள் (உரிப்பொருள்) கொண்டுவரும் அகப்பாடலில் நாடு, ஊர், துறைகளுக்கு அடையாக வரும் கருப்பொருள் இறைச்சி எனப்படும்; அப்படி வாராத மரம் முதலிய பொருள்கள் இறைச்சி எனப்படா என்பது.

**நச்சினார்க்கினியர்**

இச்சூத்திரம் இறைச்சி என்பது எப்படி அமைய வேண்டும் என்பதைக் கூறுவதாகக் கொண்டார் நச்சினார்க்கினியர். ஓர் அகப்பாடலில் அது கருதும் துறை (உரி)ப் பொருளுக்குத் தானும் உதவியாக அமையுமாறு சொல்லப்படும் கருப்பொருட் கருத்தே இறைச்சியாகும் என்பது அவர் கருத்தாகும்.

அவ்வாறு திணைப் பொருட்கு உபகாரமாக வருவது மட்டுமல்லாமல் ஒரு திணைப் பொருள்தரும் பாடலின் இடையே வரும் ஒரு கருத்துக்கு உபகாரப்படுவதும் இறைச்சியாம் என்பர் அவர்.

இறைச்சி என்பதற்கு நான்கு இலக்கணம் கூறுவர் அவர். 1. உள்ள பொருள் ஒன்றனுள்ளே தோன்றுவது, 2. செவ்வனம் கூறப்படாதது, 3. தலைவன் கொடுமை கூறும்வழிப் பெரும் பான்மையும் தோன்றுவது, 4. பொருளுக்கு உபகாரப்படுவது என்பன அவை. (பொருளியல் 35) இலக்கியம் கண்டு இவ்வாறு அவர் கூறினார். தொல்காப்பியர் இப்படிக் கூறவில்லை. 'பொருள் புறத்தது' என்ற அளவிலேயே கூறிச் சென்றார். இனி உதாரணங்கள் காண்போம்.

1. *பாஅ லஞ்செவிப் பணைத்தாள் மா நிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட ஆறுமயங்கு அருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும் யாமுமக்குச்
சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்
நீளிரு முந்நீர் வளிகலன் வவ்வலின்
ஆள்வினைக் கழிந்தோர் போற லல்லதைக்
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவம்
நாளும் கோள்மீன் தகைத்தலும் தகையே (கலி: பாலை4)

எனவரும் பாலைக் கலிப்பாடலில் இறைச்சி வந்தவாறு காணலாம்.

'பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனைத் தோழி செல வழுங்குவித்தல்' என்பது அப்பாடலின் திணைப் பொருள். மேல் வரிகளில் யானை, தூறு, மா என்பன கருப்பொருள்கள். அவை இறைச்சி எனப்படும். 'யானைகளும் மறவர்களும் அடிக்கடி மாறிமாறி நெருங்கிப் புதர்கள் பக்கமாகப் போவதும் வருவது மாக இருத்தலால் அப்புதர்கள் சிதைந்து வழியாகிப் பழையவழி தெரியாமல் மறையும்படியான சுரம்' என்பது அவ்விறைச்சி களைக் கொண்டு கூறப்பட்ட பொருள். தலைவன் பொருள் ஒன்றையே சிறந்ததாகக் கருதிப் பிரிய நினைக்கின்றான் என்பது தலைவனின் கொடுமை கூறுதல். அதனைக் கூறிச் செல்லாத படித் தடுத்தல்—செலவழுங்குவித்தல் தோழியின் எண்ணம். அவள் முடிவாக 'நீ செல்லின் செல்லும் நாளிலேயே இவள் இறப்பள் ஆதலின் செல்லற்க' என்றாள். அவள் கூறிய முடிந்த கருத்துக்கு அதாவது செலவழுங்குவித்தற்குத் துணை செய்வது (உபகாரப்படுவது) போலச் சுரவழியும் தூறு அதர்ப்பட்டு மயங்கி எவ்வழி போதற்குரியது என்பது தெரியாமல் தடுக்கும்' என்ற

* பொருள்: தத்தம் பகுதிகளையும் அழகிய செவிகளையும் பெரிய கால்களையும் மதமயக்கத்தையும் உடைய யானைக் கூட்டங்களும் பிறவிலங்குகளும் மறவர்களும் அடிக்கடி வந்துபோவதால் புதர்கள் சிதைந்து வழி களாக, அதனால் முன்னிருந்த வழிதெரியாமல் மயக்கம் தரும் அரிய சுரத்தைக் கடந்து சென்று நீர் திரட்டும் பொருளினும் யாங்கள் உமக்குச் சிறந்தவர்கள் என்பதை அறிந்தீராயின், கடலில் காற்று மரக்கலத்தைச் சிதற அடித்தலால் தாம் கொண்ட முயற்சி வீணானதற்கு மனம் அழிந்தோர் போல, யாங்கள் இருத்தலல்லது கேளாகிய பெருந்தகையாகிய நின்னோடு என்ன சொல் வம். நும்மை நாளும் கோளும் தடுத்தாலும் தடுக்கும்.

வேறு ஒரு கருத்தும் குறிப்பாகக் கொள்ளக் கிடக்கின்றது. இது திணைப் பொருளுக்கு உபகாரப்பட்டவாறு.

"இதனுள் குறிஞ்சிக்குரிய இறைச்சியால் காட்டின் கொடுமை கூறிச் செலவழுங்குவித்தலின் அது திணைப் பொருட்கு உபகாரப்பட்டு நின்றவாறு காண்க" என நச்சினார்க்கினியர் எழுதியது காண்க.

2. இனி ஒரு பாடலின் முழுமையுமான திணைப் பொருளுக்கு உபகாரப்படுதலேயன்றி ஒரு பாடலின் இடையில் வரும் ஒரு பொருளுக்கும் உபகாரப்படுவதும் இறைச்சியாம் என்னும் இரண்டாவது கருத்துக்கு உதாரணம்.

இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை (கலி. குறிஞ்சி 5)

இது, தலைவியும் தோழியும் தலைவனின் கொடுமை கூறிப் பாடுவதாக அமைந்த 'பாடுகம்வாவாழிதோழி' எனத்தொடங்கும் வள்ளை (உரல்)ப் பாட்டில் உள்ள ஒரு பகுதி. இதில் அருவி என்பது கருப்பொருள்; அதாவது இறைச்சி. தலைவியானவள் 'தலைவன் சூள்பேணான் பொய்த்தான்' எனக் கொடுமை கூறி, 'அவன் மலை இலங்கும் அருவியுடையது' என முடித்தாள். இது பொருள். 'மலை இலங்கும் அருவித்து என்றாலும், சூள் பேணான் பொய்த்தான் மலையின் அருவி இலங்குதல் கூடாது; ஆனால் இலங்கும் தன்மையதாயிற்று; இஃதென்ன வியப்பு!' என்று மேலும் ஒரு பொருள் தோன்றும்படி அமைந்தது இப் பாடற்பகுதி. 'என்ன வியப்போ' என்பது தலைவனின் கொடுமையையே மிகுதிப்படுத்தி நின்றது. இது திணைப் பொருளின் உள்ளே கூறப்பட்ட ஒரு பொருளுக்கு உபகாரப்பட்டு வந்த இறைச்சி.

இவ்வாறு திணைப் பொருளுக்கும் திணைப்பொருளின் இடையே வரும்(உள்ளிடத்துப்)பொருளுக்கும் உபகாரப்படுமாறு வேறோர் பொருள் உள்ளடக்கியதே இறைச்சியெனப்படும் என்பதற்கேற்பவே 'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே" என்ற சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர்,

"கருப்பொருட்கு நேயந்தான், கூறவேண்டுவ
தோர் பொருளின் புறத்தே புலப்பட்டு அதற்கு
உபகாரப்படும் பொருள் தன்மையுடையதாம்"

எனவுரையெழுதினார். 'கருப்பொருட்கு நேயம்' என்றது கருப் பொருட் கருத்தாற் பெறப்படும் குறிப்பாகும். கூறவேண்டுவ தோர் பொருள் என்றது திணைத்துறைப் பொருள். அதன்

புறத்தே புலப்படுவதாவது அத்திணைத்துறைப்பொருள் உள்ளீருக்க வெளிப்படையாகத் தோன்றும் கருப்பொருட் கருத்து. அதற்குபகாரப்படும் பொருள்தன்மையாவது, கூறவேண்டுவதான திணைத்துறைப் பொருட்கு உபகாரப்படுவதான குறிப்புப் பொருள் தன்மை. அத்தன்மையுடையதே 'கருப்பொருளின் நேயம்' என அவர் உரைக்கு விளக்கம் கொள்க.

ஆய்வு

'இறைச்சி தானே பொருட்புறத்ததுவே' என்னும் சூத்திரம் இறைச்சி எங்கு வரும் என்பதைக் கூறுவதாக இளம்பூரணரும், எப்படி வரும் என்பதைக் கூறுவதாக நச்சினார்க்கினியரும் கொண்டனர். கருப்பொருள் உள்ளுறையுவமம் முதலியவற்றில் வரும்போதுகூட நாடு, ஊர், துறை முதலியவற்றுக்கு அடையாக வருவதாலும், புறப்பாடல்களிலும் அடையாகியே வருவதாலும், அடையாகவன்றி வேறு வகையில் வாராமையாலும் இளம்பூரணர் கருத்து ஏற்பதற்கில்லை. அதனால் இறைச்சி என இச்சூத்திரத்திற் கூறியது வெறும் கருப்பொருள் என்ற கருத்தில் இல்லை; கருப்பொருளிடமாகப் பெறப்படும் குறிப்புப் பொருளையே குறித்ததாகும் என நச்சினார்க்கினியர் கொண்ட கருத்தே ஏற்புடையதாகும்.

"இறைச்சி என்பது கருப்பொருளாகி நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வரும்" என இளம்பூரணர் கூறியதில் அடையாகி வருதலாவது வெறும் அடையாகிவருதல் என்றில்லாமல் கருத்துடன் அடையாகி வருதல் என்று கொள்ளல் சிறக்கும்.

> 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடு' என்றதில் குறிஞ்சி, தேன் என்பன கருப்பொருள். குறிஞ்சிப்பூநாடன், தேன் நாடன் எனக் குறிஞ்சியும் தேனும் அடையாக வரவில்லை; ஒரு கருத்தைக் கொண்டுவந்துள்ளன. இப்பாடலின் பொருள் நட்பின் பெருமையை வியப்பது. சிறிய குறிஞ்சிப் பூவால் பெரிய தேன் இழைக்கும் நாடு என்றது, தொடக்கத்தில் கொண்ட நட்புப் பெரிதாகியது என்று நட்பின் பெருமையையே சிறப்பிக்கின்றது. அதனால் இளம்பூரணர் காட்டிய உதாரணத்தினால் இறைச்சி என்பதற்கு வெறும் கருப்பொருள் என்று பொருள் கொள்ளாமல் 'அடையாகி வரும் கருப்பொருட் கருத்து' எனக்கொண்டால் நச்சினார்க்கினியர் கருத்தும் இளம்பூரணர் கருத்தும் ஒன்றெனப்படும்.

## இறைச்சியிற் பிறக்கும் பொருள்

### இளம்பூரணர்

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே
(பொருளியல் 36)

என்ற சூத்திரத்திற்கு இளம்பூரணர்,

''இறைச்சிப் பொருள்வயின் தோன்றும் பொருளும் உள; பொருள் திறத்தியலும் பக்கத்து ஆராய்வார்க்கு என்றவாறு''

எனப் பொருள் எழுதி, அதற்கு உதாரணமாக,

* ஒன்றேன் அல்லன் ஒன்றுவன்; குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்மார்
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே (குறுந். 208)

என்ற பாடல் காட்டி விளக்கமும் எழுதினார். இப்பாடலின் திணைத்துறைப் பொருள் ''வரைவு எதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலைமகனோடு ஒன்றுமாறு என் எனக் கவன்ற தோழிக்கு உடன்போதற் குறிப்பினளாய்த் தலைமகள் கூறியது'' என்பதாம்.

இப்பாடலில் தலைவன் நாடு சிறப்பிக்கப்படுகின்றது. இதில் வந்த கருப்பொருள்கள் களிறு, வேங்கை, மலர் என்பன.

''தம்முள் மாறுபட்டுப் பொருகின்ற களிறுகளால் மிதிக்கப்பட்டுத் தாழ்ந்த வேங்கை மரத்தில் குறவர் மகளிர் தம் கூந்தலில் வைத்துக்கொள்வதற்காக ஏறிப்பறிக்கும் வழக்கம் இன்றி நின்றபடியே பறித்துக்கொள்ளும்படியாகப் பூக்கள் மலரும் நாடன்.''

---

* பொருள்: தோழீ! யான் தலைவனோடு பொருந்தாத இயல்பினை யுடையேன் அல்லேன்; பொருந்தும் இயல்பினேன். ஆயினும், நொதுமலர் வரைவொடு புகுவதாகியதொரு காரணத்தினால், மலையினிடத்து ஒன்றோடொன்று பொருகளிறுகளால் மிதிக்கப்பட்ட நெரிந்த அடியையுடைய வேங்கை மரம், குறமகளிர் தம்முடைய கூந்தலின் கண்ணே அணிந்துகொள்ளும் பொருட்டு ஏறவேண்டாமல் நின்றபடியே மலர்களைக் கொய்யும்படித் தாழ்ந்து மலர்தற்கிடமாகிய நாட்டையுடைய தலைவனொடு பொருந்தேன்-உ. வே. சாமிநாதய்யர்.

என்பது கருப்பொருளாற் கூறப்பட்ட பொருள் ஆகும். இது உவமமாக இதன்மூலம் பெறப்படும் பொருளை நேர்க்குநேர் காணலாம்.

| உவமம் | | குறிப்புப்பொருள் |
|---|---|---|
| 1. பொருகளிறுகள் | — | தலைமகன் வரைவிற்கு உடன்படுவாரும் மறுப்பாருமாக மாறுபட்ட தலைவனின்சுற்றத்தார். |
| 2. வேங்கை | — | தலைமகன் |
| 3. பொருகளிறுமிதித்தல் | — | வரைவுடன்படாதார் தலைவனை அவமதித்தல் |
| 4. ஏறிப்பறிக்குமாறு உயர்ந்த வேங்கை மிதிப்புண்டு நின்று பறிக்கத் தாழ்ந்தது | — | அடைதற்கு அரியனாய் இருந்த தலைவன் அவமதிப்பால் நம்மாட்டு இரங்கி எளியனாய் வருகிறான். |

இப்படிக் காணுமாறு கருப்பொருளும் குறிப்புப்பொருளும் ஒத்து முடிந்தன. கருப்பொருள்கள் இறைச்சியாதலின் அவற்றின் செயல் மூலம் பெறப்பட்ட குறிப்புப் பொருள் இறைச்சியிற் பிறக்கும் பொருளாயிற்று. இது உள்ளுறையுவமம் ஆகும்.

**நச்சினார்க்கினியர்**

நச்சினார்க்கினியர், 'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே' என்ற சூத்திரத்துக்கு,

> ''கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்படும் பொருட்டாதலேயன்றி, அக்கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள; அஃது உள்ளுறை யுவமத்தின் கூற்றிலே அடங்குமாறு போல நடக்குமிடத்து, அவ்வுள்ளுறையுவமம் அன்று, இஃது இறைச்சி என்று ஆராய்ந்துணரும் நல்லறிவுடையோர்க்கு''

என உரையெழுதினார். 'இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பது உள்ளுறையுவமம் என்னும்படித் தோன்றும்; ஆனால் உள்ளுறையுவமமன்று' என்பது நச்சினார்க்கினியர் கருத்து. உதாரணம் வருமாறு:-

1. * கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கடிமயிற் கலாவத் தன்னஇவள்
ஒலிமென் கூந்தல் உரியவாம் நினக்கே (குறுந். 225)

''இதனுள் தான்கெட்ட விடத்து உதவின உதவியை அரச வுரிமை யெய்திய மன்னன் மறந்தாற்போல, நீ இரந்து துயருற்ற காலத்து யான் தலைவியை நின்னோடு கூட்டிய செய்ந்நன்றியை மறவாது இன்று நீ வரைந்து கொள்வையாயின் இவள் கூந்தல் நினக்குரிய என்ற வழி உவமையும் பொருளும் ஒத்து முடிந்தமையின் முன் நின்ற 'நாட' என்பது உள்ளுறையுவமம் அன்றாய் இறைச்சியாம்; என்னை?

''தன் கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற தினையைத் தான் உண்டு அழிவு செய்கின்றாற் போல நீ நின்கருமம் சிதையாமற் பார்த்து எமக்குயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மையிறந்து படுவித்தல் ஆகாது என்று உவமை யெய்திற்றேனும், பின்னர் நின்ற பொருளோடியையாது இவ்வுவமம் உள்ளுறையுற்றுப் பொருள்பயவாது இறைச்சியாகிய நாடு என்பதனுள்ளே வேறோர் பொருள் தோற்றுவித்து நின்றதேயாதலின். முலைமாந்த என்றது தன் கருமம் சிதையாமற் பார்த்து என்னுந்துணையன்றி உள்ளுறையுவமப் பொருளை முற்ற உணர்த்தாமையுணர்க.'' என்பது அவர் விளக்கம். இக்குறுந்தொகைப் பாடலில் கன்று, பிடி, தினை என்பன கருப்பொருள்கள். இவை உவம உள்ளுறை போல் வருமாறு :—

* பொருள் : யானைக் கன்று தனது பாலுள்ளமுலை குடித்து நிற்ப, வீட்டின் முன்னிடத்துள்ள தினைப்பயிரைப் பெண்யானை உண்ணுதற்கு இடமாகிய பெரிய மலைகளையுடைய நாடனே! தான்வறுமையுற்ற காலத்துப் பிறராற் பெற்று மகிழ்ந்த உதவியை அரசு கட்டிலாகிய சிறப்பைப் பெற்று மறந்துவிட்ட அரசனைப் போல, நீ யாம் செய்த நன்றியை மறந்து பொருந்தாயாகி அதனை நினைந்து வரைந்து கொள்வையாயின், இத் தலைவியினுடைய மெல்லிய சிறப்பையுடைய ஆரவாரிக்கும் மயிலினது பீலியைப் போன்ற தழைத்த மெல்லிய கூந்தற் பகுதிகள் நினக்கே யுரிமையுடையனவாகும்- உ.வே. சாமிநாதய்யர்.

| உவமம் | | குறிப்புப் பொருள் |
|---|---|---|
| பிடி | — | தலைமகன் |
| கன்று | — | தலைவன் கருமம் |
| தினை | — | தலைவி |
| பிடிதன் கன்றுக்குப் பால் ஊட்டுவது | — | தலைவன் தன் கருமத்துக்குச் சிதைவுவராமல் பார்த்துக் கொள்வது |
| பிடிபிறர்க்கு உயிராகிய தினையையுண்ணுதல் | — | தோழிக்கு உயிராகிய தலைவியைத்துயருறுத்தல் |
| பிற உயிர்க்கு அழிவு | — | தோழிக்கு இறப்பு |

இப்படி உவமநிலையிற் பொருள் கொள்ளும்படி முறையாக அமைந்திருந்தாலும் திணைப் பொருளுடன் தொடர்பற்று இருக்கிறது. எவ்வாறெனின், 'நாட' என்பதில் உள்ள 'நாடு' என்பதற்குரிய செய்தியாக அது அமைந்து விடுகின்றது. அடுத்து வருவது, தோழி தலைவன் தலைவியை வரைந்து கொள்ளுமாறு வற்புறுத்தும் பொருளுடையது. தனித்தனி இரு வேறுபட்ட கருத்துகளாக இருத்தலின் தொடர்பில்லை. 'வெறிகொள் இனச் சுரும்பு' என்ற பாடலிலும் 'வீங்கு நீர் அவிழ் நீலம்' என்ற பாடலிலும் சொல்லப்பட்ட கருத்துகள் ஒவ்வொன்றாகவே அமைய அவற்றின் மூலம் உவமை வாயிலாகக் குறிப்புப் பொருள்களை அறிகிறோம். அதனால் இறைச்சியிற் பிறக்கும் பொருள் உள்ளுறை உவமப் பொருள்போலத் தோன்றினாலும் திணைப் பொருள் வேறாகவும் தான் வேறாகவும் அமையுமேயானால் அது உள்ளுறையுவமம் ஆகாது. இறைச்சியிற் பிறக்கும் பொருளேயாம்.

2. வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்து
ஏந்து மருப்பின் இனவண்டு இமிர்பூதும்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்
ஐவன வெண்ணெல் அறையுரலுட் பெய்திருவாம்
ஐயனை ஏத்துவாம் போல அணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவாம் நாம் (கலித். குறிஞ்சி. 7)

''இதனுள் புலவு நாறியும் பூ நாறியும் தீதும் நன்றுமாகிய இறைச்சியாகிய உலக்கைகளால், தலைவனைப் பாடும் பாட்டோடே கலந்து கூறத்தகாத தெய்வத்தையும் பாடுவாம் என்னும் பொருள்பயப்பச் செய்த இறைச்

சியிற் பொருளே பயத்தலாலும், இரண்டுலக்கையானும் பயன் கொண்டாற் போல அவை அன்பே பாடுதலால் பயன் கொள்ளாமையின் உள்ளுறையுவமம் அன்மையும் காண்க''

இது, நச்சினார்க்கினியர் தரும் இரண்டாவது வகை இறைச்சியிற் பிறக்கும் பொருளாகும். மேல் வந்த கலிப்பாடலின் முழுமைக்கும் உள்ள திணைப் பொருளாவது :—

''வரைவு நீட ஆற்றாளாயின விடத்துத் தோழி தானும் தலைவியும் வள்ளைப் பாடலுள் முருகனைப் பாடுவார் போல இருவர்க்கும் ஏற்கத் தலைவனைப் பாடத் தலைவி ஆற்றினமை தோழி தன்னுள்ளே கூறு வாளாய்த் தலைவன் சிறைப்புறமாகக் கூறியது''

என்பதாகும். மேற்காட்டிய பாடல் வரிக் கருத்தாவது :—

''வேங்கையைத் தொலைத்த யானைமருப்பினால் இயன்ற உலக்கையும் சந்தன மரத்தினால் இயன்ற உலக்கையும் கொண்டு ஐவன நெல்லைப் பாறையாகிய உரலிற் பெய்து குற்றி முருகனைப் பாடுவது போலத் தலைவனைப் பாடுவோம் நாம்''

என்பதாம். தலைவன் வரைவு நீட்டித்த போது அது பொறாமல் வள்ளைப்பாட்டு மேற்கொள்ள எண்ணித் தொடங்கும் போது, தலைவன் கொடுமையும் நன்மையும் புலப்பட வேண்டிப் புலால் நாறும் மருப்பும், மணநாறும் சந்தனமும் இறைச்சிகளாகக் கொள்ளப்பட்டன. அவற்றால் ஆன உலக்கைகளால் நெல்லைக் குற்றிப் பயன் கொண்டது போல தலைவனை இருவரும் பாடு தலாலே பயன் கொண்டார்கள் என்றால் (அதாவது வரைந்து கோடல் நிகழ்ந்தது என்றால்) உவமம் சரியாக அமையும்; ஆனால் இன்னும் வரைந்து கோடற் பயன் நிகழவில்லை. அதனால் உவமை ஒத்து முடியாமையின் உவமை போலத் தோன் றினும் உள்ளுறையுவமம் என்னாது இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்றே கொள்ள வேண்டும்.

உள்ளுறுத் திதனொடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம் (அகத். 48)

என்றார் ஆசிரியராதலின் ஒவ்வா உவமம் வந்தால் இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்றே கொள்ளபபடும்.

நச்சினார்க்கினியர் காட்டிய இருவேறு உதாரணங்கள் மூலம் அவர் கருத்தாக நாம் அறியவருவன :

1 இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பது, உள்ளுறை யுவமம் போலக் காணப்பட்டாலும் திணைப் பொருளுக்கு மாறு பட்டுத் தான் வேறு திணைப் பொருள் வேறு என்னும்படி அமை வது. இது முதல் உதாரணத்தாற் பெறப்படுவது.

2 உள்ளுறையுவமம் போல உவமையும் பொருளுமாக வரும்போது முடிவில் ஒத்துவராமல் மாறுபட்டு அதாவது எதிர் மறையில் வருவது இறைச்சியிற் பிறக்கும் பொருளாம். இது இரண்டாம் உதாரணத்தாற் பெறப்படுவது. முதல் உதாரணத் திலும் ஒத்து முடியாமை காணலாம். கன்று தன் பயமுலை மாந் தப் பிடி தினையுண்டு அழித்தல் போல, நீ நின் கருமம் சிதை யாமற் பார்த்துக் கொண்டு தலைவியை வருத்துவதன் மூலம் அவளையும் என்னையும் இறந்து படுவித்தாய் என ஒத்து முடிந் தால் உள்ளுறையுவம மாகிவிடும்; இறந்து படுவித்தல் ஆகாது என முடிதலின் ஒத்து முடியவில்லை. அதனால் இறைச்சியிற் பிறக்கும் பொருள் ஆயிற்று என்னலாம்.

**என் கருத்து**

**இறைச்சி**

ஆசிரியர் தொல்காப்பியர் 'இறைச்சிப் பொருள்வயின்' (பெயரியல் 42), 'புணர்ந்துடன் போகிய கிழவோன்' (கற்பியல் 7), 'ஆற்றது பண்பும்' (கற்பியல் 29), 'அன்புறு தகுந' (பொருளி யல் 37) என்ற சூத்திரங்களில் இறைச்சி என்ற சொல்லைக் கருப் பொருளில் ஆண்டுள்ளமையால் அகப்பாடல்களில் வரும் கருப் பொருள் இறைச்சி எனப்படும்.

ஆனால் 'இறைச்சிதானே பொருட் புறத்ததுவே' என்ற சூத்திரத்தில் இறைச்சி என்பது கருப்பொருளாகாது. ஏன்எனின் இச்சூத்திரம் இறைச்சி என்பதற்கு இலக்கணம் கூறுவது. கருப் பொருளாவன யாவை என்பதைத் 'தெய்வம் உணாவே' (அகத் 18) என்ற சூத்திரத்தில் கூறிவிட்டமையால் கருப்பொருள் இலக்கணம் தனியாகக் கூறத்தேவையில்லை. இளம்பூரணர் கொள்கைப்படி இச்சூத்திரம் கருப்பொருள் எங்கே வரும் என்பது கூற வந்ததாயின் திணைக்குரிய முதற்பொருள் எங்கேவரும் என் பதும் கூறல்வேண்டும். ஆசிரியர் கூறாமையால் இச்சூத்திரம் இளம்பூரணர் கருத்துக்கு ஏற்றதன்று.

எனவே, இச்சூத்திரத்திற் கூறப்பட்ட இறைச்சி என்பது, கருப்பொருளைக் குறிக்காமல், கருப்பொருளின் நிகழ்ச்சி மூலம் அதாவது கருப்பொருளால் உணர்த்தப்படும் கருத்து மூலம் குறிப் பாக உணரப்படும் பொருளையே குறிக்கும் என்னல் வேண்டும் அதற்கு ஓர் உதாரணம் :-

''கருங்கோட்டு மலர்ப்புன்னை மலர்சினை
மிசைதொறும்
சுரும்பார்க்கும் குரலினோ டிருந்தும்பி யியைபூத
ஒருங்குடன் இம்மென இமிர்தவிற் பாடலோடு
அருட்பொருள் மரபின்மால் யாழ்கேளாக்
கிடந்தான் போல்
பெருங்கடல் துயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்''
(கலி. நெய்தல் 1)

எனத் தொடரும் நெய்தற்கலிப் பாடலின் திணைப் பொருளாவது :-

''காப்பு மிகுதிக்கண் ஆற்றாத தலைவி தலைவன்
பாற்சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியது''

என்பதாம். இப்பாடலில் உள்ள தரவாகிய மேலே கூறப்பட்ட ஐந்து வரிகளின் பொருளாவது:—

''கரிய கொம்பினையுடைய புன்னை மரத்தில் மலர்கின்ற கிளைகள் தோறும் வண்டுகள் ஒலிக்கும் குரலுடன் தும்பி எனும் வண்டுக் கூட்டமும் ஒன்று சேர்ந்து ஒலிக்க இரண்டு ஒலிகளும் சேர்ந்து 'இம' என்று ஒலிப்பதால், பெறுதற்கரிய பரம்பொருளாகிய திருமால் பாடலொடு யாழிசையும் கேட்டுப் பள்ளி கொண்டான் போலப் பெரிய கடலும் ஒலியடங்கி உறக்கம் கொள்ளும் படியான வண்டொலிக்கும் கானல்''

என்பதாம்.

இத்தரவு வரிகளிற் கண்ட கருப்பொருள்கள் புன்னையும் வண்டும். அவற்றின் செயல்கள் புன்னைமலர்தலும், அது மலரும் காலம் பார்த்துத் தேன் நுகர்தற்கும் நுகர்ந்தும் வண்டுகள் ஒலித்தலும் ஆம். கருப்பொருளால் கூறப்பட்ட கருத்தாவது, ''புன்னை மரங்கள் மலரும் காலம் பார்த்துத் தேன் நுகர்தற்காகவும் நுகர்ந்தும் வண்டுகள் ஒலிக்கின்றன'' என்பது.

இந்நிகழ்ச்சியைக் கண்ட தலைவி இற் செறிக்சப்பட்டு ஆற்றாத நிலையில், 'மலரும் செவ்வி பார்த்துத் தேன் நுகரும் வண்டுபோலே நாம் நம் தலைவனால் காமச் செவ்வி பார்த்து நுகரப் பெற்றேம் இல்லையே' என்று வருந்தினாள். மேலும், பாடலும் யாழும் கேட்டுக் கடலும் கடல் சார்ந்த பொருள்களும் துயில்வதைப் பார்த்த தலைவி, 'நாமும் இசைகேட்டுத் தலைவனிடத்தே துயிலப் பெற்றேம் இல்லையே' என்றும் வருந்தினாள்.

இத்தரவு வரிகளில் வந்த புன்னை, வண்டு, கடல் ஆகியவற்றைக் கொண்டு கூறப்பட்ட கருத்துகள் கருப்பொருட் கருத்துகள்.

அவற்றைக் கொண்டு தலைவி, மனதில் கொண்ட வருத்தம் கருப்பொருட் கருத்துகளைக் கொண்டு கருதப்பட்டன. எனவே, கருப்பொருட் கருத்துகள் பாடலில் வெளிப்படையாக உள்ளன. தலைவியின் வருத்தங்கள் குறிப்பாக உணரப்படுமாறு வெளிப் படாமல் அமைந்தன. இவை இறைச்சி.

முழுப்பாடலின் பொருள் நெஞ்சை நோக்கி வருந்திக் கூறிய தாக அமைந்ததற் கேற்பப் புன்னை வண்டு கடல் ஆகிய கருப் பொருள்களின் கருத்துகளாற் பெறப்பட்ட இறைச்சியும் வருத்தம் பற்றியதாகவே அமைந்தது. அதனால் இவ்விறைச்சி திணைப் பொருட்கு உபகாரப்பட்டதாக அமைந்தது.

இத்தரவு வரிகளின் உரைக்கீழ் இறைச்சி விளக்கம் கூறிய நச்சினார்க்கினியர்,

> ''மேலே வருகின்ற இரங்கற் பொருட்கு, முன்நின்ற கருப் பொருள் இறைச்சிப் பொருளாக நின்று உபகாரப்பட்டு நின்றது. இஃது 'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே' என்பதனான் உணர்க''

என்றெழுதினார். இதனால் இறைச்சி என்பது கருப்பொருளன்று என்பதும், கருப்பொருட் கருத்தால் பெறப்படும் குறிப்புப் பொருளே என்பதும் நச்சினார்க்கினியர் கருத்து என்பது பெறப் படும். இதுவே சிறந்த பொருளாகும்.

'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே' என்ற சூத்திரத்தின் உரையாக நச்சினார்க்கினியர் எழுதியதின் கருத்தாவது, ''இறைச்சி என்பது திணைப் பொருளின் உட்பட்ட குறிப்புப் பொருளாகும்'' என்பதேயாம். 'பொருட்புறம்' என்பதற்குப் 'பொருளிடம்' என்பது பொருள். ஊரில் இருந்தான் என்பதை 'ஊர்ப்புறத்திருந்தான்' என்று கூறுவதைப் போலக் கொள்க.

### இறைச்சியிற் பிறக்கும் பொருள்

இறைச்சி என்பது கருப்பொருட் கருத்தின்மூலம் பெறப் படும் குறிப்புப் பொருள் என்று கண்டோம். அக் குறிப்புப் பொருளிலிருந்து வேறொரு கருத்துப் பெறப்படுமாயின் அக் கருத்து இறைச்சியிற் பிறக்கும் பொருள் எனப்படும்.

> இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
> திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே (பொருளியல்36)

என்பது தொல்காப்பியம்.

இளம்பூரணர் இறைச்சியிற் பிறக்கும் பொருள் உள்ளுறை உவமமாகும் என்ற கொள்கையுடையவர். அது பொருந்தாது.

இறைச்சி என்பது கருப்பொருள் என்றும், இறைச்சியிற் பிறக்கும் பொருள் உள்ளுறை யுவம மென்றும் கொண்டால், உடனுறை சுட்டு நகை சிறப்பு உள்ளுறைகளும் கருப்பொருள் மூலமாகவே பெறப்படுவனவாதலின் உள்ளுறையுவமம் மட்டும் இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்றல் பொருந்தாது. அன்றியும் உவமவுள்ளுறை என்பது உவமமும் பொருளும் ஒத்து முடிந்தாலும் ஒவ்வாது முடிந்தாலும் உவமவுள்ளுறையாம் என்பது பெறப்படும்; ஆதலாலும் அது பொருந்தாது. மேலும் உள்ளுறை யுவமத்துக்கு 'உள்ளுறுத்திதனொடு' என்ற சூத்திரத்தால் இலக்கணம் கூறியதுபோல 'இறைச்சிதானே' என்ற சூத்திரத்தால் இறைச்சிக்கு இலக்கணம் கூறியதாலும் அது பொருந்தாது.

நச்சினார்க்கினியர் 'இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே' என்ற சூத்திரத்துக்கு,

> ''கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்படும் பொருட்டாதலேயன்றி அக்கருப் பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள; அஃது உள்ளுறை யுவமத்தின் கூற்றிலே அடங்குமாறு போல நடக்குமிடத்து, அவ்வுள்ளுறை யுவமமன்று இஃது இறைச்சியென்று ஆராய்ந்துணரும் நல்லறிவுடையோர்க்கு''

என எழுதியவுரையில் இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்று குறித்தது பொருந்தாது.

கருப்பொருட் கருத்தால் பெறப்படும் குறிப்புப் பொருளினை இறைச்சி எனக் குறித்த ஆசிரியர், அடுத்துக் கூறும் சூத்திரத்தில் இறைச்சி என்பதைக் கருப்பொருள் என்னும் பொருளில் கூறினார் என்பது ஏற்பதற்கில்லை. அதனால் இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பதற்குக் 'கருப்பொருட்' கருத்தால் பெறப்படும் குறிப்புப் பொருளிலிருந்து பெறப்படும் வேறு ஒரு பொருள் என்பதுவே கருத்தாகும். அதற்கேற்பது ஓர் உதாரணம் காணலாம்.

'அகவினம் பாடுவாம் தோழி' எனத் தொடங்கும் குறிஞ்சிக் கலியின் (4) தரவாகிய முதல் ஏழுவரிகளைக் கொண்டு காணலாம்.

அப்பாடலின் திணைப் பொருள் ''தோழியும் தலைமகளும் தலைமகனது மலையை வாழ்த்திப் பாடுகின்ற வள்ளைப் பாட்டில், தோழியியற்பட மொழியத் தலைமகள் இயற்பழித் தமை தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வரைய வருகின்றமை தோழி தலைமகட்கு உரைத்தது'' என்பதாகும்.

''அகவினம் பாடுவாம் தோழி அமர்க்கண்
நகைமொழி நல்லவர் நாணு நிலைபோல்
தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உரீஇ
முகைவளர் சாந்துரல்முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்
பகையில்நோய் செய்தான் பயமலை யேத்தி
அகவினம் பாடுவாம் நாம்''

என்பது அப்பாடலின் தரவு. இதன் கருத்தாவது:—

'தோழீ! நாம் நம் தலைவனைப்பற்றி நம் மனப் போக்குக்கு ஏற்றபடி அழைத்துப் பாடுவோம்' என்று தலைமகளிடம் தோழி கூறினாள். அதற்குத் தலைமகள் 'ஆம் அப்படியே அழைத்துப் பாடுவோம்; நல்லவர் தம்மைப் பற்றிப் பிறர் கூறும் புகழ் மொழி கேட்டு நாணத்தால் தலைகுனிதல்போல முற்றிய காரணத்தால் சாய்ந்திருக்கும் தினைக்கதிரை யுருவிச் சந்தன உரலில் பெய்து யானைத்தந்த உலக்கையால் மாறிமாறிக் குற்றிக்கொண்டே மருந்தில்லாத நோயை நமக்கு உண்டாக்கியதலைவனின் பயனுள்ள மலையைப் பற்றிப் பாடுவோம் என்றாள்'

என்பது. இதில் உள்ள கருப்பொருள்கள் தினைக்கதிர், யானை மருப்பு, சந்தனமரம் என்பன. இவை கொண்டு சொல்லப்பட்ட கருத்து, 'தினைக்கதிரை யுருவிச் சந்தன மர உரலில் பெய்து யானை மருப்பாகிய உலக்கையால் மாறி மாறிக் குற்றுவோம்'' என்பது. இதன் மூலம் பெறப்படும் இறைச்சியாவது,

''தினைக் கதிரைச் சந்தன வுரலிற் பெய்து மருப்பு உலக்கையால் குற்றிப் பயன் கொள்வோம்; அதுபோலத் தலைவன் பயமலைச் செய்திகளைத் தலைவன்பால் வைத்துப் பாடிப் பயன் கொள்ளாது போயினேம்''

என்பது. இதுவன்றி, தினைக்கதிரைப் பெய்யும் உரல் சந்தன மரத்தால் ஆனது என்பதால், சந்தன மரம் மணநாறும் தன்மையுள்ளதுபோல தலைவன் நம்மை மணந்து புகழமிகும் பண்பினன் ஆயிலனே என்னும் இறைச்சி புலப்படுகின்றது. இதன்மூலம் தலைவனைப் பழித்தலால் 'இயற்பழித்தல்' என்னும் குறிப்பும் பெறப்படுகின்றது. புலால் நாறும் மருப்பை முத்தார் மருப்பு என்பதால், வரைந்து பயன்படாத தலைவனை வெறுமனே புகழ்ந்து பாடுவோம் என்னும் குறிப்பு புலப்படுகின்றது. இதன் மூலம் தலைவனைப் புகழ்தலால் 'இயற்பட மொழிதல்' என்னும் குறிப்பும் பெறப்படுகின்றது. இவ்வாறு இறைச்சிப்

பொருள்மூலம் தோன்றும் பிறிதொரு கருத்துப் பொருளே இறைச்சியிற் பிறக்கும் பொருளாம்.

**தொகுப்புரை**

இறைச்சி என்பது அகப்பாடலில் குறிப்புப் பொருளுக்கு இடனாய் வரும் கருப்பொருள்.

கருப்பொருள் குறிப்புப் பொருளுக்கிடனாக இல்லையெனின் அப் பெயர் பெறாது.

குறிப்புப் பொருளை உள்ளுறை என்னலாம். உள்ளுறையும் பொருள் உள்ளுறை எனப்படும்போது இறைச்சிப் பொருளும் உள்ளுறையேயாகும். எனினும் உள்ளுறை வேறாகவும் இறைச்சி வேறாகவும் சொல்லப்பட்டன. எதுபோல் எனின் ஏவற் பொருளில் வருவனவற்றை முன்னிலையேவல் என்றும் வியங்கோள் என்றும் தனித்தனிப் பெயர் கொடுத்ததுபோல.

குறிப்புப் பொருள் உணருமாறு அகப்பாடலில் இறுத்தப் பெறுதலின் கருப்பொருள்கள் இறைச்சியாயின.

இறைச்சி என்னும் சொல், கருப்பொருளையும் அது தரும் பொருளையும் அதனால் பெறப்படும் பொருளையும் முறையே பொருள் வளர்ச்சி முறையில் குறிக்கும்.

இறைச்சி எங்கே தோன்றும் என இளம்பூரணர் கூறுவதை விட, எப்படித் தோன்றும் என நச்சினார்க்கினியர் கூறும் கருத்தே 'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே' என்ற சூத்திரக் கருத்தாகும்.

இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பது உள்ளுறை யுவமமாகும் எனும் இளம்பூரணர் கருத்தைவிட இறைச்சியிற்பிறக்கும் பொருள் வேறு உள்ளுறையுவமம் வேறு என நச்சினார்க்கினியர் கூறுவதே சிறந்தது.

## 4. உள்ளுறையுவமமும் இறைச்சியும் பற்றிப் பிறர் கூறுவன.

### நம்பியகப் பொருள் விளக்கம்

**உள்ளுறை**

*உள்ளுறை யுவமம் உய்த்துணர் வகைத்தாய்*
*புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்*

(சூ. 238)

**இறைச்சி**

கருப்பொருட் பிறக்கும் இறைச்சிப் பொருளே (சூ. 240)

**மாறனலங்காரம்**

**உள்ளுறை**

உணர்வதற் கரிதாம் உவமப் போலி
புணர்திறம் வினையே பொருண்மெய் யுருவெனப்
பிறப்பொடும் ஐந்தாம் பெற்றித் தாகிச்
சிறப்புறு திணைகளிற் றெய்வதம் ஒழிந்த
கருப்பொருள் களனாகக் கட்டுரை பயின்றும்
உவமையோ டெதிருள் ளுறுத்தலுற் றயலாய்
உவமச் சொற்றொகல் ஒருதலை யாகியும்
அன்பின தளவாம் அகத்திணை யிருவயின்
இன்ப துன்பத் திசைதிரிந் திசையாத்
துணைவன் துணைவி தோழி செவிலி
யிணையெனும் பாங்கன் பாணன்என் றிவராற்
கொள்கையின் வருங்குறிப்புரைத் தாகும் (மாற. 123)

**இறைச்சி**

கருப்பொருள் களனாங் கட்டுரை பயின்ற
பொருட் புறத் தனவாம் இறைச்சிப் பொருளணி

(ஷை. 176)

இச்சூத்திரங்களைக் கொண்டு உள்ளுறை இறைச்சிகளின் முழு விளக்கம் காண இயலாது. இவை தொல்காப்பியச் சூத்திரங்களை வைத்துக் கூறப்பட்டவை.

இனி ஆய்வாளர் கருத்துகளைக் காண்போம்.

**கா. சுப்பிரமணிய பிள்ளை**

*''ஒன்றை யுள்ளடக்கி வெளிப்படாமற் கூறும் உள்ளுறை என்பது கருப்பொருளமைந்த இறைச்சியும், கருப் பொருளாற் கூறும் உவமமும், மற்றொன்றைச் சுட்டிக் கூறும் சுட்டும், நகைப்பாடி ஒன்று நினைத்துப் பிறிதொன்று கூறுதலும், பொது வாகக் கூறவேண்டியதைச் சிறப்பித்துக் கூறுதலும் என ஐவகைப் படும்''

இவர் உள்ளுறை யுவமத்துக்கும் இறைச்சிக்கும் வேறுபாடு காட்டாமல் சென்றனர். கருப்பொருளமைந்த இறைச்சிக்கும்

* பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொரு ளதிகாரக் கருத்து. பக். 149, சைவ சித்தாந்த நூற்பதிப் புக் கழகம், சென்னை (1968)

கருப்பொருளாற் கூறப்படும் உவமம் என்பதற்கும் விளக்கம் இல்லை. 'உடனுறையுவமம்' என்னும் சூத்திரத்துக்கு உரையே.

K. S. விசுவநாதசாஸ்திரியார்

* ''உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு என உள்ளுறை ஐந்து என்பதும், அவை செய்யுட்கு இன்றியமையாதன என்பதும், அவற்றுள் இறைச்சியும் உள்ளுறை யுவமமும் அகத்திற்கே சிறப்புரிமை பூண்டன என்பதும், அதனாலேயே அவை முதற் கண்நிறுத்தப் பெற்றன என்பதும், முன்னைய மூன்றும் அவ் வரையறைக்குட்பட்டன வல்ல என்பதும், உள்ளுறைக் குறிப்பு கள் பலவும் இம்மூன்று வகையுள் அடங்குவனவே என்பதும், இறைச்சியும் உள்ளுறையுவமமும் கூடப் பொதுவியல்பு கொண்டு நோக்குமிடத்து ஏனைய மூன்றனுள் அடங்குவனவே என்பதும், சுட்டு முதலிய மூன்றற்கும் விளக்கந்தருவன பொருளியல் முதலிய மூன்று இயல்களுமே என்பதும், இவ்வுள்ளுறைகளைப் பொருளணிகளோடு ஒத்தனவாக எண்ணி விடுதல் தகாது என்பதும், உள்ளுறைகள் தரத்தில் உயர்ந்தன என்பதும்...... உணர்த்தப்பட்டனவாம்''

சாஸ்திரியார் உடனுறையும் இறைச்சியும் ஒன்றே எனும் கருத்தினர். இது முன்னரே மறுக்கப்பட்டது. சுட்டு நகை சிறப்பு என்னும் மூன்றும் அகத்திற்கேயுட்பட்டன என்னும் வரையறை யில்லை என்பதும் ஏற்பதற்கில்லை. அம்மூன்றும் உள்ளுறை எனப்படுதலால்-உள்ளுறை அகத்துக்கேயுரியதாதலால் அகத்துக் கேயுரியன அவை என்பதில் ஐயம் வேண்டா. இறைச்சியும் உள்ளுறை யுவமமும் பின்னர் உள்ள சுட்டு நகை சிறப்பு ஆகிய மூன்றில் அடங்கும் என்பதும் தேவையில்லை. ஆசிரியர் தொல் காப்பியர் உள்ளுறை ஐந்து என வகைப்படுத்தியதால் என்க. இப்படி ஒன்றை ஒன்றில் அடக்குவதாயின் யாவும் குறிப்பில் அடங்கிவிடும்.

ந. சுப்பையா பிள்ளை

† ''ஓர் அகப் பொருட் செய்யுளில் சில அடிகளில் வரும் கருப் பொருள்களாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள், அச்செய்யு

---

* செந்தமிழ், தொகுதி 50 பகுதி 1-3. (1954)

† தஞ்சைவாணன் கோவை மூலமும் குன்றத்தூர் அஷ்டா வதானி சொக்கப்ப நாவலர் உரையும். (பக். 285) யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியீடு, புதுக்கிய இரண்டாம் பதிப்பு (1956)
திருக்குறள் அணிநலம்—இ. சுந்தரமூர்த்தி (பக். 57) சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு (1971)

ளின் மற்றைய அடிகளாற் பெறப்படும் பொருளுக்குதவியாகி அதனோடியைந்து ஒரு பொருள் பயந்தால் அஃது உள்ளுறை யுவமமாகும். ஈண்டுக் கருப்பொருளாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் இல்லையாயின் அச்செய்யுளின் கருத்து முற்றுப் பெறாமலும் நன்கு விளங்காமலும் நிற்கும்.

அங்ஙனமன்றி அக்கருப்பொருளாற்பெறப்படும் உள்ளுறைப் பொருள், மற்றைய அடிகளாற் பெறப்படும் பொருளை நன்கு விளக்குதற்கு உதவியாகாமல் அதனோடு ஒருங்கு ஒத்து இயையாது வேறொரு பொருள் தோற்றுவித்து நின்றால் அஃது இறைச்சியாகும். ஈண்டுக் கருப்பொருளாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் இல்லாவிடினும் செய்யுளின் கருத்து முற்றுப் பெற்றும் நன்கு விளங்கியும் நிற்கும். நுண்ணறிவுடை யோர்க்கே இவற்றின் வேறுபாடுணரவும் செய்யுட்களில் அமைந்தவாறு காணவும் இயலும்''

பிள்ளையவர்கள் கூற்று வே. வேங்கடராசுலு ரெட்டியார் கருத்தோடு ஒத்துளது. விளக்கம் ஆண்டுக் காண்க.

**லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்**

* உள்ளுறையுவமைகளை இயற்கை வருணனைகள் என்று கருதி விட்டால், அவ்வுவமைகள் அமைந்த பாடல்களின் உயிர்ப் பொருள்கள் புலப்படா. அப்பாடல்கள் சுவையற்றன ஆகிவிடும். எனவே, உள்ளுறைப்பொருள் பாட்டின் உயிர்ப் பொருள் என்பது விளங்கும்.

இனி உள்ளுறையுவமத்துக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறு பாடுகளை நுண்ணிதின் உணர்ந்து கூறியோர் கருத்துகளைக் காண்போம்.

**வே. வேங்கடராசுலு ரெட்டியார்**

† ''வெளிப்படையாகக் கூறியுள்ள பொருள் ஆண்டைக்கு வேண்டுதலின்றி, அதனோடு ஒப்பாகக் கொள்ளப்படும் உட் பொருளே இயைபுடையதாய் இருக்குமாறு கூறப்படுவது உள் ளுறையுவமம்''

''இறைச்சிப் பொருளாவது சொற்பொருட்குப் புறத்தே தோன்றுங் குறிப்புப் பொருள் என்பது. சொற் பொருள் ஆண் டைக்கு இயைபுடையதாய் இருக்கும்''

* தொல்காப்பியச் செல்வம் (பக். 89) முத்தையா நிலையம், 477 பூந்தமல்லி நெடுஞ்சாலை, வேப்பேரி சென்னை-7. (1970)

† கரந்தைக் கட்டுரை—இறைச்சிப் பொருள்-பக் 188-197 கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் (1938)

'வீங்கு நீர் அவிழ்நீலம்' என்னும் மருதக்கலிப் பாடலில் (1) "புனலணி நல்லூர்' என்பது வரை கூறப்பட்ட பகுதி உவமையாக அமைந்துளது. அவ்வுவமையாற் கொள்ளப்படுவது உள்ளுறை. உவமைப்பகுதிப் பொருள் உலகில் நிகழ்வது அன்று. லெ.ப.கரு இராமநாதன் செட்டியார் கூறுவதுபோல அது ஒரு வருணனை. அவ்வருணனை இப்பாடலின் இன்றியமையா இடம் பெறுவ தில்லை. அதன் உள்ளுறைப் பொருளே இடம் பெறுவது. அவ் வுள்ளுறைப் பொருளே பாடலுக்கு இயைபுடையது. ஆதலின் இரெட்டியாரின் உள்ளுறை விளக்கம் சிறப்புடையதே.

அதுபோலவே, 'இலங்கும் அருவித்தே' என்னும் வரிகளில் வந்த இறைச்சிப் பொருள் 'பாடுகம் வாவாழி தோழி' என்னும் குறிஞ்சிக் கலிப்பாவில் (5) வந்துளது என்றாலும் அவ்விறைச்சிப் பொருளைக் கருதாமலும் 'இலங்குமருவித்தே' என்னும் வரி களுக்கு வெளிப்படைப் பொருளை மட்டும் கொண்டு முடிக் கலாம். அதனால் இறைச்சிப் பொருள் பாடற்பொருளுக்கு இயைபுடையதாய் இருக்கும் என்னும் விளக்கமும் சிறப் புடையதே.

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

* ''உள்ளுறை : தொடர் உருவகமே உள்ளுறை. உள் ளுறையில் உள்ளுறுத்தமைத்த குறிப்பு ஒவ்வொரு கூறிலும் இருக்கும்.

''பரத்தையரோடு தொடர்பு கொண்டுள்ள தலைவனைப் பற்றித் தலைவியின் நினைப்பும் உணர்வும் எத்தகையன என் பதைச் சங்க இலக்கியம் பல தொடர் உருவகங்களால் புலப் படுத்தியுள்ளது. வெளிப்படையாக வெட்டொன்று துண்டிரண் டாய்க் கண்ணோட்டமின்றி அறைந்து பேசிவிடுமளவிற்குத் தலைவி பாங்கற்றவளல்லள்; பண்பட்டவள். ஆயினும் போற்றா வொழுக்கம் புரிந்த இழிதகவினைச் சுட்டி உணர்த்தாமலும் இருக்க முடியவில்லை; தலைவனின் ஊரை வருணித்துச் சொல்லு வாள் போலக் குறிப்பொடு பேசுகிறாள். 'தனக்கேயுரியதாகிய தாமரைக் குளத்தை விடுத்து வெளியேறுகிறது மிடுக்கொடு முருடேறிய எருமை. சேறும் நீரும் குழம்பிய அளறிலே பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடியை மேய நாடிப் போகிறது. அங்கே யுள்ள மலர்களோ சின்னஞ்சிறியவை; தேனற்றன. இத்தொடர் உருவகத்தில்.

---

* தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், ம.ரா.போ. குருசாமி, பக். 122, விற்பனை உரிமை : தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை. (1980)

| | | |
|---|---|---|
| எருமை | — | தலைவன் |
| தாமரைக்குளம் | — | உரிமைக் குடும்பம் |
| தாமரை | — | தலைவி |
| தேன் | — | தலைவிபாற்பெறும் இன்பம் |
| அளறு (சேறு) | — | பரத்தையர் சேரி |
| கொடி, தளிர், சிறுமலர் | — | பரத்தையரும் அவரைச் சார்ந்து தோழியரும் |

......இத்தகைய தொடர் உருவகமே உள்ளுறை யெனச் சொல்லப்படுகின்றது''

* இறைச்சி : எதிரொலியாக வருவதே இறைச்சி

''சொல்லிச் சென்றபடி மீண்டுவாராத தலைவனைப் பற்றி நினையும் தலைவி, அவன் மலையில் வீழும் அருவியைப் பார்க்கிறாள்; வளம் செறிந்த கழனிகளையும் பொழில்களையும் பார்க்கிறாள். இவற்றைப் பார்த்து அவள் புலம்பும்போது, செயலற்றுக் கலங்கும் அப்பேதையின் இதயக் குமுறலை நாம் கேட்க முடிகிறது. 'இந்த உலகத்தில் பொய்தான் எப்படிச் செழித்துச் சிறக்கிறது பார்த்தாயா' எனப் புலம்பும் அவள் நெஞ்சக் குமுறலின் குறியீடுகளே இங்கு வந்த இயற்கைக் காட்சிகள். இவ்வியற்கைக் காட்சிகள் இவ்வாறு குறியீடுகளாக இருப்பதோடு அமைவதில்லை. அதன் மேலும் அக்காட்சிகளில் வேறொரு உட்குறிப்பு அடித்தளமாக எழுந்து படிக்கின்றவர்களின் இதயத்தை மெல்லென வருடுகின்றது. அந்த மறு எதிரொலியால் ஓர் உறுதி ஏறபடுகின்றது. 'சூள் பேணான் பொய்த்தான் மலையில் இப்படி வளம் இருக்க முடியுமா?' வளமார்ந்த காட்சிகளிலிருந்தே தலைவன் பொய்த்தல் அறியான் என்ற குறிப்பும் கிடைக்கிறது. இப்படி எதிரொலியாக வருவதே இறைச்சி.''

தெ. பொ. மீ. அவர்களின் விளக்கம் சிறப்புடையனவே. உவம வாய்பாட்டை உருவகமாகக் கொண்டார் அவர்.

இறைச்சி எதிரொலியாக வருவது என்றது சிறந்த விளக்கமாகும்.

'இலங்கும் அருவித்து' என்னும் வரிகளில் மலை அருவி கருப்பொருள். 'அது சூள்பேணான் பொய்த்தான் மலையில் இருப்பது. இலங்குவதாகவுள்ளது' என்பது கருப்பொருளாற் கூறப்பட்ட வெளிப்படைப் பொருள். இதனிடமாக-இதற்குப் புறம்பாக-'சூள்பேணான் பொய்த்தான் மலையாக இருக்கவும் அருவியுடையதானது எப்படி? இது என்ன வியப்போ' என்பது

* தமிழ்நூல்களில் குறிப்புப்பொருள், பக். 121. (1980)

பெறப்படும் குறிப்புப் பொருள். இக்குறிப்புப் பொருளே இறைச்சி. எனவே தெ. பொ. மீ. கூறியது போலக் கருப் பொருளின் கருத்து முதலில் அடித்தவுடன் எழும் மணியோசை போன்றது. அதன் மூலம் பெறப்பட்ட குறிப்புப் பொருள் அவ் வோசையின் எதிரொலியாகும்.

'என்ன வியப்போ' என்ற குறிப்புப் பொருளிலிருந்து ஓர் குறிப்புப் பொருள் புலப்படுகின்றது. அதாவது 'சூள்பேணான் பொய்த்தான் மலை இலங்கும் அருவியுடையதாகாது. இலங்கும் அருவி யுடையதாய் இருத்தலால் அவன் சூள்பொய்த்தற் குரியன் அல்லன்' என்பது. 'என்ன வியப்போ' என்ற குறிப்பு தலைவியி னுடையது. அதனால் அவள் தலைவனை இயற்பழித்தவளா னாள். 'என்ன வியப்போ' என்ற குறிப்பினால் பெறப்படுவது 'இயற்பழித்தல்' என்பது. 'சூள்பொய்த்தற்குரியன் அல்லன்' என்ற குறிப்பு தோழியினுடையது; அதனால் அவள் 'பொய்த்தற் குரியன் அல்லன்' என்று தெளிவாக,

> ''பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
> அஞ்சல் ஓம்பென்றாரைப் பொய்த்தற் குரியனோ
> குன்றகல் நன்னாடன் வாய்மையிற் பொய்தோன்றின்
> திங்களுள் தீத்தோன்றி யற்று'' (கலி. குறிஞ்சி. 5)

என்று இயற்பட மொழிந்தாள்.

எனவே, 'மலையிலங்கும் அருவித்து' என்ற கருப் பொருட் கருத்திலிருந்து 'என்ன வியப்போ' என்ற கருத்து மணியடித்த வுடன் எழும் ஓசையின் மூலம் எழும் எதிரொலி தோன்றுவது போன்றது என்றும், அதுவே இயற்பழித்தல் என்ற குறிப்பைத் தருதலின் அக்குறிப்பு எதிரொலி மேலும் ஒரு எதிரொலியை எழுப்புவது போன்றது என்றும், மலை இலங்கும் அருவித்தாக லின் தலைவன் சூள் பொய்யான் என்ற குறிப்பும் உடன்பெறு தலின் அக்குறிப்பு மேலும் எழும் எதிரொலி போன்றது என்றும் கொள்ளலாம்.

இவ்வாறு வரும் இறைச்சியிற் பிறக்கும் பொருள்களை வீசி தரங்க நியாயத்தின்பாற்படுத்துவர் நியாய நூலார். ஒரு குளத்தில் சிறு கல் எறிந்தால் அக்குளநீர் முதலில் கல்லின் தாக்குதலால் சிறிது குழிந்து விலகும். பின் அதுவே அலை அலையாகச் செல்லும். அதுபோல ஒரு தொடர் ஒரு கருத்தைத் தெரிவிக்க அதன் மூலம் ஒன்றல்லது பல கருத்துக்கள் தொடர்ந்து பெறப் படுமாயின் அது வீசிதரங்க நியாயத்தால் பெறப்படுவதாகும்.

**ரா. சீநிவாசன்**

* "உள்ளுறை: உவமைக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தல்; அது உள்ளுறையுவமம் எனக் கொள்ளப்படும்.

இறைச்சி: குறிப்புப் பொருளுக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தல்; அது இறைச்சி எனக் கொள்ளப்படும்."

இவ்வாறு கூறுவது உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேற்றுமையை முழுமையாகக் கூறுவதாகாது. ஏன்எனின் நச்சி னார்க்கினியர், 'இறைச்சியாவது திணைப் பொருளுக்கு உபகாரப் படுவது' என்றார் ஆதலின். இறைச்சியிற் பிறக்கும் பொருள் ஒருவகையில் உள்ளுறையுவமம் போலக் காணப்படுதலின் அங்கு உவமைக்குத் தலைமையும் சிறப்பும் தொடுத்தே கூறவேண்டி யிருத்தலும் காணலாம். அன்றியும் தலைமையும் சிறப்பும் கொடுத்தல் என்பது கூறுவார் கோட்பாட்டுக்கு உரியது. உள் ளுறையும் இறைச்சியும் வேண்டுமென்றே புலவனால் உள்ளுறுத் தப்படுவன ஆதலின் அவன் பாடலில் உள்ளுறைக் குறிப்புப் பொருளும் இறைச்சிக் குறிப்புப்பொருளுமே தலைமையும் சிறப்பும் பெறுவன.

**சோம-இளவரசு**

†"உள்ளுறையுவமம் என்பது கருப்பொருளின் அடிப் படையில் உரிப்பொருளின் தொடர்பால் விளங்குவது.

இறைச்சி என்பது உரிப்பொருளின் அடிப்படையில் கருப் பொருள் தொடர்பால் விளங்குவது"

இவர் கூற்று,

"உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்

என்ற சூத்திரத்துக்கும்,

இறைச்சிதானே பொருட்புறத்ததுவே என்ற சூத்திரத்தின் நச்சினார்க்கினியர் உரைக்கும் விளக்கக் குறிப்பாக அமைந்துளது.

**ஔவை சு. துரைசாமிப் பிள்ளை**

இறைச்சி என்பது கருப்பொருள் என்றும் அதனிடமாகப் பிறப்பது உள்ளுறையென்றும் உள்ளுறை தவிர இறைச்சி என்பதொரு குறிப்புப் பொருள் இல்லையென்றும் கூறுவர் ஔவை. துரைசாமிப் பிள்ளை.

---

* சங்க இலக்கியத்தில் உவமைகள். (பக்- 230) அணியகம், 22 செல்லம்மாள் தெரு, சென்னை-30 (1973)

† இலக்கணச் சிந்தனைகள், இறைச்சி, (பக். 123) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர் (1973)

*''இறைச்சி என்பது தொல்காப்பியனார் பிறாண்டுக் கூறும் குறிப்பு மொழிக்கண் அடங்குதலின் இறைச்சி யென வேறு கூறல்மிகையாம். மேலும், அவர்க்கு அது கருத்தாயின் உள்ளுறைப் பொருள்கோளைக் கூறு மிடத்தே இதனையும் உடன் கூறியிருப்பார். அவ்வாறு இறைச்சியென வேறே விதந்து கூறாமையின் இறைச்சிப பொருள்கோள் என ஒன்றைத் தொல்காப்பியனார் கூறினார் எனக் கோடல் உண்மையாகத் தோன்ற வில்லை.

''இறைச்சிதானே உரிப் (பொருட்) புறத்ததுவே' என்னும் நூற்பாவின் பொருள் யாதெனில், எடுத்தோதப்படும் உரிட்பொருட்கு நிலைக்களமாய் விளங்கும் இயற்கைக் காட்சியில் உள்ள கருப்பொருள் அனைத்தும் அதற்குப் புறமாம் என்றும், முதற்பொருளைச் சேர்ந்த காலத்துக் கும் உரிப்பொருட்கும் உள்ள இயைபுபோலக் கருப் பொருட்கும் உரிப் பொருட்கும் நெருங்கிய தொடர் பில்லை யென்றும் கூறுதற்கு, ஆசிரியர், 'இறைச்சிதானே உரிப் (பொருட்) புறத்ததுவே' என்றார். ஒரோவிடத் துக் கருப்பொருளாய விலங்கு மரம் கொடி செடி முதலியவற்றின் காட்சி உரிப்பொருள் நலத்தை மிகு விப்பதுண்டு. அதுபற்றி 'அன்புறு தகுந' என்ற நூற்பா வில் தொல்காப்பியனார் உரைத்தார். பிற்கால உரை காரர்கள் இறைச்சியென வேறுபட நிறுத்திக் குழறு படை செய்துள்ளனர். பின்வந்தோர் உரைகாரர் கூற்றை ஆசிரியர் கூற்றாகக் கருதி உள்ளுறைபோல இறைச்சியும் வேறொரு பொருள்கோள் முறையாகக் குறித்தனர்''

இறைச்சி என்பது தொல்காப்பியர் பிறாண்டுக் கூறும் குறிப்பு மொழியில் அடங்கும் எனின் உள்ளுறையும் அடங்குமே?

உள்ளுறைப் பொருள்கோள் கூறுமிடத்தே இதனைக் கூற வில்லையென்பது பொருந்தாது. உள்ளுறையில் கூறிய உடனுறை என்பது இறைச்சியே என நச்சினார்க்கினியர் கூறியிருத்தலால் அவர் கொள்கைப்படி இறைச்சி உள்ளுறை கூறிய இடத்தில் கூறப்பட்டதாகி விடுகிறது. 'இறைச்சிதானே' 'இறைச்சியிற் பிறக்கும்', 'அன்புறுதகுந' என மூன்று சூத்திரங்கள் இறைச்சி பற்றியே கூறியிருத்தலின் தனித்துக் கூறவில்லையென்பது பொருந்தாது.

---

* ஐங்குறுநூறு உரை: முன்னுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு (1957)

அன்றியும், அவர் ஐங்குறுநூறு 177 ஆம் பாடலாகிய 'தவறிலராயினும்' என்னும் பாடலின் உரையில்,

> ''பாட்டிடைப் பொருட்கு ஒத்து முடியும் பொருள் உள்ளுறையுவமம் எனவும், அப்பொருட்குப் புறம்பாய் வேறுபடக் காண்பது இறைச்சியெனவும் வேறுபாடு தெரிந்து கொள்க. நறுமணம் கமழும் நெடுங் கோட்டு முண்டகம் ஒருகால் நெருங்கினும் முள்ளுடைமையால் கொளற்கு அரிதாமாறுபோல உடனுறையினும் என்னால் இவளை உடன்படுவித்தல் இயலாது எனத் தோழி கூறியதாக இறைச்சி பெறப்படுமாறு காண்க''

என எழுதியதில் உள்ளுறையுவமம் வேறு இறைச்சி வேறு எனக் கொண்டு கூறியமையால் இறைச்சி என்பது ஒன்றில்லை என்னும் இவர் கருத்து ஏற்பதற்கில்லை.

**இரா. தண்டாயுதம்**

*''உரிப் பொருளின் புறத்தே நின்று அதன் கருத்தைச் சிறப்பித்து நிற்பது இறைச்சி எனப்படுகின்றது. இங்கு உயிரினங்களின் அன்பு பெரிதும் காட்டப் பெறும். பிரிவுக்காலத்தில் வழியில் உயிரினங்களையும் அவற்றின் அன்பையும் கண்ட தலைவன் தலைவியின் நினைவு வந்து விரைவில் திரும்புவான் என்று தோழி ஆற்றுப்படுத்தும்போது இறைச்சி பாடலில் இடம் பெறும்.

''உள்ளுறை யுவமம் கருப்பொருளைச் சார்ந்து அமைய, இறைச்சி உரிப்பொருளைச் சார்ந்தே வரும்''

உள்ளுறையுவமம் கருப்பொருளைச் சார்ந்து அமையும் என்று இரா. தண்டாயுதம் கூறியது, 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக் கொள்ளும்' எனத் தொல்காப்பியர் கூறியதை நோக்கி. இறைச்சியும் கருப்பொருளைச் சார்ந்தே அமையும். 'உயிரினங்களின் அன்பு பெரிதும் காட்டப் பெறும்' என இறைச்சிக்குக் கூறியது ஏற்பதற்கில்லை. அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டல் உண்டு. ஆனால் அப்படிச் சுட்டியாக வேண்டும் என்பதில்லை. 'இலங்கும் அருவித்து' என்னும் இறைச்சி வந்த இடம் அப்படியில்லை.

---

* சங்க இலக்கியம் (எட்டுத்தொகை), பக். 174, தமிழ்ப் புத்தகாலயம், பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை (1978)

**பொ. வே. சோமசுந்தரனார்**

* ''உள்ளுறையாவது தலைவி தோழி முதலியோர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறத்தகாத செவ்வியிலே, தெய்வம் ஒழிந்த திணைக் கருப்பொருள்களை வெளிப்படையாக வேறு பொருள்படத் தொடுத்து அத்தொடர் தாம் கருதிய பொருட்கு உவமம் போல அமைந்து அவ்வுவமத்திற்குப் பொருளாகத் தமது கருத்தினை நுண்ணறிவுடையோர் உணர்ந்து கொள்ளும்படி வியத்தகு முறையில் சொல்லாடும் ஓர் உபாயமாம்.''

''இறைச்சி என்பது தாம் கூறும் சொற்கட்கு அடைமொழியாகக் கூறப்படும் சொற்கள் வறிய அடைமொழி மாத்திரையாகவே நில்லாமல், தமது ஆற்றலாலேயே பிறிதொரு பொருளைக் குறிப்பாகப் புலப்படுத்துமாறு சொற்றிறந் தேர்ந்து தொகுக்கும் ஒரு சிறந்த முறையாம்.''

இவர் இறைச்சிக்குக் கூறிய இலக்கணம் 'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே' என்பதற்கு இளம்பூரணர் கூறிய பொருளைக் கொண்டது என்றாலும் அடைமொழியாக வரும் கருப்பொருள் என்னாமல் அக்கருப்பொருளாற் பிறிது பொருள் படுவது இறைச்சி என்றது சிறப்புடையது.

**சு. குமாரசாமி ஆச்சாரியார்**

** நச்சினார்க்கினியர், 'இறைச்சியானது பெரும்பாலும் தலைவனின் கொடுமை கூறும் வழிவரும்' என்று கூறியது ஏற்புடையதாகாது என்பர் குமாரசாமி ஆச்சாரியார். அவர் அதற்குத் தந்த எடுத்துக் காட்டுகளின் கருத்து வருமாறு:—

1. 'அகவினம் பாடுவாம்' எனத் தொடங்கும் குறிஞ்சிக் கலிப் பாடலில் (4) நச்சினார்க்கினியர்,

> ''மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரல் என்றதனாற் பயன் வரைந்து கோடற் பொருட்டுத் தலைவி இயற்பழித்ததாகவும், புலால் நாற்றத்தையும் முத்தையும் உடைய மருப்பாற் செய்த உலக்கை யென்றதனாற் பயன் வரைந்து கோடற்பயனின்றிப் புகழ்ச்சி மாத்திரையேயாகத் தோழியியற்பட மொழிந்ததாகவும் இறைச்சியிடத்தே பொருள் பிறந்தவாறு காண்க''

என்றெழுதியதில் இறைச்சியிற் பிறந்த பொருள் இயற்பழித்த விடத்தும் இயற்பட மொழிந்த விடத்தும் காணப்படுதலின்,

* ஐங்குறுநூறு உரை. அணிந்துரை (பக். 21,22) சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.1 (1966)

** செந்தமிழ், தொகுதி 48. பகுதி 7,8 பக் 185-200. (1952)

தலைவனின் கொடுமை கூறும் வழியே இறைச்சி பெரும்பான்மை யும் வரும் என்பது ஏற்புடைத்தன்று.

2. *தவறில ராயினும் பனிப்ப மன்ற
இவறுதிரை திளைக்கும் இடுமணல் நெடுங்கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி யன்னோள் தோளுற்றோரே (ஐங்குறு. 177)

இதனகத்துள்ள 'நெடுங்கோட்டு முண்டகம்...தொண்டி' என்பதன் இறைச்சியாவது,

"நறும்மணம் கமழும் நெடுங்கோட்டு முண்டகம் ஒருகால் நெருங்கினும் முள்ளுடைமையால் கொளற்கு அரிதா மாறுபோல உடன் உறையினும் என்னால் இவளை உடன்படுவித்தல் இயலாது"

என்பதாம் இப்பாடலில் நீர்முள்ளிச்செடி முண்டகம் எனப் பட்டது. முள்ளைத்தன்னகத்துடையது என்பதால் 'கொளற்கு அருமையானது' என்னும் கருத்துப்பெறப்படும். அதன் மூலம் தலைவியும் உடன்படுவித்தற்கு அரியள் என்னும் குறிப்புப் பெறப்படும். ஐங்குறுநூற்றுப் பழைய உரைகாரர் இதனை இறைச்சியென்றார்.

"நீரறா நிலத்து முண்டக நறுமலர் கமழும் தொண்டி யன்னோள் என்றது இவள் நாம் அணுகி நுகர்தற்கரியள் என்றவாறு"

என இறைச்சி எழுதினார். இவ்விறைச்சி வந்த இடத்துத் தலைவன் கொடுமை கூறப்படவில்லை.

** 'அகத்திணைக் கொள்கைகள்' என்னும் நூலில் இறைச்சிப் பொருள் வந்தனவாக அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை முதலிய சங்கப்பாடல்களில் குறிப்

---

* பொருள்: ஒன்றனை யொன்று மேற்பட்டொழுகும் அலை பொருதலால் கொழித்திடப்பட்ட மணல் பரந்த உயர்ந்த கரையினையுடைய துறைக்கண் நீர்முள்ளியின் நறிய மலர்களின் மணம் கமழும் சிறப்பினையுடைய தொண்டி நகர் போல்வாளது தோளை எதிர்ப்பட்டோர் தவறு ஒன்றும் செய்திலராயினும் தெளிவாக நடுக்கமுற்று வருந்துவர்; ஆகலின் யான் கூறுமாறென்னை?

** அகத்திணைக் கொள்கைகள் பக் 484-506, விற்பனை உரிமை: பாரிநிலையம் ,பிராட்வே, சென்னை (1981)

பிட்டுச் சென்றார் ந. சுப்பு ரெட்டியார். தலைவன் கொடுமை மட்டும் கூறியவிடமல்ல அவை என்பதை அவ்விடத்றுக் காண லாம். அதனால் ஆச்சாரியார் கூறுவது முற்றும் பொருந்தும்—

**பின்னத்தூர் நாராயணசாமி அய்யர்**

* கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து மண்ணாது
கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே. (நற்றிணை.34)

இப்பாடலின் உரையில், இறைச்சிப் பொருளாக,

''சூரரமகள் மாலைசூடி அருவியை இனியவாச்சியமாகக் கொண்டு ஆடும் என்றதனானே, தலைமகள் தலை வனை மணமாலையணிந்து மணந்து என்னை எஞ்ஞான்

---

* பொருள்: முருக வேளே! நீ நெடுங்காலம் இம்மடமை யோடு வாழ்வாயாக; கடவுட்டன்மை பொருந்திய மலையிலுள்ள சுனையில் இலைகளை விலக்கி மேலே யெழுந்து மலர்ந்த கொய்யாமல் விட்டிருந்த குவளை மலரைப் பறித்து அவற்றோடு குருதிபோன்ற காந்த ளின் ஒள்ளிய மலர்களை வடிவுவிளங்கக் கட்டிச் சூடிப் பெரியமலையின் பக்கங்களெல்லாம் பொலிவுபெற அருவி யின் ஒலியே இனிய வாச்சிய முட்டுக்களாகக்கொண்டு சூரரமகள் ஆடா நிற்கும் நாட்டையுடைய தலைவனது மார்பைப் புணர்ந்ததன் காரணமாக அம்மார்பு தருத லாலே வந்த கருதுதலிற் குறைபாடில்லாத நீங்குதற் கரிய இக்காம நோயானது, நின்னால் வருந்திக் கொடுக் கப்பட்டதன்று என்பதை நன்றாக நீ அறிந்து வைத்தும், தலைநிமிர்ந்து கார்காலத்து மலர்கின்ற நறிய கடப்ப மாலையைச் சூடிப் படிமத்தான் வேண்டுகையாலே வெறிக்களத்துப் பலிபெற வந்தோய், நீ கடவுட் பகுதியா ருள் வைத்து எண்ணுதற்குரியை யாயினும் ஆகுக; திண்ணமாக நீ அறியாமையை யுடையைகாண்— பின்னத்தூர் நாராயணசாமி அய்யர்.

றும் தனக்கு உசாத்துணையாக நீங்காது கொண்டு இல்லற நிகழ்த்தக் கருதியிருக்கும் என்றவாறு. சூரர மகள் எனத்தெய்வத்தை இடையிட்டு உரைத்தமையான் உள்ளுறையன்மை யுணர்க''

எனப் பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் எழுதியுள்ளார்.

| | | |
|---|---|---|
| சூரர மகள் | — | தலைவி |
| மாலை சூடியது | — | தலைவனை மணமாலை யணிந்துமணந்தது. |
| அருவியை இனிய வாத்திய மாகக் கொள்ளல் | — | எஞ்ஞான்றும் தனக்கு உசாத் துணையாகக் கொள்ளல். |
| அருவியில் ஆடல் | — | இல்லறம் நிகழ்த்தக் கருதுதல் |

இப்படி உவமமும் உவமத்தாற் பெறப்படும் பொருளும் ஒத்து முடிந்திருத்தலின் இங்குள்ள குறிப்புப் பொருளை உள்ளுறைப் பொருள் என்று கொள்ளலாம். ஆனால் தொல்காப்பியர்,

> உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
> கொள்ளும் என்ப குறியறிந் தோரே (அகத். 47)

எனக் கூறியதாலும், நச்சினார்க்கினியர் அச்சூத்திரவுரையில்,

> ''எனவே உணவு முதலிய பற்றிய அப்பொருள் நிகழ்ச்சி பிறிதொன்றற்கு உவமையாகச்செய்தல் உள்ளுறையுவமமாயிற்று''

எனத் தெய்வத்தை நீக்கிக் கூறியதாலும், மேற்பாடலில் சூரரமகளாகிய தெய்வம் கூறப்பட்டமையாலும் உள்ளுறையுவமம் போல் ஒத்துமுடிந்திருந்தாலும் உள்ளுறையுவமமாகக் கொள்ளலாகாது. அதனால் உள்ளுறையுவமம் போல வருகிற ஆனால் ஒத்து முடியாமல் மாறுபட்டு வருகிற இறைச்சியாகக் கொள்ளல் வேண்டும். உள்ளுறையுவமம் போல் வருவது உள்ளுறையிலக்கணத்துக்கு மாறுபட்டிருக்குமானால் அதை இறைச்சிப்பாற் படுத்த வேண்டும் என்னும் கருத்தைத் தம் உரை மூலம் நிறுத்தியவர் நாராயணசாமி அய்யர்.

இவ்வாறே பிறிதொரு பாடலில் அவர் எழுதியதையும் காணலாம்.

* அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது
பணைத்த பகழிப் போக்குநினைந்து கானவன்
அணங்கொடு நின்றது மலைவான் கொள்கெனக்
கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து
கிளையொடு மகிழும் குன்ற நாடன்
அடைதருந் தோறும் அருமைதனக் குரைப்ப
நப்புணர் வில்லா நயனிலோர் நட்பு
அன்ன வாகுக வென்னால்
ஒல்கா தொழிமிகப் பல்கின தூதே. (நற். 165)

இப்பாடல் உரையில், இறைச்சியாக,

''கானவர், ஆமான்மீது எய்த அம்பு பிழைத்தமையால் வரையிலே கடவுளின் குறையுண்டு என்று பலியூட்டி மகிழாநிற்பர் என்றது, 'நாம் குறித்துக் கூடிய தலைமகனைக் கூட ஒட்டாது தவறுபடுத்தலால் அவ்வூழளிக்குந் தெய்வம் பொறை கொள்ளும் வண்ணம் அதற்குப் பலிக்கடன் கொடுக்கிறபாம்' என்றதாம்''

என்றெழுதினார். இங்கும் உள்ளுறையுவமம்போல் அமைந்திருத்தலைக் காணலாம்.

---

* பொருள்: தோழீ! அமர்த்த கண்ணையுடைய ஆமானின் அரிய நெஞ்சிலே பாய்ந்து தங்காது குறிதவறியொழிந்து போன அம்பின் போக்கைக் கருதிக் கானவன், தன் உள்ளத்து 'இம்மலையில் தெய்வம் வெளிப்போந்து நின்றது, மழை பெய்தாலோ அதன் வீறு தணியும். ஆதலின் மலையை மழைவந்து சூழ்க' என்று அக்கடவுளை உயர்ந்த அம்மலை மேலே சென்று வழிபடும் பொருட்டு விரும்பியெழுந்து தன் சுற்றத்தாரோடுபோய் அதற்குப் பலியையிட்டு நீர்வளாவிய பின்னர் அப்பலியையுண்ணா நிற்கும் மலை நாட்டினையுடைய நமது தலைவன், இங்கு வரும்பொழுதெல்லாம் நினது அருமையை அவனுக்கு உரைத்தலால், 'நம்மைப் புணர்தலில்லாத அன்பற்றவரது நட்பு அப்படியே அன்பில்லாமல் ஒழிவதாக' என்று நீ வெறுத்துக் கூறுவதுபோல அவன் கூறுகின்றிலன்; ஆதலின் நின்பால் மிக்க அன்புடைமையின் இன்னே வரையுமாறு விரைய வாராநிற்பன்; அதன் முன் அன்னையர் என்னை வினவும்பொழுது நீ வருந்தாது என்பால் அறத்தொடு நிற்பாய்காண்; அயலார் நின்னை மணஞ்செய்து கொள்ளுமாறு விடுக்கின்ற தூது மிகப்பலவாயின; வேற்றுவரைவு நமக்குத்தகுதியன்று கண்டாய்.
—பின்னத்தூர் நாராயணசாமி அய்யர்.

| | |
|---|---|
| கானவர் | — தலைவியும் தோழியும் |
| ஆமான் மீதுஎய்த அம்புபிழைத்தல் | — தலைவனைக் கூட ஒட்டாது தடுத்தல் |
| கடவுளின் குறை | — ஊழ்த்தெய்வத்தின் குறை |
| வரைத்தெய்வம் பொறுக்கப் பலியூட்டல் | — ஊழ்த்தெய்வம் பொறை கொள்ளப் பலிக்கடன் கொடுத்தல். |

இப்படி உவமமும் பொருளும் ஒத்து முடிந்து உள்ளுறையுவமமாக இருந்தாலும் வரைத்தெய்வம் (கடவுள்) கூறப்பட்டுவிட்டமையால் இறைச்சியாயிற்று.

ஒரே பாடலில் உவமமும் பொருளும் ஒத்து முடிந்த இரண்டு கருத்துகளுள் ஒன்று உள்ளுறையாகவும் ஒன்று இறைச்சியாகவும் அய்யரவர்களால் காட்டப்பட்டன. வருமாறு:-

* நீடுசினைப் புன்னை நறுந்தா துதிரக்
கோடுபுனை குருகின் றோடுதலைப் பெயரும்
பல்பூங் கானல் மல்கு நீர்ச் சேர்ப்ப
அன்பினை யாதலிற் றன்புல னயந்த
வென்னு நாணு நன்னுத லுவப்ப
வருவை யாயினோ நன்றே பெருங்கடல்
இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென வுரவுத்திரை

---

* பொருள்: நீண்ட கிளையையுடைய புன்னையின் நறிய மகரந்தம் உதிரும்படி அக்கிளைகளின்மீது அலங்கரித்தாற் போன்று வைகிய நாரையின் கூட்டம் இரைவேண்டிப் பெயர்ந்து உலவாநிற்கும் பலவாகிய மலர்களையுடைய கடற்கரைச் சோலையையும் மிக்க உவர் நீரையுமுடைய நெய்தல் நிலத் தலைவனே! நீ பலகாலும் வந்து முயங்கியும் எம்பால் அன்புடையை யல்லை; அங்ஙனம் அன்புடையையாயிருப்பின் அவளுடைய அறிவின் வழியே ஒழுகுகின்ற என்பாலும் சொல்லுவதற்கு வெள்குகின்ற நல்ல நுதலை யுடையாளாகிய அத்தலைவி உவக்கும் வண்ணம், பெரிய கடலிடத்து இராப்பொழுதிலே தண்கதிர்த் திங்கள் தோன்றுதலானே, அது கண்ட வலிய அலைகள் மோதுவனபோல எழுந்து வாரா நிற்கும் உயர்ந்த மணல் நிரம்பிய கொல்லைகளையுடைய யாம் உறைகின்ற எம்மூரிடத்து அவளை மணஞ்செய்து கொள்ளுமாறு வரல்வேண்டும்; அவ்வாறு வருவையாயின் அது மிக நல்லதொரு காரியமாகும்-- பின்னத்தூர் நாராயணசாமி அய்யர்.

யெறிவன போல வெரூஉம்
உயர்மணற் படப்பையெம் உறைவின் ஊரே (நற். 375)'

இப்பாடலின் உரையில்,

"புன்னைக் கிளையில் வைகிய குருகினம், அதன் மகரந்தம் உதிருமாறு கொம்பை அலைத் தெழுந்து செல்லும் சேர்ப்பன் என்றதனால், களவொழுக்கம் மேற்கொண்டு தலைவிபால் வைகிய நீ அவள் அழுது கண்ணீர் வடிக்குமாறு கையகன்று போயினை; இனி, அங்ஙன மின்றி வரைந்து பிரியாது உறைவாயாக என்றதாம்"

என உள்ளுறையும்,

"திங்களைக் கண்டு கடல் பொங்கி அலையெழுந்து ஆரவாரிக்கும் என்றது, நீ வரைவொடு வருதல் கண்டு எமர் எதிர் கொண்டு மகிழ்ந்து ஆரவாரிப்பர் என்றதாம்"

என இறைச்சியும் எழுதினர்.

| | |
|---|---|
| குருகு | — தலைவன் |
| புன்னைக்கிளையில் இருத்தல் | — களவொழுக்கம் மேற்கொண்டிருத்தல் |
| மகரந்தம் உதிருமாறு குருகு கிளையை அலைத்துச் செல்லல் | — தலைவி அழுது கண்ணீர் வடிக்குமாறு பிரிதல் |

இப்படி உள்ளுறைக்கும்,

| | |
|---|---|
| திங்கள் | — தலைவன் |
| திங்கள் வரவு | — வரைவொடுதலைவன் வருதல் |
| கடல்பொங்கி அலை எழுந்து ஆரவாரித்தல் | — எமர் எதிர் கொண்டு மகிழ்ந்து ஆரவாரிப்பர் |

இப்படி இறைச்சிக்கும் உவமையையும் பொருளையும் ஒத்துக் காணலாமாதலின் இரண்டும் உள்ளுறையுவமம் எனப்படுமாயினும் பின்னதில் திங்கள் என்னும் தெய்வம் கூறப்பட்டமையால் இறைச்சி என வேறு ஓதல் வேண்டுவதாயிற்று.

தொல்காப்பியர், காடுறை யுலகத்துக்கு மாயோனையும், மைவரையுலகத்துக்குச் சேயோனையும், தீம்புனல் உலகத்துக்கு இந்திரனையும், பெருமணலுலகத்துக்கு வருணனையும் தெய்வமாகக் கூறினார் (அகத். 5). இத் தெய்வங்கள் அவ்வந்நிலத்துக்குரிய பெருந்தெய்வங்கள்.

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப (அகத். 18)

என்னுஞ் சூத்திரத்தில், 'அவ்வகை பிறவும்' என்று கூறியதால் தெய்வ வகையும் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வொரு பெருந் தெய்வம் கூறப்பட்டாலும் அவ்வந்நிலத்து அமரும் சிறு தெய்வமும் உண்டு எனக் கொள்ளல் வேண்டும். அத் தெய்வங்களும் அகப்பாடல்களில் ஆளப்படும். நச்சினார்க்கினியர்,

> "அவ்வகை பிறவும் என்றதனால் எடுத்தோதிய தெய்வம் ஒழிய அவற்று உட்பகுதியாகிய தெய்வமும் உள; அவை 'மாயோன்மேய' (அகத். 5) என்புழிக் காட்டினாம்"

என்று 'தெய்வம் உணாவே' (அகத். 18) என்னும் சூத்திரவுரையிற் கூறியதற்கேற்ப, 'மாயோன்மேய' (அகத். 5) என்னும் சூத்திரவுரையில்,

> "படையிடுவான் மற்கண்டீர் காமன் மடையடும்
> பாலொடு கோட்டம் புகின் (கலி. 109)

என அவன் (மாயோன்) மகனாகிய காமனும் அந்நிலத்துக்குத் தெய்வமாதல் 'அவ்வகை பிறவும் கருவென மொழிப' என்புழி வகையென்றதனாற் கொள்க"

'சூரர மகளிரொடு உற்ற சூளே' (குறுந். 52)

என்புழிச் சூரர மகளிர் அதன் (குறிஞ்சிநிலத்தெய்வ) வகை" என்று எழுதியதால் சூரரமகளிரும் திங்களும் தெய்வ வகையைச் சேர்ந்தன ஆதலின்—தெய்வம் ஒழிந்த கருப்பொருளே உள்ளுறைக் குரியதாதலின், அய்யரவர்கள், நுணுக்கமாக உள்ளுறையுவமம் என்றற் கேற்பனவற்றைத் தெய்வத்தொடர்பு காரணமாக இறைச்சி என்றது அறிந்து மகிழ்தற்குரியது.

*உள்ளுறையைப் பற்றிப் பொதுவாக டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள்,

1. கேட்போர் நிலைமையைத் தாம் முழுதும் உணர்ந்துவிட்டமையைச் சுட்டல்
2. கேட்போர்க்குத் தம் எதிர்ப்பை உணர்த்தி நெறிப்படுத்தல்
3. தம் நிலையை உய்த்தறியும்படிச் சில சொல்லல்
4. தன் உணர்வு வெளிப்பாடு

என நான்கு கருத்துக் கூறுவர். இவை இறைச்சிக்கும் பொருந்தும்.

---

* குறுந்தொகையில் உள்ளுறை—திறனாய்வுக் கட்டுரைகள் (பக். 30), அணியகம், 22 செல்லம்மாள் தெரு, சென்னை 30 (1977)

**உள்ளுறை ஒட்டணியின்பாற் படுமா?**

உள்ளுறையை ஒட்டு என்னும் அணியாகும் என்பர். ஒட்டுக்கு இலக்கணமாகத் தண்டியலங்காரம்,

கருதிய பொருள்தொகுத்து அதுபுலப் படுத்தற்குப்
பிறிதொன் றுரைப்பின் அஃது ஒட்டென மொழிப
(தண்டி. 52)

எனக் கூறும். அதன் வகைகளாக,

அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்
அடைபொது வாககி ஆங்ஙனம் மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்
எனநால் வகையினும் இயலும் என்ப (தண்டி. 53)

என நான்கு கூறும். அந்நான்கனுள் முதலில் உள்ள அடையும் பொருளும் அயல்பட மொழிதலுக்கு உதாரணமாக,

வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டும் குறுகும்—நிறைமதுச் சேர்ந்து
உண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு

என்னும் வெண்பா அமையும். இவ்வெண்பா அகப்பாடலாகவும் அமையும்; புறப்பாடலாகவும் அமையும் என்பது முன்னரே கூறப் பட்டது. மற்றைய மூன்று வகைகளுக்கும் உள்ள உதாரணங்கள் புறப்பாடல்களே. 'வெறிகொள்' என்னும் பாடலை அகப்பாட லாகக் கொண்டு அதனை உள்ளுறையுவமத்துக்கு உதாரணமாகக் காட்டினர் இளம்பூரணர் என்பது முன்னர்க் காணப்பட்டது. அதனால் ஒட்டணி உள்ளுறை யுவமத்தையடக்கியிருத்தலின் உள்ளுறை யுவமம் ஒட்டணியாகும் என்பாரும் உண்டு.

மாறனலங்கார வுரையாசிரியர் ஒட்டலங்கார உரையில் (சூ. 124) பின்வருமாறு எழுதினர்.

''உள்ளுறை யுவமத்தினோடும் ஒட்டென்னும் இதனிடை வேற்றுமையாதோவெனின், அஃத நன்றுசொன்னாய். உள்ளுறையுவமம் என்பது அகத்திணைக் கைகோள் இரண்டிற்குமே யுரித்தாய் அகத்திணை யைந்தினும் அவ்வந் நிலங்களிற் றெய்வதம் ஒழிந்த கருப்பொருள் களனாகப் பிறக்கும் எனவும். அவ்வுள்ளுறை யுவமம் கூறுவார் தலைவன், தலைவி, செவிலி, தோழி, பாங்கன், பாணன் ஆக அறுவர் எனவும், உள்ளுறை யுவமம் கூறுதற்குரிய ரல்லாதார் நற்றாய், தந்தை, தன் ஆயத்தார், ஐயன்மார் ஆக நால்வர் எனவும், அங்ஙனம் கூறுதற்குரியோர் கூறுமிடத்து மருதம் நெய்தல்

என்னும் ஈரிடத்தும் மிகுந்தும் குறிஞ்சிக்கண் அவ்வளவின்றியும், ஒழிந்த நிலம் இரண்டினும் அதனிற் குறைந்தும் வரும் எனவும், அங்ஙனம் கூறுமிடத்தும் வெளிப் படக் கூறும் உவமையிடத்து உபமேயம் கேட்போர் மனத்தின்கண்ணும் புலவன் குறித்தவாறே நிகழ்த்துதலின் உள்ளுறை யுவமம் எனவும், மேற் கூறப்படும் கருப்பொருட்களனாகப் பிறக்கும் இறைச்சிப் பொருளோடும் கூடாதனவாயும் வரும் எனவும் உணர்க.

இஃது (ஒட்டு) அன்னதன்றாய்க் கருப்பொருளிற் பிறக்க வேண்டும் என்னும் யாப்புறவின்றிப் புறத்தினும் புறப்புறத்தினும் சென்று செய்யுட் செய்யும் புலவன் முதலாயினோர் கூறுங் கூற்றாய்ச் சுட்டு என்னும் உள்ளுறையவாய் நடத்தல் வேற்றுமையென்றுணர்க.... இந்நூலுடையார் 'உடனுறை யுவமம் சுட்டு நகை சிறப்பு எனக், கெடலரு மரபின் உள்ளுறையைந்தே" என உள்ளுறையை ஐந்தாய்ப் பிரித்தமையான் உள்ளுறையுவமம், ஒட்டு, இறைச்சி என மூன்றாக்கினார். இங்ஙனம் ஆராய்ந்து பிரித்த இவர் நோக்கமும் தெள்ளிதின் ஆராய்ந்து கொள்க''

இவர் கூற்றிலிருந்து உள்ளுறை, ஒட்டு, இறைச்சி என்பன தனித் தனிப்பட்டன என்பது விளங்கும். ''கருதியது கிளவாது அப் பொருள் தோன்றப், பிறிதொன்று கிளப்பது பரியாயம்மே'' (தண்டி. 72) என்னும் பரியாயவணியாகுமா உள்ளுறை என்பதற்கும் மேற்காட்டிய அமைதி கொண்டு மறுக்க.

உள்ளுறையுவமம்—உவமப்போலி

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபின் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே
(உவமவியல் 23)

உவமப்போலி ஐந்தென மொழிப (ஷை24)

தவலருஞ் சிறப்பின் அத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்திய லான (ஷை 25)

கிழவி சொல்லின் அவளறி கிளவி
தோழிக் காயின் நிலம் பெயர்ந் துரையாது (ஷை 26)

கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்
ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே (ஷை 27).

இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்

உவம மருங்கின் தோன்றும் என்ப (ஷி 28)
கிழவோட் குவமம் ஈரிடத் துரித்தே (ஷி 29)
தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான (ஷி 30)

என்பன தொல்காப்பிய உவமவியற் சூத்திரங்கள். இவை உவமப் போலி பற்றியன. இச் சூத்திரங்களைக் கொண்டு நேரே உள்ளுறையுவமமே உவமப்போலி என்று கூற இயலாது. ஆனால் பொருளின் போக்குக் காணும்போது உள்ளுறையுவமமே உவமப்போலி எனக் கொள்ளக்கிடக்கிறது. அப்படிக்கொண்டே பேராசிரியர் உரையும் உதாரணமும் எழுதினார்.

## இளம்பூரணர்

இளம்பூரணர் அப்படிக் கூறவில்லை. பொதுவில் உவமையிலக்கணம் கூறுவனவாகவே கொண்டு உரையும் உதாரணமும் எழுதினார்.

'பிறிதொடு படாது' என்னும் சூத்திரத்துக்கு உதாரணமாக,

''நிலவுக்காண் பதுபோல அணிமதி யேர்தர'' (கலி. 116)

என்பதைக்காட்டி,

''என்றவழிக் காணப்பிறிதாகிய பொருளொடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று; மதியினது எழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடு நோக்கிற்று; அவ்விடத்திற்கேற்பக் கூறுதலின் முன்னமாயிற்று; அம்மதியினது தோற்றம் இத் தன்மைத்தெனத் துணிதலின் அதன்கண் உவமைச் சொல் வந்தது''

என விளக்கமும் எழுதினார்.

''உவமையும் பொருளும் நிறுத்தி அவற்றின் ஒப்புமையையுணர்த்த உவமவுருபு இடைவரும் என்பது உவமவியற் சூத்திரங்களில் கூறப்பட்டது. அவ்வாறின்றியும் உவமையுருபு வரும்—அதாவது உவமையில்லாமல் பொருள் நிகழ்ச்சியிலேயே உவமையுருபு வரும் என்பதை அச்சூத்திரம் கூறுவதாகக் கொண்டார். அதற்கேற்ப அவர் எழுதிய உரைக்கு விளக்கம் வருமாறு.

''குறிப்பாகக் கூறுதல் என்னும் மரபையொட்டி உவமம் கூறும்போது, அதனைக் கேட்கும் துணிந்த அறிவினோர் கொள்ள நேரின், உவமையுருபானது, பொருளுக்குப் பிறிதான உவமையுடன் சேர்ந்துவராமல் கூற வந்த பொருளிலேயே நோக்கம் கொண்டு துணிவினோர் துணிவொடு வரும்''

என்பதாம். மேற்காட்டிய உதாரணத்தில் 'இருள் நீங்க ஒளியுடன் மதியெழுந்தது' என்பது கூறவந்த பொருள். அப்பொருளை

'இருளாகிய பகையை நிலவால் புறங்காண்பதுபோல மதியெழுந்தது' எனத் தற்குறிப்பேற்ற அணியில் கவி கூறினார். 'போல' என்ற உவம வுருபு அங்கே உவமைப் பொருள் யாதும் இல்லாதிருக்கவும் வந்தது. புறங்காணுவது மதியாகிய பொருளின் தொழில். அத்தொழில் நிகழ்ச்சியிலேயே உவமவுருபு 'காண்பது போல' என வந்தது. அதனால் உவமவுருபு உவமையில்படாது பொருளை நோக்கியே வந்ததாம்.

இளம்பூரணரின் இச்சூத்திரம் பற்றிய கருத்தாவது, 'உவம உருபு உவமையில் வராமல் பொருள் நிகழ்ச்சியிலேயே வருதலும் உண்டு' என்பதே.

உவமப் போலி ஐந்து வகைப்படும். அவை:—1. இதற்கு உவமையில்லை 2. இதற்கு இதுவே உவமை 3. பல பொருளினும் உளதாகிய உறுப்புக்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு சேர்த்தின் இதற்குவமையாம் 4. பல பொருளினும் உளதாகிய கவின் ஓரிடத்துவரின் இதற்கு உவமையாம் 5. கூடாப் பொருளோடு உவமித்துவருதல் என்பன.

அவ்வைந்தும் ஐந்து வகையாற் கூறப்படும். அவை வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்பன. அவற்றால் வினையுவமப் போலி, பயனுவமப்போலி, மெய்யுவமப்போலி, உருவுவமப் போலி, பிறப்புவமப்போலி எனப் பெயர் பெறும்.

உவமைக்கும் உவமப் போலிக்கும் உள்ள வேறுபாடு, உவமையானது வினை, பயன், மெய், உரு என்ற நான்கினும் தோன்றும். உவமப்போலியானது அவற்றுடன் பிறப்பு என்பதனடியாகவும் தோன்றும். ''நினக்கு உவமையில்லை என்னும் வழிச் செயலானாதல், பயனானாதல், உறுப்பானாதல், உருவானாதல், பிறப்பானாதல ஒப்பார் இல்லை எனல் வேண்டும்.''

உவமையையோ உவமப்போலியையோ கூறுவார் உலக மக்கள். கவிஞன் மக்கள் கூற்றாகச் செய்யுட் செய்யும்போது அவ்விரண்டையும் எப்படி வேண்டுமானாலும் இடத்துக்கேற்ப அமைக்கலாம். ஆனால், அகப் பொருட் செய்யுளில் அமைக்கும் போது, தலைவி, தலைவன், தோழி முதலிய அகத்திணை மாந்தர் அவ்விரண்டையும் கூறுவதாக அமைக்க நேரின், எவ்வெவ்வாறு எவ்வெவர்க்கு எவ்வெப்படி அமைக்க வேண்டும் என்பதைக் கூறுவனவே 'கிழவி சொல்லின் அவளறி கிளவி' முதலிய சூத்திரங்கள்.

**பேராசிரியர்**

பேராசிரியர் மேற்காட்டிய சூத்திரங்கள் உள்ளுறையுவமம் பற்றியன எனக் கொண்டு உரை கூறிச் சென்றனர். உவமப்

போலி ஐந்தாவன வினையுவமப்போலி முதலியன. அவ்வைந்தும் உள்ளுறைகளே. உவமை வினை, பயன், மெய், உரு என்ற நான்கனை அடிப்படையாகக் கொண்டுவர, உள்ளுறை (உவமப் போலி) அவற்றுடன் பிறப்பு என்பதையும் அடிப்படையாகக் கொண்டு வரும். அவ்வுள்ளுறை யுவமம் செய்யுளில் அகத்திணை மாந்தர்களால் கூறப்படும்போது எவ்வெவ்வாறு கூறப்படும் என்பது, 'கிழவி சொல்லின் அவளறி கிளவி' முதலிய சூத்திரங் களால் கூறப்படுவது.

ஆய்வு

உள்ளுறையுவமம் அகத்திணையியலிலும் பொருளியலிலும் கூறப்பட்டுவிட்டமையால் உவமப்போலி என்பது வேறானது என்ற எண்ணம் இளம்பூரணருடையது எனக் கருதலாம். பேராசிரியர் 'கிழவோட்காயின்' முதலிய சூத்திரங்கள் அகத் திணை மாந்தர்க்குரியவாகலின் உவமப்போலி என்பது உள்ளுறை யுவமமாகத்தான் அமையும் என்ற கருத்தினர் ஆனார்.

> * "உவமப்போலி குறிப்புப் பொருள் உணர்த்துவது என்பதோ, அக்குறிப்புப் பொருளும் கருப்பொருள் நிலமாக அமைவது என்பதோ தொல்காப்பிய நூற்பா வால் விளங்குவனவல்ல. இருப்பினும் அகத்திணை மக்கள் கூறும் உவமை என்னும்போது குறிப்புப் பொருள் என்பதும் விளங்கும் ஒன்றே. மேலும் அம் மக்கள் கூற்றை விளக்கும்போது 'நிலம் பெயர்ந்துரை யாது,' 'இடம் வரைவின்றே' என்னும் விதிகள் கருப் பொருள்களையே உணர்த்துகின்றன எனக் கொள்வதில் தவறில்லை."

என்பர் ப. அருணாசலம். இக்கூற்று ஓரளவு ஏற்புடையதே. என்றாலும் அகத்திணை மாந்தர் உள்ளுறையுவமமன்றி உவமை கூற வேண்டினாலும் 'நிலம் பெயர்ந்துரையாமை'யும், 'இடம் வரைவின்மையும்' தேவையே. தலைவி தான் பயின்ற பொழில், மனையகம் ஆகிய தன் ஊர்க்கு உட்பட்ட இடங்களில் உள்ள பொருள்களைக் கொண்டுதான் உவமை கூற இயலும். அதனால் உள்ளுறையுவமத்துக்குரிய கருப் பொருள்களைக் கொண்டு உவமை கூறவேண்டுமானால் தலைவி, அவளறிந்த பொருளைக் கொண்டே கூற வேண்டும் என்னும் ஒன்றை மட்டும் உட் கொண்டது அன்று 'கிழவி சொல்லின் அவளறி கிளவி' என்னும் சூத்திரம். இப்படியே பிறவும்.

* டாக்டர் ப. அருணாசலம்—தொல்காப்பியர் (பக். 164) தமிழ்ப்புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை (1975)

எனவே, 'கிழவி சொல்லின்' என்னும் சூத்திரம் தொடங்கியுள்ள சூத்திரங்கள், தலைவி முதலாயினோர் அகப்பாடல்களில் உவமை கூறநேரின், உவமை, உவமப்போலி, உள்ளுறையுவமம் ஆகிய மூன்று வகையான உவமைகளையும் எவ்வெவ் எல்லைக்குட்பட்டுக் கூறவேண்டும் என்பதைக் கூறவந்தனவே என்று கொள்ளலாம்.

நச்சினார்க்கினியர் உவமப்போலி என்பது உள்ளுறையே என்னும் கொள்கையினர். ''இமைய வில்வாங்கிய'' என்னும் குறிஞ்சிக் கலி (2) யுரையில் ''உள்ளுறையுவமம் கொள்......இது வினையுவமப்போலி'' என்றும், 'மறங்கொள் இரும்புலி' என்னும் குறிஞ்சிக் கலிப்பாடலின் (6) உரையில்,

> ''நாடன் என்றதனால்...உள்ளுறையுவமம் கொள்க... 'தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக் கூறுதற் குரியர் கொள்வழியான' என்பதனால் தோழி உவமப் போலி கூறினாள். இதுபயவுவமப் போலி.''

என்றும் எழுதியது கொண்டு தெளியலாம். 'உள்ளுறையுவமம் ஏனையுவமம்', என்னும் அகத்திணையியற் சூத்திர(46) உரையில் ''ஏனோர்க் கெல்லாம் இடம் வரைவின்றே' (உவமவியல். 37) என்று உவமப் போலியிற் கூறுதலால் காமக் கிழத்தியும் உள்ளுறையுவமம் கூறினாள்'' என்றெழுதியதும் காண்க.

**தொகுப்புரை**

கூறுவோர், கேட்போரின் நிலையுணர்ந்து அவர்க்குத் தம் எதிர்ப்பைக் காட்டி நெறிப்படுத்தலும் தம் நிலையை அவர் அறியும்படிச் செய்தலும் உள்ளுறை இறைச்சிகளின் நோக்கமாகும்.

உள்ளுறையும் இறைச்சியும் சுட்டு நகை சிறப்பு என்னும் மூன்றில் அடங்கும் என்பது தேவையற்றது. யாவும் குறிப்பில் அடங்கும். அதனால் தனித்தனிச் சுட்டிக் கூறுவதே நன்று.

உள்ளுறையுவமம் இயற்கை வருணனையாம் என்றாலும் பாடலின் உயிர்ப் பொருளுக்கு அதுவே துணை செய்வது. நோக்கம் வருணனையில் இல்லை; அதனால் அதன் உள்ளுறைப் பொருளே வேண்டுவதாம்.

இறைச்சிப் பொருள் உள்ளுறையுவமப் பொருள் போலச் சிறந்ததே என்றாலும் இறைச்சிப் பொருளைக் கருதாமல் வெளிப்படைப் பொருளளவில் சென்றாலும் செல்லலாம். ஆனால் உள்ளுறையுவமத்தில் வெளிப்படைப் பொருளளவில் செல்ல முடியாது; பாடற்பொருள் முற்றுப் பெறாது. அதனால்

குறிப்பும் பொருளைக் கொண்டே பாடற் பொருள் காண வேண்டும்.

தொடர் உருவகம் உள்ளுறை; எதிரொலியாக வருவது இறைச்சி.

முழுமை பெற்ற இலக்கணமன்றாயினும் உவமைக்குத் தலைமையும் சிறப்பும் உடையது உள்ளுறையுவமம்; குறிப்புப் பொருளுக்குத் தலைமையும் சிறப்பும் உடையது இறைச்சி என்பதும் ஏற்கக்கூடியதே.

உள்ளுறை ஒன்றே அமையும் இறைச்சி என்பது ஒன்று தேவையில்லை என்பது பொருந்தாது; தனித்தனிப் பெயரிட்டு வழங்கலால்.

பெரும்பாலும் தலைவன் கொடுமை கூறும்வழி வருவது இறைச்சி என்பதும் பொருந்தாது. பல பாக்கள் தலைவனின் கொடுமை கூறாவழியும் வந்திருக்கின்றன.

உள்ளுறையுவமம் ஒத்துப் பொருள் முடிந்தாலும் தெய்வம் அதில் கூறப்பட்டுவிடின் இறைச்சியாகிவிடும், ஏன் எனின் உள்ளுறை தெய்வம் ஒழிந்த கருப்பொருளை நிலைக்களனாகக் கொண்டுவரும் ஆதலின்.

அகம் புறம் என்னும் இரண்டிற்கும் வருதலும் கருப்பொருள் நிலைக்களனாக வருதல் வேண்டும் என்னும் நியதி இன்மையும் உடைய ஒட்டணி முதலியனவற்றுள், அகத்துக்கே வருதலும் கருப்பொருள் நிலைக்களனாகவே வருதல் வேண்டும் என்னும் நியதியும் உடைய உள்ளுறையும் இறைச்சியும் அடங்கா.

உள்ளுறை யுவமம் உவமப்போலியே என்பதும் உள்ளுறை யுவமம் வேறு உவமப்போலி வேறு என்பதும் ஆகிய இரு கொள்கைகளில் வேறு என்னும் கொள்கையினால் யாதும் குறை வந்துவிடவில்லை. உவமை, உவமப்போலி, உள்ளுறை ஆகிய மூன்றும் அகமாந்தர் கூற்றாக எப்படி வரவேண்டும் என்பது உவமவியலில் 'கிழவோட்காயின்' என்பது முதலிய சூத்திரங் களாற் கூறப்பட்டன.

## 5. தொனி-உள்ளுறை-இறைச்சி

### தொனிநூல்

வடமொழியாளர் குறிப்புப் பொருளைத் தொனி என்பர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆனந்தவர்த்தனர் என்பவரால் எழுதப்பட்ட 'த்வன்யா லோகம்' என்னும் நூல், தொனியைப் பற்றி 122½ காரிகைகளில் உரை விளக்கத்துடன் விரிவாகக்

கூறுகிறது. ஆனந்த வர்த்தனருக்கு முன்னர்த் தொனியைப்பற்றி மூன்று கருத்துகள் நிலவின.

1. தொனி என்பது ஒன்று இல்லை.
2. தொனி இலக்கணை முதலானவற்றுள் அடங்கும்.
3. தொனி என்பது இன்னதென்று சொற்களால் விளக்கிக் கூற இயலாதது.

இம்மூன்று கொள்கைகளையும் மறுத்துத் தொனிக் கொள்கையை நிறுவியவர் ஆனந்தவர்த்தனர். தொனியின் பெருக்கம் காரணமாகத் 'தொனி விளக்கு' என்று பொருள்படும் 'த்வன்யாலோகம்' (த்வனி+ஆலோகம்) என்ற பெயரைத் தமது நூலுக்கு அமைத்தார். அவர்க்குப் பின்னர் இன்றுவரையும் பல ஆய்வு நூல்கள் தொனியைப் பற்றி வந்துள்ளன.

த்வன்யாலோகத்தைத் *'தொனிவிளக்கு' என்னும் பெயரிட்டு 1944-ல் டாக்டர் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் தமிழில் மொழிபெயர்த்தார். தொனிக் கொள்கை பற்றிச் சுருக்கமாக—ஆனால் தெளிவாகத் தமிழில் எழுதியுள்ளார் †பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை.

**தொனியிலக்கணம்**

††"சொல்லும் பொருளும் பிறிதொரு சுவையான பொருளைப் பெற்றுத் தருவதில் தங்களைக் கருவியாக்கிக் கொண்டு விடுகின்றன. அபிதாசக்தியால் (சொல்லாற்றலால்) உணர்த்தப் படும் முக்கிய பொருளும் அப்பொருளைத் தரும் சொல்லும் பின்னணியில் இருந்து கொண்டு எந்த ஒரு பொருளைத் தொனிக் கும்படிச் செய்கின்றனவோ அந்த பிறிதொரு பொருள்தான் 'த்வனிப் பொருள்' என்று ஆனந்தவர்த்தனர் இலக்கணம் வகுத்துள்ளார்."

கவியாற் கூறப்பட்ட சொல்லும் அதுதரும் பொருளும் பின்னணியில் இருந்துகொண்டு தொனிப் பொருளினை விளக்குதற்கு ஓர் உதாரணம் கூறுவர்.

** "இருளில் மறைந்திருக்கின்ற பொருள் விளக்கை யேற்றியவுடன் கண்ணுக்குப் புலனாகின்றது. பொரு

---

* தொனி விளக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம் (1944)

† இந்திய எழிற்கலை-த்வனிக் கொள்கை (பக்கம் 91-135) டாக்டர் இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை (1977).

†† இந்திய எழிற்கலை, (பக். 111)

** இந்திய எழிற்கலை (பக். 106)

ளைப் பார்க்குமளவும் விளக்கொளியும் இருந்து கொண்டேயிருக்கிறது. அதுபோலக் கவிவாக்கியத்தி னின்றும் வேறுபட்ட வாச்சியப் பொருள் த்வனிப் பொருளைத் தந்து கொண்டிருந்தபோதிலும் அது பின்னணியில் இருந்து கொண்டு த்வனிப் பொருளில் நாம் சுவைகாணும்படிச் செய்கிறது''

என்பது அது.

உண்டு கொண்டிருக்கும் ஒருவன் கல்லைக் கடித்துக் 'கல்லை யும் கடிக்கும்படி நன்றாகச் சமைத்தாய்' என்றால், அது கேட்டவன், 'தான் நன்றாகச் சமைக்க வில்லை—அதாவது கல்லைப் போக்கிச் சமைக்க வில்லை' என்று உணர்வான். அவன் உணர்ச்சியில் புலப்படுவது 'நன்றாகச் சமைக்க வில்லை' என்பது. ஆனால் அதைத் தருவது 'கல்லையும் கடிக்கும்படி நன்றாகச் சமைத்தாய்' என்ற தொடர். கேட்டவன் அத்தொடரைக் கருதிக் கொண்டிருக்க மாட்டான். இருட்டில் உள்ள பொருளை விளக்குக் கொண்டு பார்ப்பவன், பொருளில் எண்ணத்தை நிறுத்துவானேயல்லாமல் விளக்கில் நிறுத்த மாட்டான். ஆனால் பொருளுக்கு விளக்குக் கருவியாக இருந்து விளக்குகிறது. கேட்டவன் உள்ளக் கருத்துக்கு அதாவது குறிப்புப் பொருளுக்கு உண்டவன் சொன்ன தொடர் கருவியாக அமைகிறது.

உள்ளுறை—இறைச்சி, தொனியாகுமா?

தொனியின் இலக்கணம் கொண்டு தமிழ் இலக்கியத்தில் வரும் உள்ளுறையை நோக்கின் தொனியும் உள்ளுறையும் ஒன்றே எனத் தோன்றும். உள்ளுறை அகப்பாடலுக்கேயுரியது; ஆதலின் புறத்துக்கும் உரிய தொனியாகாது. அதுமட்டு மல்லாமல், உள்ளுறை, புலவனால் கருப்பொருளைக் கொண்டே அமைக்கப் பெறும். தொனிக்கு அவ்வரையறை இல்லை. இவ் வேறுபாடிருந்தாலும் உள்ளுறையே தொனி என்பதில் தவறில்லை. ஆனால் உள்ளுறையுவமம் தவிர உடனுறை, சுட்டு, நகை, சிறப்பு என்னும் உள்ளுறைகளை மட்டில் தொனியாகக் கொள்ளலாம். உள்ளுறையுவமமானது புலவனால் வேண்டு மென்றே கருப்பொருள்கள் மூலம் பெறவைப்பது, வலிந்து கூறுவது. அதனால் உள்ளுறையுவமம் தொனியெனப்படாது. தமிழ் இலக்கியத்துக்கேயுரியதும் அதிலும் அகவிலக்கியத்துக்கே யுரியதும், அகத்திணை மாந்தரின் நாகரிகப் பேச்சைப் புலப் படுத்துவதும் ஆகிய தனிச்சிறப்புடைய உள்ளுறையுவமம் தொனியாகாது.

இறைச்சியும் தொனியாகாது. அதுவும் அகப்பாடலுக்கே யுரியது; கருப் பொருளடியாகத் தோன்றுவது என்றாலும்

உள்ளுறையுவமம் போல் தோற்றமளிக்கும் இறைச்சி தவிர மற்றை யிறைச்சியைத் தொனி என்னலாம்; அதுவும், தொனி என்பது குறிப்புப் பொருள்; இறைச்சியும் குறிப்புப் பொருள் என்பதால்.

உள்ளுறை—இறைச்சியின் சிறப்பு

கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தவர்த்தனரோ அவர்க்கு முற்பட்டவரோ வடமொழியில் தொனியைக் கண்டு வகைப்படுத்தினர். கி. மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூலார்—தொல்காப்பியரும் அவர்க்கு முற்பட்டோரும்—குறிப்புப் பொருளின் வகைகளைக் கண்டு கூறியது வியத்தற்குரியதே. தொல்காப்பியத்திற் காணப்படும் வழுவமைப்புகளும், வேற்றுமை மயக்கமும் குறிப்பால் உணரப் படுவனவே. வடமொழியிலக்கண நூலார் கூறும் வஸ்துத்தொனி, ரசத்தொனி, அலங்காரத்தொனி என்பன தொல்காப்பியத்தில், வரும் குறிப்புப் பொருள்களில் அடங்குவனவே. வழுவமைப்பு, வேற்றுமை மயக்கம் ஆகியவற்றில் வஸ்துத்தொனி அடங்கும். மெய்ப்பாட்டியலில் ரசத்தொனியும், உவமவியலில் அலங்காரத் தொனியும் அடங்கும்.

எல்லாக் குறிப்புகளையும் பொதுவில் தொனி என்று வட நூலார் கூறியதுபோலத் தமிழிலக்கண நூலார் யாவற்றையும் குறிப்பு எனக் கூறவில்லை. தனித் தனிச்சிறப்புப் பெயர் கொடுத்தே கூறினர். அதற்குக் காரணம் அவ்வச்சிறப்புகளின் தனித்தன்மையேயாகும்.

பொருளிலக்கணம் தமிழுக்கேயுரியதாதலில் அதில் வரும் உள்ளுறையும் இறைச்சியும், பொருளிலக்கணம் இல்லாத வட மொழியில், சிறப்பாகத் தனியாகக் கூற இயலவில்லை. அதனால் உள்ளுறையும் இறைச்சியும் தமிழ்க் குறிப்பில் அடங்கினும் வட மொழித் தொனியில் அடங்காது. சில உதாரணங்கள் மூலம் மேலும் காணலாம்.

1. பாரதப் போரில்-பதின்மூன்றாம் நாட்போரில் அருச்சுனன் மகனாகிய அபிமன்யு என்பவன் சயத்திரதன் என்பவனால் கொல்லப்பட்டான். அபிமன்யு பேராற்றல் மிக்கவன்; போரில் வெற்றி கொள்ளும் வீரர்களையும் தேவரையும் உறவாகக் கொண்டவன். அத்தகையவன் சயத்திரதனால் கொல்லப் பட்டான். இந்நிகழ்ச்சியைக் கூறிவந்த வில்லிபுத்தூரார் தம்மை யும் மறந்து புலம்பத் தொடங்கினார்.

*மாயனாம் திருமாமன் தனஞ்சயனாம் திருத்தாதை
வானோர்க் கெல்லாம்
நாயனாம் பிதாமகன் மற்றொருகோடி நராதிபராம்
நண்பாய் வந்தோர்
சேயனாம் அபிமனுவாம் செயத்திரதன் கைப்படுவான்
செயற்கை வெவ்வேறு
ஆயநாள் அவனிதலத் தவ்விதியை வெல்லும் வகை
யார்வல் லாரே.

இப்பாடல் அவலச்சுவையுடையது. கதை கூறிவரும் வில்லிபுத்தூரார் தம்மையும் மீறி அழுத பாடல் இது. இப்பாடலை முகாரிப் பண்ணில் வைத்துப் பாடினால் கேட்பவரும் அழுவர். இப்பாடல் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் வரும் அவலச்சுவையில் அடங்கும்.

இப்பாடலை வடமொழியாளர் 'ரசத்தொனி' யுள்ள பாடல் என்பர். இப்பாடலில் உள்ள சொற்றொடரும் பொருளும் வெளிப்படையாக உள்ளன. இவற்றின் மூலம் வேறு பொருள் தனித்துக்காண ஒன்றும் இல்லை. அதனால் தமிழ் இலக்கணக் கொள்கைப்படிக் குறிப்புப் பொருள் உள்ளதாகக் கொள்வதற்கில்லை. ஆனால் அவல உணர்வு தோன்றுதலின் மெய்ப்பாட்டில் அவலம் என்பதில் அடங்கும் என்பர். வடமொழியாளர், இப்பாடலின் சொற்றொடர் மூலம் வேறுதனியே பொருள் பெறவில்லை யென்றாலும், பாடலைக் கேட்கும்போது சோகவுணர்வு தோன்றுதலின் அது பாடல் மூலம் பெறப்படும் குறிப்பு எனக் கொண்டு 'சோகரசத்தொனி' என்பர். சுவையைக் குறிப்புப் பொருளாகக் கொள்வது தமிழ் வழக்கில்லை. அதனால் மெய்ப்பாடு என்பது, தொனி—குறிப்பு—என்பதை நோக்கத் தனிச் சிறப்புடையதாகிறது.

** 2. ''இயல்பாகவே அழகுமிக்க கண்ணகிக்கு அணிகளைத் தோழியர் பூட்டவும் மெல்லியளான அவளுடைய முகத்தில் வியர்வை அரும்புகிறது.

''திங்கள் முத்தரும்பவும் சிறுகிடை வருந்தவும்
இங்கிவை யணிந்தனர் என்னுற் றனர்கொல்''
(சிலப். மனையறம் 71-72)

என்று கண்ணகியின் முகத்தைச் சந்திரனாகவும் முகத்தில் தோன்றிய வியர்வைத் துளிகளை முத்துக்களாகவும் ஆசிரியர்

* வில்லிபாரதம். துரோணபருவம், 13-ஆம் போர்ச் சருக்கம், 131-ஆம் பாடல்.

** இந்திய எழிற்கலை, பக். 124-125.

உருவகிக்கிறார். சந்திரனில் முத்துக்களைக் காண இயலாது; முயலைத்தான் காண்பதாகச் சிலர் சொல்லுவார்கள். இதில் அதிசய அணியையும் காணலாம். அரும்புதல் என்னும் மலருக் குரிய தொழிலை முத்துக்கு ஏற்றும்போது ஒட்டணி என்னும் சமாசோக்தியணியின் சாயலைக் காண்கிறோம். இவ்வணிகளைக் கவிஞன் அமைத்து அவன் கூறக் கருதிய பொருள் (வஸ்து) 'கண்ணகி பூட்டப்படுகின்ற அணிகளைப் பொற இயலாத மென்மையும் அழகும் வாய்ந்தவள்' என்பதாகும். இங்கே அலங்காரம் வியஞ்சகமாக இருந்து வஸ்துத் தொனியைத் தோற்றுவிக்கிறது.

''கவி கூறுகின்ற ஒரு பொருள் மற்றொரு பொருளை வியங்கியமாகத் தரும்போது முன்கூறிய மற்றொரு வஸ்துத் தொனியைப் பார்க்கிறோம். இந்த 'த்வனியை'த் தொல் காப்பியர் கூறும் இறைச்சியுடன் ஒப்பு நோக்கலாம்.''

இவ்வாறு கூறியவர் பேராசிரியர் திருஞானசம்பந்தம் பிள்ளையவர்கள். அதிசய அணியும் சேர்ந்த 'திங்கள் முத்தரும்ப' என்பதில் பெறப்படும் 'கண்ணகி பூட்டப்படுகின்ற அணிகளைப் பொற இயலாத மென்மையும் அழகும் வாய்ந்தவள்' என்னும் பொருளை அலங்காரத்தின் மூலம் பெறப்படும் வஸ்துத்தொனி எனக் குறிப்பிடுவதைத் தமிழ் இலக்கணம் பொதுவில் 'குறிப்பு' எனக் கூறியதே தவிர வேறு பெயரிட்டுக் கூறவில்லை. பேராசிரி யரும் 'தொல்காப்பியர் கூறும் இறைச்சியாம்' என்னாமல் 'இறைச்சியுடன் ஒப்பிட்டு நோக்கலாம்' என்றதை நோக்கும் போது தொனியும் இறைச்சியும் ஒன்றாகா என்னும் கருத்து அவர்க்கும் உடன்பாடே எனக் கருதலாம். திங்கள் தெய்வம் என்ற கருப்பொருளாயினும்—அது முகத்தைக் குறிப்பதாயினும் அகத்திணைப் பொருள் தொடர்பில்லாதிருத்தலின் இறைச்சி யெனப்படாது. இதனாலும் இறைச்சி தனிப்பட்டது; சிறப்புடை யது என்பது பெறப்படும்.

* 3. ''ஒரு காதலி தன் காதலனைச் சோலைகள் சூழ்ந்த மக்கள் புழக்கம் இல்லாத ஒரு இடத்தில் சந்தித்து வந்தாள். அந்த இடத்திற்குத் தினந்தோறும் ஒரு துறவி வந்து தன் வழி பாட்டிற்கு வேண்டிய மலர்களையும் பத்திரங்களையும் பறித்துக் கொண்டு போனார். இச்செய்கையால் காதலனைச் சந்திப்பதற்கு இடையூறு ஏற்படுவதுடன் இலைகளும் மலர்களும் பறிக்கப் படுவதால் அவர்கள் சந்திக்கும் இடத்தின் அழகும் கெடுகிறது என்று அவள் கருதினாள். துறவியை 'வராதீர்' என்று சொல்லித்

---

* இந்திய எழிற்கலை, பக். 103

தடுப்பது உசிதமன்று. அவர் அந்த பக்கம் தலைகாட்டாமலும் இருக்க வேண்டும், அதற்கு ஒரு யுக்தி செய்தாள். அப்பகுதியில் ஒரு நாய் வசித்து வந்தது. துறவி அதனிடம் அஞ்சி அதன் கண்ணில் படாமல் மலர் பறித்துச் செல்வது வழக்கம். காதலி துறவியைப் பார்த்து 'ஐயா, இங்கே ஒரு நாய் இருந்ததல்லவா? நேற்றுதான் இக்கோதவரி நதிக்கரையிலுள்ள ஒரு புதரில் வாழும் கொடிய சிங்கம் வந்து அதைக் கொன்று போட்டுவிட்டது. இனிமேல் நீங்கள் கவலையில்லாமல் இப்பகுதியில் வந்து போகலாம்' என்றாள். நாயைக் கண்டே அஞ்சிய துறவி அந் நாயைக் கொன்ற கொடிய சிம்மம் அருகிலுள்ள புதரில் வாழ்வ தாகத் தெரிந்த பிறகு அந்த பக்கம் ஏன் தலை நீட்டப்போகிறார் இங்கே கவியின் கூற்றில் 'இப்பகுதியில் உலவுங்கள்' என்ற சொற் பொருள் வாச்சியமாகப் பெறப்பட்டாலும் சொல்லப்பட்ட சூழ் நிலையில் 'இப்பகுதிக்கு இனி வராதீர்' என்ற எதிர்மறையான த்வனிப் பொருளை எளிதில் பெறுகிறோம் அல்லவா?

மேலே கூறப்பட்ட கூற்றில் நாய், சிங்கம் என்னும் கருப் பொருள் காணப்பட்டாலும் அகத்திணைப் பொருள் இல்லை. அதனால் இதில் வந்த தொனியை இறைச்சி என்னலாகாது. இது களவொழுக்கம் மேற்கொள்ளும் தலைவி கூற்றாதலின் அகப் பாடலுக்கு ஏற்கும் எனக் கொள்ளலாமே எனின் களவொழுக் கத்தில் தலைவி, பெரும்பாலும் தோழியுடனும், சிறுபான்மை தலைவனுடனும் கூற்று நிகழ்த்துவது உண்டே தவிர அயலா னுடன் கூற்று நிகழ்த்துதல் இல்லை. துறவி அயலான். அதனால் அகப்பாடற் கருத்தாக மேலே கூறப்பட்டதைக் கொள்ள முடியாது. 'இப்பகுதிக்கு இனிவராதீர்' என்னும் குறிப்புப் பொருள் கருதலளவையால் (அநுமானத்தால்) பெறப்பட்டதே யன்றி இறைச்சியாற் பெறப்பட்டதன்று.

*அநுமானத்தாற் பெறப்படுவதைத் தொனி எனக் கொள்ள வேண்டுவதில்லை என்பது மகிமபட்டர் என்பவர் கொள்கை. அநுமானத்தாற் பெறப்படுவதும் தொனியாகும்; ஆனால் அநுமானமே தொனியாகாது என்பது ஆனந்தவர்த்தனர் கொள்கை.

எனவே கருதலளவையால் பெறப்படும் குறிப்பு (தொனி)ப் பொருள் 'குறிபபுப் பொருள்' என்ற அளவிலேயே அமைய இறைச்சி என்பது தனித்துச் சிறப்புறுகிறது.

இவ்வாறு பல உதாரணங்களைக் கொண்டு தொனி என்பதினும் உள்ளுறை இறைச்சி என்பன தனிச்சிறப்புடையன எனக் காணலாம்.

* இந்திய எழிற்கலை. (பக் 104)

**தொகுப்புரை**

தொனி என்பது ரசக் கொள்கை, அலங்காரக் கொள்கை போலத் தனிப்பட்டதொரு கொள்கையே. தொனியின் விரிவு அடங்காதது. அதில் ரசம், அலங்காரம் அடங்கும்.

சொற்றொடர்களால் உணர்த்தப்படும் வெளிப்படைப் பொருளிலிருந்து பெறப்படும் வேறு பொருளே தொனி என்பது. அத்தொனிப் பொருளை விளக்கின் ஒளி பொருளைக் காட்டுவது போல உணர்த்துவன சொற்றொடர்ப் பொருள்கள்.

உள்ளுறையும் இறைச்சியும் தொனியாகா, அகப்பொருட்கே யுரிமையும் கருப்பொருளடியாகப் பிறத்தலும் தொனிக்கு இல்லையாதலின்.

## 6. முடிப்புரை

மேலே கூறப்பட்ட உள்ளுறை இறைச்சி பற்றிய கருத்துகளின் தொகுப்புரைகள் ஆங்காங்கே கூறப்பட்டன; என்றாலும் உள்ளுறையுவமத்துக்கும் இறைச்சிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் சுருக்கமாக இங்கே கூறப்படும்.

**ஒற்றுமை**

இரண்டும் குறிப்பால் அறியப்படுவன
கருப்பொருளடியாகப் பிறப்பன.
அகப்பாடலுக்கே யுரியன.
புறப்பாடலுக்குரியன வல்ல. புறப்பாடலில் வருமாயின் உள்ளுறையுவம மென்றோ இறைச்சியென்றோ கூறப் படாமல் 'குறிப்புப் பொருள்' என்றே கூறப்படும்.

**வேற்றுமை**

உள்ளுறையுவமம்

பாடலில் வரும் கருப் பொருள் தொடர்பான சொற்றொடரின் பொருளும் அதனால் பெறப்படும் குறிப்புப் பொருளும் நேருக்கு நேர் உவமையும் பொருளுமாக ஒத்து அமையின் அது உள்ளுறையுவமமாகும். உதாரணம் ''வீங்குநீர் அவிழ்நீலம்'' (கலி. மருதம். 1) என்பது.

**இறைச்சி**

1. பாடலின் திணைப்பொருளுக்கு உபகாரமாக அமைவது. உதாரணம் 'பாஅ லஞ்செவி' (கலி. பாலை.5) என்பது.
2. உள்ளுறையுவமம் போல் கருப் பொருள் கருத்து வந்து முடிவில் உடன்பாடாக ஒத்து முடியாமல் எதிர் மறையில்

முடிவது. உதாரணம் 'கன்றுதன் பயமுலை' (குறுந். தொகை. 225) என்பது.

3. சொற்றொடர்ப் பொருள் மூலம் பெறப்படும் குறிப்புப் பொருள் மூலம் வேறும் ஒரு குறிப்புப் பொருள் பெறப் படுமாயின் அது இறைச்சியாம். உதாரணம் இலங்கும் அருவித்தே (கலி. குறிஞ்சி. 5) என்பது.

4. உவமையும் பொருளும் நேருக்கு நேர் ஒத்து முடிந்தாலும் தெய்வ நிகழ்ச்சி கூறப்படின் உள்ளுறையுவமமாகாது இறைச்சியாம். உதாரணம் 'கடவுட் கற்சுனை' (நற்றிணை, 34) என்பது.

மேலே குறிப்பிட்ட நான்கும் இறைச்சி பற்றியறிய உதவுவன. உள்ளுறையுவமமோ இறைசசியோ என்னும் ஐயம் எழும்போது, உவமமும் பொருளும் ஒத்து முடிந்தால் உள்ளுறையுவமம் என்றும், ஒத்து முடிந்தாலும் இறைச்சிக்குரிய இலக்கணங்களுள் ஒன்றாக அமையின் உள்ளுறையுவமமாக அமையாமல் இறைச்சி யாகும் என்றும் கொள்ளலாம்.

# துணை நூல்கள்


அருணாசலம், டாக்டர் ப., தொல்காப்பியர், தமிழ்ப் புத்தகாலயம், பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை 30(1975)

இரத்தினசபாபதி, டாக்டர் வை., திருமுறைத் தெளிவே சிவஞானபோதம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 5. (1981)

இராமநாதன் செட்டியார், லெ. ப. கரு., தொல்காப்பியச் செல்வம், முத்தையா நிலையம், 477 பூந்தமல்லி நெடுஞ் சாலை, வேப்பேரி, சென்னை 7. (1970)

குருசாமி, ம. ரா. போ., தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், நரேந்திரசிவம் பதிப்பகம், செந்தில், தாமுநகர், கோயமுத்தூர். (1980)

சீநிவாசன், டாக்டர் ரா., சங்க இலக்கியத்தில் உவமைகள், அணியகம், செல்லம்மாள் தெரு, சென்னை 30. (1973)

சுப்பிரமணிய சாஸ்திரி, டாக்டர் பி. சா., தொனிவிளக்கு, திருச்சிராப்பள்ளியுனைட்டட் பிரிண்டர்ஸ் திருச்சி(1944)

சுப்பிரமணிய பிள்ளை, கா., பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், பிராட்வே, சென்னை (1968)

சுப்பையாபிள்ளை, ந., தஞ்சைவாணன் கோவைமூலமும் குன்றத்தூர் அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் உரையும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியீடு, இரண்டாம் பதிப்பு (1956)

தண்டாயுதம், டாக்டர் இரா., சங்க இலக்கியம் (எட்டுத் தொகை) தமிழ்ப்புத்தகாலயம், பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை (1978)

திருஞானசம்பந்தம் பிள்ளை பெ., இந்திய எழிற்கலை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை (1977)

நாராயணசாமி அய்யர், அ., பின்னத்தூர், நற்றிணையுரை.


## கட்டுரைகள்


இளவரசு-சோம., இலக்கணச் சிந்தனைகள்—இறைச்சி. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் (1975)

குமாரசாமி ஆச்சாரியார், சு., உள்ளுறையுவமமும் இறைச்சியும், செந்தமிழ், தொகுதி 48 (1952)

சுப்பிரமணியன், டாக்டர் ச. வே. (பதிப்பு), திறனாய்வுக் கட்டுரைகள்—குறுந்தொகையில் உள்ளுறை. அணியகம் 22 செல்லம்மாள் தெரு, சென்னை 30 (1977)

சிவலிங்கனார், ஆ., உள்ளுறையும் இறைச்சியும், செந்தமிழ், தொகுதி 60 (1964)

சிவலிங்கனார், ஆ., உள்ளுறை, Papers on Tamil studies, ச. வே. சுப்பிரமணியன், வி. முருகன் (பதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113 (1980)

சோமசுந்தரம், பொ. வே., ஐங்குறுநூறு உரை, அணிந்துரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே சென்னை (1966)

துரைசாமிப்பிள்ளை, ஒளவை சு., ஐங்குறுநூறு உரை, முன்னுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம, அண்ணாமலை நகர் (1957)

விசுவநாதசாஸ்திரி, கே. எஸ்., உள்ளுறையும் இறைச்சியும் செந்தமிழ், தொகுதி 50 (1954)

வேங்கடராசுலுரெட்டியார், வே., இறைச்சிப் பொருள், கரந்தைக் கட்டுரை, கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தட்டாங்குடி, தஞ்சாவூர் (1938)

*சங்க இலக்கியத்தில் உள்ளுறையும் இறைச்சியும் வந்த பாடல்களின் எண்கள்

## உள்ளுறை

### அகநானூறு

#### குறிஞ்சி

*தோழிகூற்று*

2:1-9; 12:7-13; 52:1-8; 88:10-15; 108:12-15; 112:1-4; 132: 9-14; 148:1-6; 172:1-5; 178:1-13; 182:1-8, 14-17; 188:1-8; 202: 1-8; 228:1-6; 232:1-5; 242:1-4; 248:2-10; 308:1-6; 382:9-13.

---

* இரா. தமிழரசி எம். ஏ., எம். பில். அவர்கள், தமது பி.எச்.டி. பட்டத்திற்காக 1982 பிப்ரவரியில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த ஆய்வேட்டிலிருந்து குறிக்கப்பட்டது. (பக். 17-81) அவர்க்கு நன்றி.

*தலைவி கூற்று*

8:1-12; 102:1-9; 348:2-13.

**நெய்தல்**

*தோழிகூற்று*

30:1-11; 60:1-7; 80:7-10; 90:1-3; 160:3-8; 210:1-6; 270:1-4.

*தலைவிகூற்று*

40:12-16; 170:1-7;

*தலைவன் கூற்று*

130:5-11

**மருதம்**

*தோழிகூற்று*

96:1-8; 156:1-7; 176:1-12; 226:3-8; 306:1-8; 316:1-7,

*தலைவி கூற்று*

6:15-20; 16:1-3; 36:1-5; 36:1-7; 56:1-8; 146:1-5; 196:1-7; 206:1-6.

**பாலை**

*தோழிகூற்று*

10:9-13; 81:1-5; 107:5-12; 143:5-8; 159:5-11; 171:8-15 179:1-6; 221:10-14.

*தலைவி கூற்று*

95:3-10; 119:8-10; 175:1-6; 247:1-7

## ஐங்குறுநூறு

### குறிஞ்சி

*தோழிகூற்று*

208:2-3; 212:1-2; 216:1-4; 217:1-3; 218:3-8; 220:1-2; 233: 2-4; 238:1-3; 239:1-3; 246:2-8; 249:3-4; 252:1-2; 254:1-2; 261: 1-2; 264:1-3; 266:1-2; 267:1-3; 268:1-4; 269:1-2; 270:1-3; 273:1-3; 275:1-3; 276:1-3; 277:1-3; 279:1-3; 280:1-3; 281:1-3; 283:1-3; 284:1-4; 285:1-3; 286:1-3; 287:1-2; 294:1-2; 295:3-6; 296:1-2; 297:1-2; 300:1-2,

*தலைவி கூற்று*

213:1-3; 215:1-5; 253:1-3; 262:1-3; 263:1-3; 265:1.3; 272: 1-3; 278:1-3;

தலைவன் கூற்று

291:1,2; 298:1-2.

நெய்தல்

தோழிகூற்று

101:1-3; 103:1-2; 106:1-2; 109:1-2; 143:1; 145:1-2; 146,1-2; 147:1-2; 148:1-2; 153:1-4; 156:1-4; 158:1-4; 159:1-3; 166:1-3; 168:1-3; 177:1-3; 179:1-3: 180:1-3; 186:1-2; 189:1-3; 190:1-3; 193:1-3; 196:1-4;

தலைவி கூற்று

111:1-3; 112:1-2; 113:1-3; 114:1-4; 117:1-4; 141:1-3; 142:1-2; 144:1-2; 151:1-4; 152:1-4; 154:1-4; 155:1-4; 157:1-4; 160:1-3; 161:1-2; 162:1-4; 163:1-3; 164:1-3; 165:1-2; 167:1-2; 169:1-3; 170:1-2: 181:1-4; 184:1-3; 192:1-3;

தலைவன் கூற்று

171:1-3; 195:1-2.

மருதம்

தோழிகூற்று

1:4-5; 2:4-5; 3:4-5; 4:4-5; 5:4-5; 6:4-5; 7:4-5; 8:4-5; 9:4-5 10:4-5; 16:1-3; 21:1-3; 24:1-2; 25:1-3; 26:1-2; 27:1-2; 28:1-2; 29:1-3; 51:1-2; 53:1-4; 54:1-3; 55:1-2; 56:1-2; 57:1-2; 58:1-2; 60:1-2; 91:1-3; 93:1-3; 98:1-2; 100:1-3.

தலைவி கூற்று

11:1-2; 12:1-2; 13:1-3; 14:1-3; 15:1-3; 17:1-2; 18:1-2; 19:1-4; 20:1-4; 22:1-2; 23:1-2; 41:1-2; 47:1-3; 48:1-3; 49:1-3; 61:1-3; 62:1-3; 63:1-2; 65:1-2; 68:1-2; 70:1-3; 85:1-3; 95:1-3.

தலைவன் கூற்று

92:1-3; 97:1-3; 99:1-3;

பரத்தை கூற்று

40:2-5; 81:1-3; 86:1-2, 87:1-3; 88:1-2; 89:1-3;

பாலை

தோழிகூற்று

303:1-3; 304:1-3; 305:1-2; 307:1-2;

தலைவி கூற்று

311:1-3; 320:1-4; 339:1-3; 351:1-3; 370:1-2; 397:1-3;

தலைவன் கூற்று

323:1-3; 325:1-3;

தாய்கூற்று

373:2-4; 378:1-2; 400:1-3;

முல்லை

தோழிகூற்று

461:1-2; 469:1-2; 499:1-2;

தலைவிகூற்று

454:1-2; 456:1-5;

பிறர்கூற்று

421:1-3;

கலித்தொகை

குறிஞ்சி

தோழிகூற்று

38:1-9; 39:7-10; 40:11-14, 15-18, 26-29; 41:8-16; 43:8-11; 12-15, 16-19, 24-27; 44:1-7; 45:1-7, 8-9, 12-13; 46:1:9; 48:1-7. 49:1-9; 50:1-5; 52:1-6; 53:1-7;

தலைவி கூற்று

42:1-4;

நெய்தல்

தோழிகூற்று

121:1-6; 124:1-4; 126:1-5; 127:1-5; 132:1-7; 133:1-5; 135: 1-5; 136:1-4; 149:1-3;

தலைவி கூற்று

118:1-8; 119:1-3;

மருதம்

தோழிகூற்று

70:1-6;

தலைவி கூற்று

66:1-8; 73:1-5; 75:1-9; 77:1-7; 79:1-6;

காமக்கிழத்தி கூற்று

69:1-7; 71:1-8; 72:1-8; 74:1-5; 78:1-10.

பாலை

தோழிகூற்று

7:1-3; 13:1-4; 25:1-12; 29:1-9;34:1-7;

தலைவி கூற்று

20:1-3; 23:1-3;

பாணன்கூற்று

30:1-4;

## குறுந்தொகை

தோழிகூற்று

9:4-7; 10:2-4; 26:1-3; 34:4-7; 42:1-3; 51:1-3; 53:1-5;74:1-2; 83:3-5; 90:1-6; 109:1-2; 111:1-5; 115:3-6; 117:1-6; 127:1-3; 139; 1-6; 166:1-2; 177:3-7; 214:1-7; 225:1-2;232:3-6;238:1-4,247:4-6: 248:3-6; 259:1-3; 265:1-5; 282:1-4; 284:1-3, 6-8; 287:3-8; 303:1-3; 317:1-4; 328:1-4; 332:4-6; 333:1-4; 335:1-5; 338:1-6; 339:1-3; 342:1-4; 346:1-3; 351:2-4; 357:5-8; 363:1-5, 365:3-6; 369::1-3; 373:4-5; 379:2-3; 381:4-6;

தலைவி கூற்று

3:3-4; 5:2-4; 36:1-2; 38:1-3; 49:1-2; 50:1-3; 51:2-5; 68:1-3; 82:3-6; 85:2-6; 91:1-3; 104:1-4; 105:1-5; 106:1-2; 125:4-7; 134: 3-7; 150:1-3; 170:2-4; 174:1-4; 175:1-4; 181:3-5; 185:5-7; 187: 1-3; 192:3-5; 193:1-3; 201:2-7; 208:2-4; 220:1-6; 226:5-7; 236: 3-6; 239:2-6; 241:3-7; 243:1-4; 249:1-3; 257:1-4; 261:1-2, 3-5: 271:1-2; 288:1-2; 293:1-4; 296:2-5; 304:1-7; 306:4-6; 313:1-3; 316:1-3; 318:1-3; 319:1-4; 329:1-4; 349:1-3; 352:1-6; 360:5-8; 371:2-3; 385:1-5;

தலைவன் கூற்று

100:1-5; 236:2-5; 300:6-7;

பரத்தை கூற்று

8:1-2; 164:1-3, 364:1-2; 370:1-2;

செவிலி கூற்று

242:1-3;

பாங்கன் கூற்று

78:1-3.

## நற்றிணை

### குறிஞ்சி

தோழிகூற்று

5:3-6; 13:7-9: 22:1-7; 25:1-5; 34:1-5; 36:1-4; 47:1-6; 57:1-7; 65:2-9; 85:4-6, 8-11; 98:1-7; 108:1-5; 112:1-5; 119:1-3, 5, 6-8;

125:4-9; 151:2-4, 6-12; 158:6-9; 165:1-5; 168:1-6; 188:1-5; 194:3-8; 222:7-10; 228:6-9; 232:1-6; 233:1-4; 247:1-5; 257:5-7; 273:6-9; 282:7-9; 285:3-8; 288:1-4; 292:1-4; 294:7-9; 297:7-8; 317:1-5; 322:4-7; 326:3-4; 328:1-3, 8-11; 334:1-5; 336:1-6, 8-11; 344:9-12; 359:1-3; 373:1-4; 379:1-9; 386:1-5; 389:7-10; 393:1-7; 396:1-7; 399:1-4;

*தலைவி கூற்று*

51:8-11; 61:7-9; 87:5-6; 104:1-7; 116:3-6; 144:1-6; 217:1-5; 244:1-5; 304:1-4; 309:4-6; 347:1-7; 357:4-10;

*தலைவன் கூற்று*

6:7-9; 44:8-12; 77:4-6; 82:7-11; 95:1-6; 185:4-6; 192:1-5; 209:1-5; 356:1-4;

**நெய்தல்**

*தோழிகூற்று*

4:1-4, 7-12; 15:1-3; 19:1-5; 27:8-9; 35:1-7; 49:8-10; 63:8-11; 78,1-5; 91:2-8; 127:1-2; 131:5-7; 135;5-9; 138:1-5, 9-11; 145:1-4; 163:8-12; 167:1-5, 8-9; 175:1-5; 178:1-6; 191:1-5; 193:1-4,5; 203:1-6; 211:4-9; 219:6-9; 235:2-4; 239:2-8; 258:5-10; 267:1-5; 278:1-5; 283:1-3; 291:1-5; 331:4-8; 323:7-9; 345:1-5; 354:2-7; 368:8-10; 372:1-5; 375:1-3; 395:6-9;

*தலைவி கூற்று*

31:10-12; 54:8-11; 74:1-5, 7-9; 87:6-8; 94:5-6; 199:6-10; 249:5-7; 272:1-6; 275:1-6; 303:9-12; 388:3-6

*தலைவன் கூற்று*

101:1-5; 192:1-5;

*பரத்தை கூற்று*

315:1-8;

**மருதம்**

*தோழிகூற்று*

180:1-3; 210:1-4; 230:1-5; 310:1-4; 330:1-6;

*தலைவி கூற்று*

260:1-4; 280:1-4, 6-8; 340:4-9; 350:1-4; 390:1-3;

*பரத்தை கூற்று*

290:1-3; 300:3-4; 400:1-4;

பாலை

தோழிகூற்று

7:4-9; 33:6-7; 41:1-4; 43:1-5; 115:5-7; 148:5-11; 164:6-10; 171:1-5; 189:7-10, 205:1-5; 212:1-4; 252:1-2; 318:5-9; 326:1-6; 329:2-8; 391:4-6;

தலைவி கூற்று

16:7-10; 24:1-5; 73:1-3; 79:1-4; 84:5-9; 107:1-6; 174:1-4; 343:1-7;

தலைவன் கூற்று

3:1-5; 105:1-6; 113:1-3; 126:1-3; 162:9-11; 202:3-7; 240:6-10 312:2-5; 352:2-9; 366:7-11;

தாய்கூற்று

29:1-5; 66:1-5; 279:1-8

முல்லை

தோழிகூற்று

181:1-9; 266:1-4; 367:1-6;

தலைவன் கூற்று

21:4-12; 42:1-4; 54:1-6; 142:3-8; 169:6-10;

பாகன்கூற்று

121:1-5.

## இறைச்சி

அகநானூறு

4:10-13; 23:6-9; 59:7-9; 72:11-16; 91:3-7; 98:5; 129:6-9; 133:16-18; 134:12-14; 147:5-8; 184:8-10; 168:3; 173:11-13; 197:13-15; 201:16-19; 206:21-24; 271:1-6; 277:5-8; 284:1-7; 304:8-10; 307:14-15; 357:3-7; 371:3-9.

ஐங்குறுநூறு

5:1-3; 94:1-3; 141:1-3; 198:1-3; 208:3-5; 276:5-6; 301:1-3; 321:1-3; 326:1-4; 327:1-3; 354:1-3; 423:1-2; 425:1-2; 464:1-3; 484:1-2;

கலித்தொகை

3:8-9, 12-13, 16-17; 8:1-6; 11:8-9, 12-13, 19-17; 27:1-8; 28:8-9, 1-17; 35:1-7; 41:18-20, 25-27; 32-34: 42:10-12, 16-19, 22-24; 131:35-40.

குறுந்தொகை

9:6-9; 13:1-3; 10:4-5; 37:2-4; 46:1-6; 65:1-3; 69:1-5; 79:4-6; 92:1-5; 151:1-4; 154:1-7; 160:1-6; 180:1-5; 184:1-4; 213:1-6; 215:4-7; 250:1-3; 255:1-5; 260:5-6; 278:5-8; 282:4-8; 307:4-9; 319:1-5 344:3-6; 365:1-6;

நற்றிணை

17:9-12; 31:1-5; 88:8-9; 92:5-9; 93:1-5; 102:5-6; 103:3-9; 117:1-6; 118:1-6; 123:10-12; 137:5-10; 173:5-7; 186:1-4; 197:8-12; 218:3-8; 231:1-6; 242:1-10; 256:8-11; 268:1-6; 274:1-5; 286:1-3; 314:10-12; 319:4-6; 332:5-7; 338:10-12; 365:6-8; 383:3-5; 384:1-6;

பரிபாடல்

10:41-55.

# பெயர் அகராதி

(எண்—பக்கஎண்)

அட்டாவதானம் சொக்கப்ப நாவலர் 31
அடி 15
அண்ணாமலை நகர் 56
அருணாசலம், டாக்டர் ப. 18
அன்மொழி 2
ஆகுபெயர் 2
ஆயிர மக்கள் 2
ஆழ்வார் பன்னிருவர் 3
இயற்பழித்தல் 48
இயற்படமொழிதல 48
இரத்தினசபாபதி, டாக்டர் வை. 5
இராமநாதன் செட்டியார், லெ. ப. கரு. 52
இலக்கணச் சித்தனைகள் 56
ஊர் 38
எதிரொலியாக வருவதே இறைச்சி 54
ஏனல் 16, 17
ஐங்குறுநூறு 57
ஒட்டணி 14
ஒன்றொழிபொதுச்சொல் 24
கடல் 45, 46
கடுவன் 31 32
கரந்தைக்கட்டுரை 52
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 52
கருங்கோட்டு மலர்ப்புன்னை 45
கருங்கோற்குறிஞ்சி 38
கருப்புவில் 2
களவன் 20
காமநோய் 19
காவி 12 13
காளை 31 32
கிளவித்தலைவன் 7
குமரி 31 32
குமாரசாமி ஆச்சாரி, சு. 59
குருசாமி, ம. ரா. போ. 33
குறிஞ்சிக்கலிப்பா 21
சங்க இலக்கியத்தில் உவமைகள் 56
சங்க இலக்கியம் (எட்டுத்தொகை) 58
சாமிநாதஅய்யர், உ. வே. 17 19 20 23 39 41
சீனிவாசன், ரா. 56
சுந்தரமூர்த்தி, இ. 57
சுப்பிரமணிய பிள்ளை, ந. 51
சுப்பிரமணியன், ச. வே. 66
சுப்பையாபிள்ளை, ந, 51
சைவசமயகுரவர்நால்வர் 3

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 50 59
சொல்லும் பொருளும் 1
சோமசுந்தரனார், பொ. வே. 59
தஞ்சைவாணன் கோவை 51
தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள் 33 53 54
தமிழ்ப்புத்தகாலயம் 18 58
திருக்குறள் அணிநலம் 51
திருஞானசம்பந்தம்பிள்ளை, பொ. 34
திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்
துரைசாமிப் பிள்ளை, ஔவை சு. 56
தொடி 15
தொல்காப்பியச் செல்வம் 62
தோள் 15
நம்பியகப் பொருள் விளக்கம் 49.
நாடு 38
நாராயணசாமி அய்யர், பின்னத்தூர், அ. 61 64 65
நீலம் 13 14
நுண்மொழில் மாமை 26
புதுவை அழகியநகர் 1
புறநானூற்றுப்பழைய உரையாசிரியர் 7
பவணந்தியார் 1
பழந்தமிழர் நாகரிகம் 50
பாட்டுடைத்தலைவன் 7
பாரிமகளிர் 9
புன் கண் மாலை 28
புன்னை 10 11 21 23
பெருங்கை வேழம் 17
பொற்றொடி 2
பொன்னன் 2
மடத்தகை மாமயில் 8
மனையுறை குருவி 28
மாறனலங்காரம் 50
மீனாட்சி சுந்தரனார், தெ. பொ. 53
மீளி 31, 32
மூலன் 31, 32
யாஅ 17
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை 51
வண்டு 12, 13, 45, 46
வாழ்வேலி 19
விச்சிக்கோன் 19
விடலை 31, 32
விகாரம் 2
விரிகதிர்மண்டலம் 24
விழா 2
விளையாட்டாயம் 10
வீறு பெற்றுமறந்த மன்னன் 41
வேங்கை 42, 43



# ஆசிரியரைப் பற்றி

□ ● □

தென்னார்க்காடு மாவட்டம் திருப்பாதிரிப்புலியூரை யடுத்த புதுவண்டிப்பாளயம் என்னும் ஊரில் 30. 11. 1922 இல் பிறந்தவர். பெற்றோர் ஆறுமுகமுதலியார் - பொன்னம்மாள். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தின் ஐந்தாம் பட்டத்து ஞானியாரடிகள் மாணவர். திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1940 இல் வித்துவான் பட்டம் பெற்றவர்.

திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூரில் ஓராண்டு (1941 - 1942) தமிழாசிரியராகவும், 1942 முதல் 1971 வரை மயிலம், சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராக, பேராசிரியராக, முதல்வராகவும் பணி யாற்றியவர். 1972 - 73 இல் மோகனூர், சுப்பிரமணியம் தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்தவர்.

10 - 9 - 1979 முதல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பிய உரைவள வெளியீட்டுத் திட்டப்பணியில் இருந்து வருபவர். நிறுவனத்தின் மூலம் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைவளம் முதலாகத் தொல்காப்பியச் சொல்லதிகார வினை யியல் உரைவளம் வரை 16 நூல்கள் பதிப்பித்தவர். மேலும் உரை வள நூல்கள் பதிப்பிக்க இருப்பவர்.

இவர் இயற்றிய நூல்கள் அகத்தியர்கள், கட்டுரைப் பூங்கா, பாரியைக் கொன்றவர் யார், பெரியபுராணப் பெண்மணிகள், சிலம்புமணிகள், வள்ளுவரைப் பற்றி, சிவஞான போதச் சொற்பொழிவு, தமிழ்த்தாய் திருப்பள்ளியெழுச்சி, மயிலம் கார்த்திகைக்கதம்பம் என்பன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில் முதலிய திங்கள் இதழ்களில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர்.

சென்னைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் நடத்திய பல கருத்தரங்குகளில் இலக்கணக் கட்டுரைகள் படித்தவர்.